ததும்பும் தமிழ்ப் பெருமிதம்

மாண்புமிகு மு.க.ஸ்டாலின்

தமிழ்நாடு முதலமைச்சர்

ததும்பும்
தமிழ்ப்
பெருமிதம்

ததும்பும் தமிழ்ப் பெருமிதம்

மாண்புமிகு மு.க.ஸ்டாலின்

தமிழ்நாடு முதலமைச்சர்

ததும்பும் தமிழ்ப் பெருமிதம்

மாண்புமிகு மு.க.ஸ்டாலின்
தமிழ்நாடு முதலமைச்சர்

முதல் பதிப்பு: பிப்ரவரி 2026

பக்கங்கள்: 160

வெளியிடுபவர்:
மரு.இரா. வைத்திநாதன், இ.ஆ.ப., இயக்குநர்

தொகுப்பு:
ப. திருமாவேலன்
பொ. தங்கப்பாண்டியன்

வடிவமைப்பு:
டி. ராஜரத்தினம்

அச்சிட்டோர்:
ஜோதி எண்டர்பிரைசஸ்

வெளியீடு:
'தமிழரசு'
செய்தி மக்கள் தொடர்புத் துறை
எண்- 5 இராஜீவ்காந்தி சாலை, கானகம், தரமணி, சென்னை- 600 113.
தொலைபேசி: 044- 22542224/22542221 www.tndipr.gov.in

“

இந்தியத்
துணைக்
கண்டத்தின்
வரலாறு,
இனி,
தமிழ்
நிலப்பரப்பில்
இருந்துதான்
தொடங்கி
எழுதப்பட
வேண்டும்.

”

“ நிலத்திலும், நீரிலும், இலக்கியத்திலும் ஆய்ந்து, இந்திய துணைக்கண்டத்தின் வரலாறு தமிழ் நிலத்தில் இருந்து தொடங்கித்தான்

எழுதப்பட வேண்டும் என்பதை உறுதி செய்து வருகிறது **நமது திராவிட மாடல் அரசு.** ”

முன்னுரை

இந்தியத் துணைக் கண்டத்தின் வரலாறு, இனி, தமிழ் நிலப்பரப்பில் இருந்துதான் தொடங்கி எழுதப்பட வேண்டும்.

தமிழ்நாடு சட்டமன்றத்தில் விதி 110 இன் கீழ் 9.9.2021 அன்று நான் தாக்கல் செய்த அறிக்கை:

‘வீழ்வது நாமாக இருந்தாலும், வாழ்வது தமிழாக இருக்கட்டும்’ என்ற உணர்வை நமக்கெல்லாம் ஏற்படுத்திய தமிழினத் தலைவர் கலைஞர் போற்றிய செம்மொழியாம் தமிழ்மொழியின் பெருமையை, உலகத்துக்கு நாகரிகத்தையும், பண்பாட்டையும் கற்றுக்கொடுக்க பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே வலம் வந்த தமிழினத்தின் சிறப்பைப் பறைசாற்றும் அறிவிப்பு ஒன்றை, விதி எண் 110-ன்கீழ் இந்த மாமன்றத்தில் தங்களுடைய அனுமதியோடு பெருமையாக நான் வெளியிடுகிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகம் எப்போதெல்லாம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றதோ; அப்போதெல்லாம் அது தமிழின் ஆட்சியாக; தமிழினத்தின் ஆட்சியாகத்தான் இருந்துள்ளது.

தமிழ் மாநிலத்துக்குத் ‘தமிழ்நாடு’ என்று பெயர் சூட்டியது;

நூற்றாண்டுக் கனவான செம்மொழித் தகுதியைத் தமிழுக்குப் பெற்றுத் தந்தது;

‘மெட்ராஸ் என்ற பெயரை ‘சென்னை’ என மாற்றியது;

தமிழ், ஆங்கிலம் என்ற இருமொழிக் கொள்கையை நிறைவேற்றியது

ஸ்ரீ ஸ்ரீமதி என்ற சொற்களுக்கு மாற்றாக திரு. திருமதி ஆகிய சொற்களைச் சட்டப்பூர்வமாக ஆக்கியது; தலைநகரில் வள்ளுவர் கோட்டமும், குமரிமுனையில் 133 அடியில் வள்ளுவர் சிலையும் அமைத்தது. திரும்பிய பக்கமெல்லாம் திருக்குறளைத் தீட்டியது:

‘தமிழ் வாழ்க’ என எழுத வைத்தது;

சிலம்பின் பெருமையைக் காட்டும் பூம்புகார் கோட்டம் அமைத்தது;

தமிழில் வழிபாடு செய்யும் உரிமையை வழங்கியது:

ஆட்சிமொழியாய்த் தமிழை முழுமைப்படுத்தியது;

தமிழ்நாடு பாடநூல் நிறுவனம்மூலம் அனைத்துப் பாடங்களையும் தமிழில் மொழிபெயர்த்து ஆயிரத்துக்கும் மேற்பட்ட பாடப் புத்தகங்களை வெளியிட்டது;

தமிழைக் கணினிமொழி ஆக்கியது;

பிற பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு இணையானவர்களாகத் தமிழாசிரியர்களை ஆக்கியது; தமிழாசிரியர்களும் தலைமையாசியர் ஆகலாம் என உயர்த்தியது;

உலகம் முழுவதும் தமிழைப் பரப்பியது;

உலகத் தமிழ் மாநாட்டை நடத்தியது;

உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டை நடத்தியது;

தமிழறிஞர் நூல்களை எல்லாம் நாட்டுடைமை ஆக்கியதும், அவர்களது குடும்பத்துக்கு இலட்சக்கணக்கில் நிதி உதவி செய்ததும் என, ‘தமிழ் அரசை’ நடத்தியதுதான் திராவிட முன்னேற்றக் கழக அரசு.

மாமன்னர்கள் பலர் இந்தியாவைத் தங்கள் குடையின்கீழ் கொண்டு வந்து ஆண்டபோதும், தனிக்குடையின்கீழ் ஆளுகை செலுத்திய மண் இந்தத் தமிழ் மண். பண்டைய நாகரிகம் கொண்டது தமிழ் மண் என்பதற்குச் சான்றுகள் பல உள்ளன. இவையெல்லாம் ஏதோ சில இலக்கிய ஆதாரங்களை வைத்து மட்டும் நான் சொல்லவில்லை. அசைக்க முடியாத தொல்லியல் சான்றுகள் இருக்கின்றன. இவை அனைத்தும் யாராலும் மறுக்கவோ, மறைக்கவோ முடியாத சான்றுகள் ஆகும்.

முதலமைச்சராக இருந்த தலைவர் கலைஞர் அவர்கள், தனது ஆட்சிக் காலத்தில் தொல்லியல்-ஆழ்கடல் கள

ஆய்வை விரிவாக மேற்கொள்ளப் பெருமுயற்சி எடுத்தார். கடந்த *1990* ஆம் ஆண்டு கடல்சார் ஆய்வுக்குப் பெருந்திட்டம் தீட்டியதும், பின்னர் கடலில் மூழ்கிய பூம்புகார் நகரத்தினைக் கண்டறிய மேற்கொள்ளப்பட்ட ஆழ்கடல் அகழாய்வில் சில கட்டுமானப் பகுதிகள் கண்டறியப்பட்டதும் முத்தமிழறிஞர் கலைஞருடைய பெருமுயற்சியால்தான் என்பதை அனைவரும் நன்றாக அறிவோம்.

அந்த வரிசையில் சிவகங்கை மாவட்டம், கீழடியில் தற்போது நடைபெற்றுவரும் அகழ்வாராய்ச்சி உலக அரங்கில் அனைவரது கவனத்தையும் ஈர்த்திருக்கிறது. தமிழரின் பண்பாட்டு அடையாளங்களை அள்ளிக் கொடுக்கும் கீழடியில் நடைபெற்று வந்த அகழ்வாராய்ச்சியை ஒன்றிய அரசு பாதியிலேயே கைவிட்டபோது, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் அதற்கு எதிராக, தனது கடுமையான கண்டனத்தைப் பதிவுசெய்தார்.

நானும் கடந்த *2019* ஆம் ஆண்டு, கீழடிக்கு நேரடியாகச் சென்று, அங்கு நடைபெற்றுக் கொண்டிருந்த அகழாய்வுப் பணிகளைப் பார்வையிட்டேன். வியக்கவைக்கும் செங்கல் கட்டுமானங்கள், கருப்பு மற்றும் சிவப்பு வண்ணம் தாங்கிய பானை ஓடுகள், அரிய கலை மணிகள், தங்க அணிகலன்கள், சிந்துவெளி நாகரிகக் காலத்தில் காணப்பட்ட அதே நிலையில் கொண்ட காளையின் எலும்புகள், விளையாட்டுப் பொருட்கள், தொழிற்பகுதிகள் என ஒரு செழுமைமிக்கச் சமூகமாக சங்ககாலத் தமிழர்கள் வாழ்ந்திருக்கிறார்கள் என்பதை நாம் மட்டுமல்ல: உலகமே அறிந்து கொண்டது.

அதுமட்டுமல்ல; கரிமப் பகுப்பாய்வு (*Carbon Dating* முடிவுகளின்படி, கி.மு. ஆறாம் நூற்றாண்டிலேயே எழுத்தறிவு பெற்ற சமூகமாகச் சங்ககாலத் தமிழர்கள் விளங்கினர் என்பதும் உறுதியானதை இம்மாமன்ற உறுப்பினர்கள் நன்கு அறிவீர்கள்.

அந்தவகையில், ‘கீழடி’ என்ற ஒற்றைச் சொல் உலகத் தமிழர்களை ஒன்றிணைத்தது என்றே சொல்ல சொல்லவேண்டும். அதே உணர்வைத் தாங்கி தமிழ்நாடு அரசின் தொல்லியல் துறை கீழடி, ஆதிச்சநல்லூர், சிவகளை, கொற்கை, கொடுமணல், மயிலாடும்பாறை, கங்கைகொண்டசோழபுரம் ஆகிய இடங்களில் தற்போது அகழாய்வுப் பணிகளை மேற்கொண்டு வருகிறது. அப்போது கிடைத்த பல்வேறு பழமைவாய்ந்த பொருட்கள் குறித்து, அகில இந்திய அளவில் புகழ்பெற்ற தொல்லியல் ஆய்வாளர்கள் மற்றும் தொழில்நுட்ப வல்லுநர்களை தமிழ்நாடு தொல்லியல் துறை கலந்தாலோசித்தது. அதன்படி, கீழ்க்கண்ட முக்கிய முடிவுகளை வெளியிடுவதில் நான் பெருமிதம் கொள்கிறேன்:

கீழடியில் சூரியன், நிலவு மற்றும் வடிவியல் குறியீடுகள் கொண்ட முத்திரைகளுடன்கூடிய வெள்ளிக் காசு ஒன்று கண்டெடுக்கப்பட்டது. அதை ஆய்வுசெய்த தலைசிறந்த நாணயவியல் அறிஞரும், கொல்கத்தா பல்கலைக்கழகப் பேராசிரியருமான சுஷ்மிதா பாக மகத்தார், இந்த வெள்ளிமுத்திரைக் காசு, கி.மு. நான்காம் நூற்றாண்டுக்கு, அதாவது, மௌரியப் பேரரசர் அசோகர் காலத்திற்கும் முற்பட்டது என்று பகுத்துத் தெரிவித்திருக்கிறார்கள்.

ஏற்கெனவே, கரிமப் பகுப்பாய்வு முடிவுகளின்படி, கீழடியில் கி.மு. கண்டெடுக்கப்பட்ட தமிழ் எழுத்துக்களின் காலம், ஆறாம் நூற்றாண்டு என்று அறிவிக்கப்பட்ட நிலையில், அதை வலுப்படுத்தும் விதமாக தற்போது பெறப்பட்ட இரண்டு கரிம மாதிரிகளின் பகுப்பாய்வு முடிவுகளிலும், கீழடி நாகரிகம் கி.மு. ஆறாம் நூற்றாண்டைச் சார்ந்தது எனத் தெரியவந்துள்ளது என்ற செய்தியை நான் பெருமையோடு இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முந்தைய அகழாய்வுகளில் கிடைக்கப்பெற்ற கரிமப் பகுப்பாய்வுகளின் காலக் கணக்கீட்டு முடிவுகளின்படி, கி.மு. எட்டாம் நூற்றாண்டிற்கு முன்பாகவே, கொற்கை ஒரு துறைமுகமாகச் செயல்பட்டு வந்தது என்பது ஏற்கெனவே உறுதி செய்யப்பட்டுள்ளது. தற்போது கொற்கையில் நடைபெற்று வரும் அகழாய்வில் கருப்பு வண்ணப்பூச்சு பெற்ற கங்கைச் சமரியைச் சார்ந்த பானை ஓடுகள் கிடைத்துள்ளன. இவற்றைக் கவனமாக ஆய்வுசெய்த இந்தியத் தொல்லியல் துறையின் முன்னாள் தலைமை இயக்குநர் முனைவர் ராகேஷ் திவாரி மற்றும் பனாரஸ் இந்து பல்கலைக்கழகப் பேராசிரியர் ரவீந்திரநாத் சிங் ஆகியோர். கொற்கைத் துறைமுகமானது கி.மு. ஆறாம் நூற்றாண்டுக்கு முன்னரே வெளிநாடுகளுடனும், இந்தியாவின் பல்வேறு பகுதிகளுடனும் வணிகத் தொடர்பு கொண்டிருந்தது என்பதை உறுதிப்படுத்தியிருக்கிறார்கள்.

இவற்றுக்கெல்லாம் மகுடம் சூட்டும் வகையில், ஒரு ஒரு முக்கிய ஆய்வு முடிவை இங்கு நான் வெளியிட விரும்புகிறேன்.

தமிழ்நாடு தொல்லியல் துறையால் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் அகழாய்வின்போது ஆதிச்சநல்லூருக்கு அருகே, சிவகளைப் பறம்புப் பகுதியில் வெளிப்பட்ட முதுமக்கள் தாழி ஒன்றில் கண்டெடுக்கப்பட்ட நெல்மணிகள் அமெரிக்க நாட்டின் மியாமி நகரத்தில் அமைத்திருக்கும் உலகப்புகழ் பெற்ற *Beta Analytical Laboratory*-க்குப் பரிசோதனைக்காக அனுப்பப்பட்டன. அதன் ஆய்வு முடிவுகள் சமீபத்தில் கிடைத்துள்ளன. *AMS Carbon Dating* முறையில் ஆய்வு செய்ததில் முதுமக்கள் தாழியில் கண்டெடுக்கப்பட்ட மணிகளின் காலம் கி.மு. 11.55 எனக் கண்டறியப்பட்டுள்ளது எனவே, ‘தண்பொருநை என்று அழைக்கப்பட்ட தாமிரபரணி ஆற்றங்கரை நாகரிகம் 3200 ஆண்டுகளுக்கு முற்பட்டது என்பதை அறிவியல் ஆய்வுகளின் அடிப்படையில் உறுதிசெய்ய முடிகிறது என்பதைத் தமிழ் கூறும் நல்லுலகம் அறியும் வகையில் இம்மாமன்றத்தில் அறிவிப்பதில் அள அளவிட முடியாத பெருமிதமும், மனமகிழ்ச்சியும் நான் கொள்கிறேன.

பண்டைய தமிழர்களின் செழுமையான பண்பாடு, கடல்வழி வணிகம், நீர் மேலாண்மை, இரும்பு உருக்குதல், அரிய மணிகள் தயாரித்தல், முத்து குளித்தல் போன்ற தொழில்நுட்பங்களை உலகம் அறிந்துகொள்ளத் தேவையான சான்றுகளைச் சேகரிக்கும் வகையில்,

இந்தியாவில் வேறெந்த மாநிலத்தை விடவும் அதிக அளவு நிதியாக ஐந்து கோடி ரூபாய் நடப்பு நிதியாண்டில் அகழ்வாராய்ச்சிப் பணிக்காகவும், ஆழ்கடல் அகழாய்வுக்காகவும் இந்த நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டிருப்பதை மாமன்ற உறுப்பினர்கள் நன்கு அறிவீர்கள்.

அதன் தொடர்ச்சியாக, ஆதிச்சநல்லூர் சிவகளை மற்றும் கொற்கை மேற்கொள்ளப்பட்ட அகழாய்வின்போது கிடைத்த அரிய பொருட்களை அழகுறக் காட்சிப்படுத்தும் விதமாக, திருநெல்வேலி நகரில் 15 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நவீன வசதிகளோடு அருங்காட்சியகம் அமைக்கப்படும். இது 'பொருநை அருங்காட்சியகம்' என அழைக்கப்படும்

இதுமட்டுமல்ல; தமிழ்ப் பண்பாட்டினைத் தேடி, இந்தியத் துணைக் கண்டமெங்கும்; கடல்கடந்து பயணம் செய்து தமிழர்கள் வெற்றித் தடம் பதித்த வெளிநாடுகளிலும்; தமிழ்நாடு தொல்லியல் துறை உரிய அனுமதிகள் பெற்று இனி ஆய்வுப் பணிகளை மேற்கொள்ளும் என்பதை இந்த மாமன்றத்தில் அறிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.

முதற்கட்டமாக, சங்ககாலத் துறைமுகமான முசிறி. தற்போது பட்டணம் என்ற பெயரில் கேரள மாநிலத்தில் அமைந்துள்ளது . அதன் தொன்மையினையும், பண்பாட்டினையும் அறிந்துகொள்ளும் வகையில், கேரள மாநிலத் தொல்லியல் வல்லுநர்களுடன் இணைந்து அங்கு ஆய்வுப் பணி மேற்கொள்ளப்படும் அதேபோல, ஆந்திர மாநிலத்திலுள்ள வேங்கி, கர்நாடக மாநிலத்தின் தலைக்காடு மற்றும் ஒலுனா மாநிலத்திலுள்ள பாலூர் ஆகிய வரலாற்றுக் சிறப்புடைய இடங்களில் ஆய்வுகள் மேற்கொள்ள உரிய முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

அன்றைய ரோமப் பேரரசின் ஒரு பகுதியாக விளங்கிய எகிப்து நாட்டிலுள்ள குதிர் அல் காதிம் மற்றும் பெரனிகா, மேலும் ஓமான் நாட்டின் கோர ரோசி ஆகிய இடங்களில் பழந்தமிழகத்தோடு இருந்த வணிகத் தொடர்பை உறுதிசெய்யும் வகையில், தமிழ் எழுத்து பொறிக்கப்பட்ட பானை ஓடுகள் கிடைத்துள்ளன. அந்தப் பகுதிகளில், அந்தந்த நாட்டின் தொல்லி இணைந்து ஆய்வுகள் மேற்கொள்ளப்படும் .

மாமன்னர் இராசேந்திர வெற்றித் தடம் பதித்த தென்கிழக்காசிய நாடுகளான இந்தோனேசியா, தாய்லாந்து, மலேசியா, வியட்நாம் ஆகிய நாடுகளில் அமைந்துள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்களில் அந்தந்த நாட்டுத் தொல்லியல் வல்லுநர்கள் துணையோடு, உரிய அனுமதி பெற்று ஆய்வுகள் மேற்கொள்ளப்படும். 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என உலகிற்கு அறிவித்த தமிழரின் பண்பாட்டு அடையாளங்களைத் தேடி, இனி உலகெங்கும் பயணம் செய்வோம். இந்தியத் துணைக் கண்டத்தின் வரலாறு, இனி, தமிழ் நிலப்பரப்பில் இருந்துதான் தொடங்கி எழுதப்பட வேண்டும் என்பதைச் சான்றுகளின் அடிப்படையில், அறிவியல் வழிநின்று நிறுவுவதே நமது அரசினுடைய தலையாய கடமை என்பதை இம்மாமன்றத்தின்மூலம் உலகிற்கு அறிவிப்பதில், உலகிற்கு எடுத்துச் சொல்வதில் பெருமிதம் கொண்டு, அந்தப் பெருமையோடு அமைகிறேன்.

தமிழரின் தொன்மையை உலகறியச் செய்வோம்!

தமிழ் நிலமானது மிகத் தொன்மை வாய்ந்தது. தமிழின் தொன்மையையும், தமிழரின் பண்பாட்டையும் அறிவியல் பூர்வமாக நிறுவ வேண்டுமானால் முறையான அகழாய்வுகள் அவசியமாகும். நம் மூதாதையர் விட்டுச் சென்ற அடையாளங்கள் மூலம் வரலாற்றினை மறுகட்டமைப்பு செய்வதற்கு சான்றுகளாக கல்வெட்டுகளும், அகழாய்வுத் தொல்பொருட்களும் திகழ்கின்றன.

தமிழ்நாட்டின் ஒவ்வொரு குக்கிராமத்திலும் தமிழ்ச் சமூகத்தின் அடையாளங்கள் கோயில்களாகவோ, கல்வெட்டுகளாகவோ, பாறை ஓவியங்களாகவோ, நடுகற்களாகவோ, நீர் மேலாண்மைத் தொழில் நுட்பத்தினைப் பறைசாற்றும் மதகுகளாகவோ காணப்படுகின்றன. இத்தகைய தொல்லியல், வரலாற்றுச் சின்னங்களைப் பாதுகாக்க வேண்டியது நமது தலையாய கடமையாகும்.

இத்தகைய மேன்மைமிகு நோக்கங்களை நிறைவேற்றும் வகையில், இந்திய அளவில் மாநிலத்திற்கென்று தொல்லியல் துறை தொடங்கப்பட்டது தமிழ்நாட்டில்தான் என்பது நமக்கு அளப்பரிய பெருமையாகும்.

நமது முன்னோர்களின் அடையாளங்களாக உள்ள தொல்லியல் சின்னங்கள், வரலாற்றுச் சின்னங்கள் போன்றவற்றைப் பாதுகாக்கவும், வரலாற்றினை எழுதுவதற்குத் தொல்லியல் அகழாய்வுகளை மேற்கொள்ளவும், இந்திய அளவில் அதிக எண்ணிக்கையில் உள்ள தமிழ்க் கல்வெட்டுகளைப் படித்து நூலாக வெளியிடவும், 1961-இல் தொல்லியல் துறை உருவாக்கப்பட்டது.

“திரைகடலோடியும் திரவியம் தேடு” என்ற முதுமொழிக்கு ஏற்ப, பண்டையத் தமிழ்ச் சமூகம் நாட்டின் பிறபகுதிகளோடும், வெளிநாடுகளுடனும் வணிகத் தொடர்பு கொண்டிருந்தது. வணிகம் மூலம் ஏற்பட்ட பல்வேறு பரிமாற்றங்களால் பிற சமூகத்தினரிடமிருந்து வேறுபட்டு மேம்பட்ட சமூகமாகத் தமிழ்ச் சமூகம் மாறியது.

அத்தகைய வணிகப் பரிமாற்றங்களை மேற்கொள்ள சங்க காலத் துறைமுகங்களான பூம்புகார், கொற்கை, அழகன்குளம், வசவ சமுத்திரம் ஆகியவை முக்கியப் பங்காற்றின. இந்தத்துறைமுகங்கள் வாயிலாகப் பண்டைத் தமிழ்ச் சமூகம் மேலைநாடுகளுடனும், கீழைநாடுகளுடனும் வணிகத் தொடர்பு கொண்டிருந்தது.

குறிப்பாக, மேலைநாட்டினரைப் பொதுவாக "யவனர்" என்று சங்க இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. ரோம், எகிப்து, ஓமன், அரேபிய நாடுகளுடன் தமிழ்ச் சமூகத்தினர் வணிகத் தொடர்பு கொண்டிருந்தனர். அதற்குச் சான்றாக தமிழ் எழுத்துப் பொறிக்கப்பட்ட பானை ஓடுகளும், உடன்படிக்கை மற்றும் வெளிநாட்டவர் குறிப்புகளும் கிடைக்கப் பெருகின்றன.

சங்ககாலத் துறைமுகங்களாக விளங்கிய வசவ சமுத்திரம், பூம்புகார், அழகன்குளம், கொற்கை ஆகிய இடங்களில் நடத்திய நில அகழாய்வுகள் மூலம் பண்டைத் தமிழகம் வெளிநாட்டினருடன் கொண்டிருந்த வணிகச் சிறப்பியல்புகளை உலகறியச் செய்துள்ளது. அதுமட்டுமின்றி, சங்ககால வேந்தர்கள் மற்றும் சிற்றரசர்களின் தலைநகராக இருந்த கரூர், திருக்கோவிலூர் ஆகிய இடங்களிலும், சங்ககால ஊர்களான மாங்குடி, மாங்குளம், கொடுமணல், கோவலன் பொட்டல் ஆகிய இடங்களிலும் தமிழ்நாடு அரசு அகழாய்வு மேற்கொண்டு சங்ககாலத் தமிழ்ச் சமூகத்தின் பண்பாட்டை வெளிப்படுத்தியது. முத்தாய்ப்பாக, வைகை நதிக்கரையில் அமையப்பெற்றுள்ள கீழடியில் 2017ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு அரசு அகழாய்வு செய்து வருகிறது.

கீழடி அகழாய்வு மற்ற அகழாய்வுகளுக்கு முன்னோடி அகழாய்வாகத் திகழ்கிறது. இதுவரை கங்கைச் சமவெளியில் கி.மு. ஆறாம் நூற்றாண்டிலிருந்த "நகரமயமாக்கம்" தமிழ்நாட்டில் இல்லையென்றும், பிராமி எழுத்து மௌரியர் தோற்றுவித்தது என்றும் கருதுகோள்கள் இருந்தன. அத்தகைய கருதுகோள்களுக்கு அறிவியல்பூர்வ விடையளித்துள்ளது. தமிழ்நாட்டில் கி.மு. ஆறாம் நூற்றாண்டிலே நகரமயமாக்கம் ஏற்பட்டிருந்தது என்பது மட்டுமல்லாமல், படிப்பறிவும் எழுத்தறிவும் பெற்ற மேம்பட்ட சமூகமாக விளங்கியதை கீழடி அகழாய்வு நிலைநிறுத்தியுள்ளது.

முதலாம் இராசராசன் மற்றும் முதலாம் இராசேந்திரனின் ஆட்சிக் காலங்களில் நிர்வாகம், சமூகப் பொருளாதாரம், கலை மற்றும் பண்பாடு ஆகியவை உன்னத நிலையில் இருந்தன. அதுபோன்ற வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்களான பல்லவர் கால பல்லவமேடு, சோழர்களின் காலத் காஞ்சிபுரத்தில் தலைநகரான தலைநகரங்களான தஞ்சாவூரிலுள்ள குறும்பன்மேடு, கங்கை கொண்ட சோழபுரம், மாளிகைமேடு மற்றும் பழையாறை, போசளர்களின் தலைநகரான கண்ணனூர் ஆகிய இடங்களில் அகழாய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வரலாற்றின் சுவடுகளை வெளிப்படுத்தியுள்ளது. மேலும் காடவராயர் சிற்றரசனான கோப்பெருஞ்சிங்கனின் தலைநகரான சேந்தமங்கலம், சம்புவராயரின் தலைநகரான படவேடு ஆகிய அகழாய்வுகளும் வரலாற்றுக்கு சிறப்பு சேர்த்துள்ளன.

பண்டைய தமிழ்ச் சமூகத்தின் அடிச்சுவடுகள் எங்கெல்லாம் உள்ளதோ, அதனைத் தேடிப் பயணம் மேற்கொள்ள தமிழ்நாடு அரசு திட்டம் தீட்டியுள்ளது. தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகள், நாட்டின் மற்ற மாநிலங்களில் பழந்தமிழர்களின் வரலாறு பதிக்கப்பட்ட இடங்கள் மட்டுமின்றி, மேலை நாடுகளிலும் கீழை நாடுகளிலும் வணிகத் தொடர்பாக ஏற்பட்ட பிணைப்பால் உருவான பண்பாட்டுக் கூறுகளைத் தேடியும் உலகப் பயணம் மேற்கொள்ளப்படும்.

தமிழரின் தொன்மையை உலகறியச் செய்வோம்!

நிலத்திலும், நீரிலும், இலக்கியத்திலும் ஆய்ந்து,
இந்திய துணைக்கண்டத்தின் வரலாறு
தமிழ் நிலத்தில் இருந்து தொடங்கித்தான்
எழுதப்பட வேண்டும் என்பதை உறுதி செய்து வருகிறது
நமது திராவிட மாடல் அரசு.

1

கீழடி நம் தாய்மடி



கீழடியில் இருந்ததை மேல் எழுப்பி இருக்கிறோம்!

5.3.2023 அன்று கீழடி அருங்காட்சியகத்தைத் திறந்து வைத்துள்ளேன். கீழடி, தமிழர்களின் தாய்மடியாக இருந்ததை மீண்டும் உலகுக்கு உணர்த்தவே இக்காட்சியகம் திறக்கப்பட்டுள்ளது.

இரண்டு ஏக்கர் நிலப்பரப்பில் 31,000 சதுர அடியில் 18.43 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ளது கீழடி அருங்காட்சியகம்.

தமிழ்நாடு அரசுத் தொல்லியல் துறை கீழடி அகழாய்வுத் தளத்தில் 2018-ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து தற்போது வரை ஐந்து கட்டங்களாக அகழாய்வு மேற்கொண்டு வருகிறது.

தமிழர்களின் பண்பாட்டின் முக்கியத்துவம் மற்றும் தொன்மையை நிரூபிக்கவும், அதை உலகளவில்கொண்டு செல்லவும் தொல்லியல் துறை உலகப் புகழ்பெற்ற அறிவியல் ஆய்வகங்களுக்கு கீழடியில் கண்டெடுக்கப்பட்ட முக்கியமான கண்டுபிடிப்புகளை அனுப்பி அதிகாரபூர்வமான முடிவுகளைப் பெற்றுள்ளது.

கீழடி அகழாய்வில் கண்டெடுக்கப்பட்ட மாதிரிகளின் அறிவியல் காலக்கணிப்பு கி.மு. ஆறாம் நூற்றாண்டின் முற்பகுதியில் வைகை ஆற்றங்கரையில் நகரமயமாக்கல் இருந்ததை உறுதிப்படுத்தியது. மேலும் கங்கைச் சமவெளியின் நகரமயமாக்கலுக்கு சமகாலமானது என்பதையும் உறுதிபடுத்தியுள்ளது.

கி.மு. ஆறாம் நூற்றாண்டில் தமிழ்ச் சமூகம் கல்வியறிவும் எழுத்தறிவும் பெற்றிருந்தனர் என்பதை அறிவியல் அடிப்படையில் நிலைநிறுத்தியுள்ளது.

கீழடி அகழாய்வில் 1000-க்கும் மேற்பட்ட குறியீடுகளும், 60-க்கும் மேற்பட்ட தமிழி எழுத்துப் பொறிப்புக் கொண்ட பானை ஓடுகளும் கண்டெக்கப்பட்டுள்ளன. இப்பானை ஓடுகளில் குவிரன் ஆதன், ஆதன் போன்ற தனிநபர்களின் பெயர்கள் பொறிக்கப்பட்டுள்ளதன் வாயிலாக சமுதாயத்தின் பல்வேறு பிரிவினரும் கல்வியறிவு பெற்றிருந்தனர் என்பதை வெளிப்படுகிறது.

தற்போது கிடைக்கப்பெற்றுள்ள தரவுகள் மற்றும் கண்டுபிடிப்புகளின் வாயிலாக வைகை ஆற்றங்கரையில் வாழ்ந்த தமிழ்ச் சமூகமானது வேளாண்மை மூலம் பொருளாதாரத்தினை உயர்த்திக் கொண்டனர். மட்கலன்கள், இரும்பு, நெசவு, மணிகள், சங்கு வளையல்கள் ஆகிய தொழில்களை மேற்கொண்டிருந்தனர் என்பதும் அகழாய்வுச் சான்றுகள் மூலம் அறிகிறோம்.

கீழடி – வைகை நதிக்கரையில் சங்க கால நகர நாகரிகம்

கீழடி – தமிழ்ப் பண்பாட்டின் வேர்களைத் தேடி

மகாராஷ்டிரா மற்றும் குஜராத் பகுதிகளில் கிடைக்கப்பெறுகின்ற மூலக்கற்களைக் கொண்டு சூதுபவள மணிகள், அகேட் போன்ற கல்மணிகள் செய்யப்பட்டுள்ளது. அப்பகுதியுடன் கொண்டிருந்த வணிகத் தொடர்பைக் காட்டுகின்றது.

அதுபோல, கங்கைச் சமவெளியைச் சார்ந்த கி.மு. ஐந்தாம் நூற்றாண்டுக்கு முந்தைய வெள்ளி முத்திரைக் காசுகள் கிடைப்பதின் மூலம் கங்கைச் சமவெளியுடன் வணிகப் பரிமாற்றம் நடைபெற்றுள்ளதை உறுதிசெய்ய முடிகிறது.

ரோம் நாட்டுடன் கொண்டிருந்த வணிகத் தொடர்புக்கு நாட்டு நாணயங்களும், ரோம் நாட்டு ரௌலட்டட் மற்றும் அரிட்டன் வகை பானை ஓடுகளும் வலுசேர்க்கின்றன.

கீழடியில் கிடைக்கப்பெற்ற தொல்பொருட்கள் நகர நாகரிகத்திற்கான கூறுகளை வெளிப்படுத்தியுள்ளது. பண்டைத் தமிழ்ச் சமூகம் கி.மு. ஆறாம் நூற்றாண்டில் எழுத்தறிவு பெற்றும், நகர நாகரிகத்துடனும் மேம்பட்ட தமிழ்ச் சமூகமாகவும் விளங்கியதை கீழடி அகழாய்வு முடிவுகள் வாயிலாக அறிவியல் பூர்வமாக தமிழ்நாடு அரசுத் தொல்லியல் துறை நிலை நிறுத்தியுள்ளது.



கீழடி அகழாய்வில் கண்டெடுக்கப்பட்ட தொல்பொருட்கள் உலகத் தமிழர்கள் பொதுமக்கள் கண்டுகளிக்கும் வகையில் இரண்டு ஏக்கர் நிலப்பரப்பில் 31,000 சதுர அடி பரப்பளவில் 18.43 கோடி ரூபாய் செலவில் கீழடி அருங்காட்சியகமாக அமைக்கப்பட்டுள்ளது.

இந்த அருங்காட்சியகத்தில், மதுரையும் கீழடியும், வேளாண்மையும் நீர் மேலாண்மையும், கலம் செய்கோ, ஆடையும் அணிகலன்களும், கடல்வழி வணிகம், வாழ்வியல் எனும் ஆறு பொருண்மைகள் அடிப்படையில் தனித்தனி கட்டடங்களில் தொல்பொருட்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

தமிழர்களின் தொன்மை, பண்பாடு, நாகரிகம், கல்வியறிவு, எழுத்தறிவு, உலகின் பல்வேறு பகுதியுடன் கொண்டிருந்த வணிகத் தொடர்பு ஆகியவற்றினை பறைசாற்றும் விதத்திலும், அதனை உலகிற்கு வெளிக்கொணரும் வகையிலும், உலகத்தமிழர்கள் பெருமை கொள்ளும் வகையிலும் அமைக்கப்பட்டுள்ளது. இதனைத் திறந்து வைத்த நான் கீழடி அருங்காட்சியகத்தை அமைத்த தொல்லியல் துறை வல்லுநர்கள் மற்றும் சிற்பிகளுக்கு நினைவுப் பரிசு வழங்கினேன்.

கீழடி – நகரமயமாக்கல், கல்வியறிவு, தமிழ் – பிராமி காலம் ஆகியவற்றைக் கணிக்க அடிப்படையாக உள்ளது.

பாண்டிச்சேரி பிரெஞ்சு நிறுவனம்
FRENCH INSTITUTE OF PUDUCHERRY
அகர்கர் ஆய்வு நிறுவனம், புனே
AGHARKAR RESEARCH INSTITUTE, PUNE

கீழடி அருங்காட்சியகம் பல்வேறு சிறப்புகளைக் கொண்டது ஆகும்.

கீழடியில் கிடைத்துள்ள நகர்மயமாக்கல் தடயங்கள் காலப் பகுப்பாய்வு முடிவுகளின் மூலம் அதன் காலம் கி.மு.ஆறாம் நூற்றாண்டு என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த முடிவு தென்னிந்திய வரலாற்றை மட்டுமல்ல, இந்திய வரலாற்றையும் மறு ஆய்வுக்கு உட்படுத்தி இருக்கிறது.

- தமிழ்நாட்டின் தொன்மை மற்றும் வரலாற்றினையும், கீழடியின் முக்கியத்துவத்தையும் அனைவரும் அறிந்துகொள்ளும் வகையில் 15 நிமிட ஒளி-ஒலிக் காட்சி குளிரூட்டப்பட்ட அரங்கில் காட்சிப்படுத்தப்படுகிறது.
- வைகை ஆற்றங்கரையில் உள்ள தொல்லியல் முக்கியத்துவம் வாய்ந்த இடங்களை தொடுதிரையில் அறிந்து கொள்ளும் வகையில் உருவாக்கப் பட்டுள்ளது.
- கீழடி அருங்காட்சியகத்தில் பொருண்மை சார்ந்து அமைக்கப்பட்ட கட்டடங்களான, வேளாண்மை, இரும்புத் தொழில், நெசவு, மணிகள் தயாரித்தல், கடல்வழி வணிகம், மேம்பட்ட சமூகம் மற்றும் எழுத்தறிவு ஆகியவற்றிற்கு உரிய விளக்கம் இரண்டு நிமிட உயிரூட்டுக்காட்சி (Animation) வாயிலாக காட்சிப்படுத்தப்படுகிறது.
- கீழடி அகழாய்வுப் பணிகள், தோற்றம், செயல்பாடுகள் ஆகியவற்றை மெய்நிகர் காட்சி (Virtual Reality Exhibition) வாயிலாக தத்ரூபமாக உணர்ந்து கொள்ளும் வகையில் சிறப்பாக மெய்நிகர் காட்சிக்கூடம் ஏற்படுத்தப் பட்டுள்ளது.

- சூதுபவள கற்களால் செய்யப்பட்ட மோதிரக்கல்லின் மாதிரி சுழன்று காணும் வகையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.
- சங்ககால மக்களின் கடல்சார் வணிகத்தினை பிரதிபலிக்கும் வகையில் சங்ககால கப்பலின் மாதிரி வடிவமைக்கப்பட்டுள்ளது.
- அகழாய்வில் அரிதாக கண்டெடுக்கப்பட்டுள்ள தொல்பொருட்கள், மட்பாண்டங்கள், அகழாய்வுக் குழிகள், செங்கற்கட்டுமானங்கள் போன்றவற்றின் மாதிரிகள் வடிவமைக்கப்பட்டுள்ளன.
- குழந்தைகளும் மாணவர்களும் தமிழர் விளையாட்டுகளை தொடுதிரையில் விளையாடும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.
- அகழாய்வில் கண்டெடுக்கப்பட்ட அதிமுக்கியமான தொல்பொருட்கள் முப்பரிமாண வடிவில் (*3 Dimension*) பொதுமக்கள் உவகையுடன் கண்டுகளிக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது.
- பொதுமக்கள் தங்களது பெயரினை தொடுதிரையில் எழுதினால் தமிழி எழுத்தில் தங்களது பெயரைக் காண்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
- சிவகங்கைச் சீமையின் மரபுசார் உணவு முறைகளை ஊக்குவிக்கும் வகையில் சிறுதானிய உணவு வகைகளை விற்பனை செய்யும் உணவுக்கூடமும் அமைக்கப்பட்டுள்ளது.

கீழடியின் பெருமையை நிலைநாட்ட தொடர்ந்து போராடினோம்!

2019 ஆம் ஆண்டு செப்டம்பர் 20 ஆம் நாள் நான் வெளியிட்ட அறிக்கை இது:

“தமிழர் நாகரிகம் 2600 ஆண்டுகள் பழமையானது. கி.மு.6 ஆம் நூற்றாண்டிலேயே தமிழர்கள் எழுத்தறிவு பெற்றிருந்தனர் என்று, மதுரை அருகில் உள்ள கீழடியில் நடத்தப்பட்ட நான்காவது கட்ட ஆய்வில் வெளிவந்திருப்பது, தமிழர்களுக்கும், தமிழ்மொழிக்கும் பெருமை சேர்த்திருக்கிறது.

தமிழர்களின் மிகத் தொன்மை வாய்ந்த எழுத்தறிவுக்கு மிக முக்கியமான வரலாற்றுச் சான்றும், தமிழர் நாகரிகம் பெரும் பழைமையான நாகரிகம் என்பதற்கு அசைக்க முடியாத சிறப்பான ஆதாரங்களும் கிடைத்திருப்பது; ஒவ்வொரு தமிழர் மனதிலும் பெருமித உணர்வு ஊற்றெடுத்துப் பொங்க வைத்துள்ளது.

கீழடி நான்காம் கட்ட ஆய்வில் கிடைத்த 5,820 அரும்பொருட்களின் தேர்ந்தெடுத்த மாதிரிகள், சர்வதேச ஆய்வகங்களுக்கும், தேசிய அளவிலான ஆய்வு நிறுவனங்களுக்கும் அனுப்பப்பட்டு, அந்த ஆய்வகச் சோதனைகளின் அடிப்படையிலான முடிவுகள், தொல்லியல் அறிஞர்கள் குழுவால் சரி பார்க்கப்பட்டுள்ளது.

அதன் விளைவாக, “கீழடி, வைகை நதிக்கரையில் சங்க கால நாகரிகம்” என்ற தலைப்பில் தமிழ்நாடு தொல்லியல் துறையால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கை வரவேற்கத்தக்கது. இந்த ஆய்வின் முடிவுகளால், உலக நாகரிகங்களில் தமிழர் நாகரிகம் “முற்பட்ட நாகரிகம்” என்பதும், இந்திய வரலாற்றை இனி தமிழ்நாட்டிலிருந்து பார்க்க வேண்டும் என்பதும் மீண்டும் உறுதியாகியிருக்கிறது.

குறிப்பாக, தமிழர்களின் வரலாற்றை அடிப்படையாகவும் ஆரம்பமாகவும் வைத்தே இந்திய வரலாற்றைப் பார்க்க வேண்டும்; படித்தறிந்திட வேண்டும் என்பதற்கு ஆதாரமாக, இந்த கரிம மாதிரிகள் ஆய்வில் வெளிவந்துள்ள அற்புதமான தகவல்கள், தமிழர்களின் இதயங்களைக் குளிர வைத்துள்ளது.

கீழடி அகழ்வாய்வில் கிடைத்த எலும்புத் துண்டுகளில் இருந்து ‘திமிலுள்ள காளை’யின் அடையாளங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன என்பது, வேளாண் தொழிலில் நாம் முதன்மைக் குடியாக இருந்ததையும், தமிழர்களின் வீர விளையாட்டான ஜல்லிக்கட்டுக்குரிய தொன்மையையும் எடுத்துக் காட்டுகிறது.



சங்க இலக்கிய மூலங்கள் மூலம் நாம் அறிந்த தமிழர் தம் அறிவார்ந்த சமூகப் பண்பாட்டை, கீழடி கண்டுபிடிப்புகள் உறுதிப்படுத்தும் வரலாறாக ஆக்கி இருக்கின்றன.

ஆய்வுகளில் கிடைத்துள்ள பல்வேறு அரிய தகவல்கள், தமிழர்களின் நாகரிகத்தை முதன்மை நாகரிகமாக, மிகவும் தொன்மை மிகுந்த நாகரிகமாக உலகிற்கு இன்றைய தினம் அறிவித்திருக்கிறது. இதுவரை சாக்குப் போக்கு சொல்லி வந்தவர்கள், இனியாவது தமிழ்மொழி தொன்மையானது, அதற்கு அனைத்து நிலைகளிலும் முதல் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்பதை உணருவார்கள் என்று கருதுகிறேன்.

கி.மு. 6 ஆம் நூற்றாண்டிலேயே, தமிழர்களிடம் எழுதும் பழக்கம் இருந்திருக்கிறது என்ற கண்டுபிடிப்பின் மூலம், தமிழர் சமுதாயம் எழுத்தறிவு பெற்ற சமுதாயமாக அந்த நூற்றாண்டிலேயே இருந்திருக்கிறது என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், "அடுத்த கட்டமாக கீழடிக்கும் அருகில் உள்ள கொந்தகை, அகரம், மணலூர் ஆகிய இடங்களில் அகழாய்வு செய்யப்படும். ஆதிச்சநல்லூரிலும் புதிதாக ஆய்வுகளைத் தொடங்கத் திட்டமிட்டுள்ளோம் என்று, தொல்லியல் துறை முதன்மைச் செயலாளர் உதயச்சந்திரன் கூறியிருப்பது வரவேற்கத்தக்கது.

இந்தத் தருணத்தில் ஒன்றிய அரசுக்கு மூன்று முக்கியமான கோரிக்கைகளை முன்வைக்க விரும்புகிறேன். கீழடிக்குப் பிறகு அகழாய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்ட சனோவ்லி என்ற இடம் உத்தரப்பிரதேசத்தில் மத்திய அரசால் தற்போது பாதுகாக்கப்பட்ட இடமாக அறிவிக்கப்பட்டுள்ளது. அதற்கு முன் தோண்டப்பட்ட கீழடி அகழாய்வு இடமும் பாதுகாக்கப்பட்ட இடமாக அறிவிக்கப்படவேண்டும்.

சிந்துவெளி நாகரிகத்துக்கும் கீழடி அகழாய்வில் கிடைத்த தொல் பொருட்களுக்கும் இடையிலான தொடர்பு குறித்த கருத்து இப்போது விவாதப் பொருள் ஆகி இருக்கிறது. பி.பி.லால் அவர்கள் குறிப்பிடுவதைப் போல கணிசமான குறியீடுகள் சிந்துவெளி எழுத்துக்களோடு நெருங்கிய உறவு கொண்டவையாக இருக்கின்றன. இவ்விரு பண்பாட்டுக்கும் இடையே மொழி சார்ந்த உறவு இருக்கக் கூடும் என்பதை இது மெய்ப்பிக்கிறது.



கீழடி அகழாய்வில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட குறியீடுகள் பொறிப்புகள் கொண்ட பானை ஓடுகள் கிடைத்துள்ளன.

கீழடி ஆய்வுகளில் பல்வேறு அரிய - தொன்மை வாய்ந்த தகவல்கள் கிடைத்துள்ள நிலையில், தற்போதுள்ள தொல்லியல் துறை சென்னை வட்ட அலுவலகத்தைப் பிரித்து - தென் தமிழகத்திற்கு என்று, மதுரையை தலைமையிடமாகக் கொண்டு ஒரு அலுவலகம் உருவாக்கப்பட வேண்டும். இது, தென் தமிழகத்தில் உள்ள புராதனச் சின்னங்கள் முறையாகப் பராமரிக்கப்படுவதற்கும், மேலும் பல தொல்லியல் அகழ்வை முன்னெடுத்துச் செல்லவும் அடிப்படையாக அமையும்.

கீழடியோடு அகழாய்வு துவக்கப்பட்ட குஜராத் மாநிலம் வாட் நகரில் மத்திய அரசு, “சர்வதேசத் தரத்திலான அருங்காட்சியகம் அமைக்கப்படும்” என்று அறிவித்துள்ளது. அதைப்போலவே கீழடியிலும், சர்வதேசத் தரத்திலான அருங்காட்சியகம் அமைக்க வேண்டும்.

மேற்கண்ட மூன்று கோரிக்கைகளையும் மத்திய அரசு உடனடியாக நிறைவேற்றிக் கொடுத்து - தமிழர் நாகரிகத்தின் தொன்மையைக் காப்பாற்றவும் அனைத்து நடவடிக்கைகளும் எடுக்க வேண்டும். மாநில அரசும் இது தொடர்பாக மத்திய அரசுக்கு உரிய அழுத்தம் கொடுத்து இந்தக் கோரிக்கைகளை நிறைவேற்றிடத் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்."

- என்று அறிக்கை வெளியிட்டேன். ஆனால் ஒன்றிய அரசு அதனைச் செய்யவில்லை.

தமிழர் நாகரிகம் தனித்துவமானது

கீழடி அகழாய்வு தொடர்பான அறிக்கைக்கு போதிய அறிவியல்பூர்வமான தரவுகள் இல்லை என தெரிவித்துள்ள ஒன்றிய அரசு, அதனை வெளியிட மறுத்து வருகிறது. இதனைக் கண்டித்து திராவிட முன்னேற்றக் கழக மாணவரணி சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இது தொடர்பாக நான் எழுதிய கடிதம்:

‘‘ ‘கீழடி தமிழர் தாய்மடி‘ என்ற முழக்கத்துடன் புறநானூற்று வீரர்கள் போல ஆர்ப்பாட்டப் போர்ப்பாட்டாக உணர்ச்சிமிகு குரலெழுப்பி, தமிழ்நாட்டை வஞ்சிக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசின் செவிப்பறை கிழியச் செய்திருப்பதை, கழகத்தின் தலைவர் என்ற முறையிலும், தமிழ்நாட்டின் முதலமைச்சர் என்ற வகையிலும் பாராட்டி மகிழ்கிறேன்.

கீழடியில் நடந்த அகழாய்வுகள், தமிழர்களின் நாகரிகம் தனித்துவமான நாகரிகம் என்பதையும், தமிழர்களின் பண்பாடு மிகவும் தொன்மையானது என்பதையும் ஆதாரப்பூர்வமாக மெய்ப்பித்த அகழாய்வாகும். அகழாய்வில் மொத்தம் 5,300 பொருள்கள் இதுவரை கிடைத்துள்ளன. இதன் மூலம் சங்கக்கால தமிழகம், நகர்ப்புற நாகரிகத்தை கொண்டதல்ல என்ற கருத்து தவறானது என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது.

இந்த அகழாய்வில் கிடைத்த தமிழ் பிராமி எழுத்துகள் கொண்ட பானை ஓடுகளும் மற்றும் தொல்பொருட்களும் தமிழர் நாகரிகத்தின் தொன்மையைப் பறைசாற்றுகின்றன. சிந்துசமவெளி நாகரிகத்தைப் போல இங்கும் ஒரு நகர்ப்புற நாகரிகம் இருந்ததற்கான தடயங்கள் ஏராளமாகக் கிடைத்துள்ளன. இதுவரை தமிழகத்தில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வுகளில் கீழடியில் நடைபெற்றிருக்கும் ஆய்வுதான் மிகச் சிறப்பானது. புதிய தமிழ்ச் சொற்களும் இங்கு கிடைத்துள்ளன.

ஹரப்பாவை ஒத்த தமிழர் நாகரிகத்திற்கான கீழடி சான்றுகளை உடனடியாகக் காப்பாற்றவும், பாதுகாக்கவும் தவறினால், அவை முடங்கிப் போகும் பேராபத்து உருவாகும்.

2013-ஆம் ஆண்டு ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சியில் இந்தியத் தொல்லியல் துறையால் வைகை ஆற்றங்கரையில் தள ஆய்வு நடத்தப்பட்டு, கீழடி ஒரு முக்கிய குடியிருப்புத் தளம் என அடையாளம் காணப்பட்டது. அதன் பின்னர் அகழாய்வு தொடர்ந்த நிலையில் ஆட்சிக்கு வந்த பா.ஜ.க. அரசு, 2015-ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் 3 கட்டங்களோடு கீழடி அகழாய்வை நிறுத்திக் கொண்டது. மீதமிருந்த 7 கட்டங்களையும் தமிழ்நாடு அரசின் தொல்லியல் துறை மேற்கொண்டது.

தொல்லியல் பணிகளை மேற்கொண்ட இயக்குநர் அமர்நாத் ராமகிருஷ்ணாவை அசாம் மாநிலத்திற்கு இடமாறுதல் செய்து தமிழ்ப் பண்பாட்டின் மீதான வெறுப்புணர்வை பா.ஜ.க. அரசு அப்பட்டமாகக் காட்டியது. எனினும், அமர்நாத் ராமகிருஷ்ணா 2016-இல் கீழடி அகழாய்வு குறித்த தொடக்க அறிக்கையையும், 2017-ஆம் ஆண்டில் இடைநிலை அறிக்கையையும் இந்திய அரசின் தொல்லியல் துறையிடம் வழங்கினார். சட்டப் போராட்டத்தின் மூலம் தமிழ்நாட்டிற்கு அவர் மீண்டும் வந்து பணியாற்றினார்.

கீழடி அகழாய்வின் வாயிலாகத் தமிழர்களின் வைகை ஆற்று நாகரிகம் ஏறத்தாழ 2,500 ஆண்டுகள் முதல் 3,000 ஆண்டுகள் வரை பழமையானது என்பது தெளிவாகிறது. இது வெறும் கருத்துரீதியான தகவல் அல்ல. கீழடி அகழாய்வில் கிடைத்த பொருள்களை வகைப்படுத்தி உள்நாட்டிலும் - உலகளவிலும் உள்ள சிறந்த ஆய்வுக்கூடங்களான புனே, பெங்களூரு, அமெரிக்காவின் புளோரிடா மற்றும் இத்தாலி ஆகியவற்றுக்கு அனுப்பி அங்கு ராயல் டெஸ்டிங், கெமிக்கல் டெஸ்டிங்,

பெரிய அளவிலான செங்கல் கட்டுமானங்கள் கிடைத்தால், அங்கு நகரமயமாக்கல் இருந்துள்ளது என்பதை அறியலாம். கீழடியில் கிடைத்துள்ள செங்கல் கட்டுமானங்கள், தென்னிந்தியாவில் உள்ள மிக முக்கியமான நகரமாக கீழடியைக் கணிக்க வைக்கிறது.

கீழடி ஆய்வுகளில் மதம் தொடர்பான குறியீடுகள் எவையும் கிடைக்கவில்லை.

கார்பன் டேட்டிங் உள்ளிட்ட ஆய்வுகளை மேற்கொண்டு அறிவியல்பூர்வமாக முடிவுகள் பெறப்பட்டு, அதனடிப்படையிலேயே 2023-ஆம் ஆண்டு 982 பக்க இறுதி அறிக்கையை அமர்நாத் ராமகிருஷ்ணா சமர்ப்பித்தார். இத்தனை ஆய்வுகள், அறிவியல்பூர்வமான முடிவுகள் கிடைக்கப்பெற்றும், கீழடி அகழாய்வு முடிவுகளை வெளியிடாமல் காலந்தாழ்த்தி, தமிழரின் பண்பாட்டுப் பெருமையை மறைக்க நினைக்கும் ஒன்றிய பா.ஜ.க அரசு, இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு இரண்டாண்டுகள் கடந்த நிலையில், கூடுதல் சான்றுகள் தேவை என்று திருப்பியனுப்பியிருக்கிறது. இது தமிழ்ப் பண்பாட்டின் மீதான பா.ஜ.க. அரசின் அப்பட்டமான தாக்குதல்.

தரவுகள் எதுவுமில்லாத கற்பனையான சரஸ்வதி நாகரிகத்தை முன்னிறுத்தி, திராவிடப் பண்பாட்டு அடையாளமான சிந்துவெளி நாகரிகத்தை அழிக்க நினைக்கும் பா.ஜ.க., இதுவரை சரஸ்வதி நாகரிகத்தை எந்தவித அறிவியல் சோதனைகள் மூலமாகவும் நிரூபிக்கவில்லை. ஆனால், தமிழர் பண்பாட்டு அடையாளமான கீழடி அகழாய்வில் கிடைத்த பொருள்கள் ஒவ்வொன்றும் உலகத் தரத்திலான அறிவியல்பூர்வமான ஆய்வுக்குட்படுத்தப்பட்டு நிரூபிக்கப்பட்டும்கூட அதனை ஏற்பதற்குப் பிரதமர் மோடி தலைமையிலான பா.ஜ.க. அரசுக்கு மனது வரவில்லை. அந்தளவுக்குத் தமிழினத்தின் மீதான வெறுப்பு அந்தக் கட்சியின் கொள்கைகளில் ஊறிக் கிடக்கிறது.

முதலில் அகழாய்வுகள் நடத்தப்பட்டபோது அ.தி.மு.க. ஆட்சி நடைபெற்றது. ஆனால், கீழடி அகழாய்வு முடிவுகளை ஏற்க மறுக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசின் மொழிவெறி -

இனவெறி நடவடிக்கை பற்றி அ.தி.மு.க. இதுவரை வாய் திறக்கவில்லை. அ.தி.மு.க.வை பா.ஜ.கவிடம் அடகுவைத்த பழனிசாமி எப்படி வாய் திறப்பார்? ஏற்கனவே அவருடைய அமைச்சரவையில் இருந்த ஒருவர், தமிழர் நாகரிகமான கீழடியை ‘பாரத நாகரிகம்‘ என்று பா.ஜ.க. மனம்குளிரும் வகையில் விளம்பியவராயிற்றே!

தமிழ் மொழி - பண்பாடு - தமிழர் பெருமையைப் போற்றிப் பாதுகாப்பதில் எப்போதும் முன்னணியில் நிற்கும் தி.மு.க. ஆட்சியில்தான் கீழடியில் அருங்காட்சியகம் உருவாக்கப்பட்டு, அகழாய்வில் கிடைத்த பொருட்கள் காட்சிக்கு வைக்கப்பட்டன. தொன்மை மிக்க தமிழ்ப் பண்பாட்டின் அடையாளங்களை அறிவியல் தொழில்நுட்ப உதவியுடன் இன்றைய தலைமுறையினர் எளிதாகத் தெரிந்துகொள்ளும் வகையில் கீழடி அருங்காட்சியகம் திகழ்கிறது.

தமிழ்ப் பண்பாட்டின் காலம் 5,300 ஆண்டுகளுக்கு முந்தைய தொன்மை கொண்டதாக இருப்பதை இரும்பின் தொன்மை என்ற பன்னாட்டுத் தரத்திலான ஆய்வுகள் வாயிலாக நிரூபித்துள்ளோம். வரலாற்றுப் பெருமை மிக்க அந்த ஆய்வு முடிவுகளை திமுக அரசு வெளியிட்டது. தமிழ்நாடு இந்தியாவில்தான் இருக்கிறது.

தமிழ்மொழி இந்திய அரசியல் சட்டத்தின் எட்டாவது அட்டவணையில் இருக்கிறது. தமிழர்கள் இந்திய குடிமக்களாக வாழ்கிறார்கள். ஆனால், தமிழ்ப் பண்பாட்டின் பெருமைக்குரிய இரும்பின் தொன்மை முடிவுகள் குறித்து ஒரு 'ட்வீட்' போடக்கூட பிரதமர் தொடங்கி பா.ஜ.க. ஆட்சியினருக்கு மனம் வரவில்லை. தமிழ்நாடு பா.ஜ.க.வினரும் தங்கள் இன - மொழி உணர்வைப் பதவிக்காகத் தலைமையிடம் விற்றுவிட்டு, தமிழர்களுக்கு துரோகம் இழைத்து வருகிறார்கள்.

இந்த நிலையில், தமிழ்ப் பண்பாட்டின் பெருமையைக் காக்கவும், அதை நிறுவவும் வேண்டிய பெரும் பொறுப்பு திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும், தமிழுணர்வுகொண்ட அதன் தோழமை சக்திகளுக்கும் மட்டுமே இருப்பதால்தான், கிளம்பிற்று காண் தமிழர் கூட்டம் என்கிற வகையில் கழக மாணவரணி மதுரையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தை நடத்தி, கீழடி ஆய்வு முடிவுகளை ஒன்றிய அரசு ஏற்க வேண்டும் என வலியுறுத்தியுள்ளது.

ஆர்ப்பாட்டத்தை வெற்றிகரமாக நடத்திட உதவிய அனைத்து நிர்வாகிகளுக்கும் நெஞ்சம் நிறைந்த பாராட்டுகள். கீழடியிலும், சென்னையிலும் ஒலித்திருப்பது முதல் கட்ட முழக்கம். இது டெல்லி வரை தொடர்ந்து எதிரொலிக்கும். தமிழரின் பண்பாட்டுப் பெருமையை நிலைநாட்டும் வரை கழகத்தின் போராட்டம் ஓயவே ஓயாது”

(19.6.2025 வெளியிட்ட அறிக்கையில்)

கீழடி கண்டேன், கிளர்ச்சி மிகக் கொண்டேன்

கீழடியில்தான் நின்றிருந்தேன். மனதோ வியப்பிலும் பெருமிதத்திலும் புவியீர்ப்பு விசை கடந்த சந்திரயான் விண்கலம் போலே வான் வரை பறந்து உயர்ந்து சென்றது. எனக்கு மட்டும் கிடைத்திருக்கும் பெருமை அல்ல இது. அனைவருக்குமான பெருமை. தமிழர்கள் ஒவ்வொருவருக்கும் தரணி போற்றும் பெருமை.

இலக்கியங்கள் காட்டிய தொல்தமிழர் பெருமை பற்றிய சான்றுகள் அகிலத்தார்க்கு மெய்ப்பித்திருக்கின்றன கீழடி அகழ்வாய்வுகள். ஆண்டுகளாலும் ஆழ்ந்த அறிவாலும் உலகின் மூத்த இனம் தமிழ் இனம் என்பதற்கான அரிய சான்றுகள் நூறாண்டுகளுக்கும் மேலாகத் தொடர்ந்து கிடைத்து வருகின்றன.

கீழடியில் நான்காம் கட்ட ஆய்வினை மேற்கொண்ட தமிழக அரசின் தொல்லியல் துறை வெளியிட்ட அறிக்கையினை உடனடியாகப் பாராட்டியதுடன், தொல்தமிழர் பெருமையைப் பறை சாற்றும் அகழ்வாய்வுப் பணிகளைத் தொடர்ந்து மேற்கொண்டிட வேண்டும் எனவும் வலியுறுத்தினேன். இது நம் மொழி-இன-பண்பாட்டு -நாகரிகப் பெருமை என்பதுடன், தமிழர்தம் பொருள் பொதிந்த வாழ்வியல் குறித்த வரலாற்று உண்மைகள் மண்மூடி மறைக்கப்பட்டுவிடக் கூடாது என்பதே முதன்மையானதாகும்.



அதனால்தான் அகழ்வாய்ந்து கண்டுபிடிக்கப்பட்ட இடத்துக்கு நேரில் சென்று கண்டறிந்து மகிழும் ஆவல் முகிழ்த்தது. மதுரை செல்வதற்கு ஆயத்தமானபோதே, அந்தத் தொகுதியின் நாடாளுமன்ற உறுப்பினரும், கீழடி ஆய்வுகளை வெளிக்கொண்டு வந்து வெளிச்சம் பாய்ச்சிட வெகுவாகப் பாடுபட்டு வருபவருமான, சாகித்ய அகாடமி விருது பெற்ற சான்றாண்மை மிக்க எழுத்தாளர் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த சு.வெங்கடேசனிடம் தெரிவித்தேன். அது கேட்ட அவரும் கீழடிப் பயணத்தில் எனக்குத் துணையாக உடன் வந்தார்.

கீழடியில் காலடி வைத்தபோது திமுக தொண்டர்களும் பொதுமக்களும் ஏராளமாகத் திரண்டிருந்தனர். தமிழ்நாடு தொல்லியல் துறையின் துணை இயக்குநர் ஆர்.சிவானந்தம், தொல்லியல் ஆய்வாளர் பி.ஆசைத்தம்பி ஆகியோரின் உதவியுடன், கீழடி ஆய்வுகளின் சிறப்புகளை அறியும் சீரிய வாய்ப்பு அமைந்தது. வெட்ட வெளியில் தோண்டப்பட்டிருந்த குழிகள், தென்னஞ்சோலையில் மேற்கொள்ளப்பட்டிருந்த அகழ்வாய்வுகள் ஆகியவற்றைப் பற்றி விரிவாக விளக்கி, அங்கு கிடைத்திருந்த பொருட்கள் வைக்கப்பட்டிருந்த முகாமுக்கும் அழைத்துச் சென்று அவற்றின் நேர்த்தி பற்றித் தெளிவாக விளக்கினர்.

கி.மு.6 ஆம் நூற்றாண்டில் அதாவது, 2600 ஆண்டுகளுக்கு முன்பே தமிழர்கள் சிறப்பான நகர நாகரிகத்தைக் கடைப்பிடித்து வாழ்வாங்கு வாழ்ந்ததைக் காண முடிந்தது. சுட்ட செங்கற்களால் ஆன வீடுகள், சுவர் அமைப்பதற்கு சுண்ணாம்புப் பூச்சு, உறுதியான மேற்கூரை, தண்ணீர் வருவதற்கும் வெளியேறுவதற்குமான வசதிகளுடன் கூடிய உயரிய நீர் மேலாண்மை என வியக்கவும் வியந்து போற்றவும் வைக்கும் வகையில் தமிழர்கள் வாழ்ந்திருப்பதை கீழடியில் காண முடிந்தது.

கிடைத்த பொருட்கள்:

- செங்கல் கட்டுமானங்கள்
- சுடுமண் உறை கிணறுகள்
- மழை நீர் வடிகால் அமைப்புகள்
- தங்க அணிகலன்கள்
- தங்க அணிகலன் உடைந்த பகுதிகள்
- செம்பு பொருட்கள்
- இரும்புக் கருவி பாகங்கள்
- சுடுமண் சொக்கட்டான் காய்கள்
- வட்டச்சில்லுகள்
- சுடுமண் காதணிகள்
- கண்ணாடி
- விலை உயர்ந்த மணிக் கற்கள்
- மட்பாண்ட ஓடுகள்
- தமிழி மட்கல துண்டுகள்

வைகை ஆற்று வாடாத நாகரிகத்தில் கிடைத்த பானை ஓடுகளில் கறுப்பு-சிவப்பு வண்ணமும் அதில் கீறல் எழுத்துகளும் இடம்பெற்றிருந்ததைச் சுட்டிக்காட்டி, தமிழர்கள் அந்தக் காலத்திலேயே எழுத்தறிவு பெற்றிருந்ததை அதிகாரிகள் விளக்கினர். பானையில் வைக்கப்படும் தண்ணீர் சுத்தமாக இருக்க வேண்டும் என்பதற்காக வடிகட்டும் துளைகளுடன் கூடிய பானைகளைப் பார்த்தபோது ஆச்சரியமாக இருந்தது. இயந்திரங்கள் பெருகிவிட்ட இக்காலத்தில் இவை எளிதாக சாத்தியமாகும். ஆனால், தமிழர்கள் தங்கள் கை வண்ணத்தாலேயே புதிய தொழில்நுட்பங்களை வெளிப்படுத்தியிருப்பதைக் காண முடிந்தது.

வேளாண்மை போற்றிய சங்கத் தமிழர்கள் பசு, எருமை, ஆடு உள்ளிட்ட கால்நடைகளை வளர்த்திருப்பதையும், உணவுக்காக விலங்குகளைப் பயன்படுத்தியிருப்பதையும் ஆய்வுகளில் அறிய முடிந்திருக்கிறது. இரும்பினால் ஆன பொருட்கள், தங்கத்தால் ஆன அணிகலன்கள் அனைத்திலுமே கலை மிளிரும் வேலைப்பாடுகள் மிகுந்திருந்தன. இன்றைக்கு சதுரங்கம் எனச் சொல்லப்படும் சிந்தனைக்கு வேலை தரும் சதுரங்க விளையாட்டை அன்றைய காலகட்டத்திற்கேற்ப தமிழர்கள் விளையாடியிருக்கிறார்கள். அந்த விளையாட்டுக்கான காய்களை அவர்களே செய்திருக்கிறார்கள் என்பதையும் அறிய முடிந்தது.

ஒவ்வொன்றையும் காணும்போதும் மகிழ்ச்சி, பெருமிதம் உயர்ந்து கூடிக்கொண்டே இருந்தது. அந்த மகிழ்ச்சியும் பெருமிதமும் அப்படியே தமிழர்கள் அனைவருக்கும் உரியது. அதனால்தான் பொதுமக்கள் அதிக அளவில் கீழடிக்கு வரத் தொடங்கியிருக்கிறார்கள். அதுபோலவே, கல்லூரி மாணவர்கள் திரண்டு வருகிறார்கள். அவர்களில் பலர் என்னிடம் அறிமுகப்படுத்திக்கொண்டு செல்ஃபி எடுப்பதில் ஆர்வம் காட்டியதுடன், கீழடி ஆய்வுகளைப் பாதுகாக்க வேண்டும் என்ற ஆர்வத்தையும் அக்கறையையும் வெளிப்படுத்தினர். பொதுமக்களில் சிலர் சுற்றுவட்டாரப் பகுதிகளில் மின்சாரம் இல்லாத நிலைமை, அடிப்படைத் தேவைகள் நிறைவேற்றப்படாத சூழல் ஆகியவை குறித்த கோரிக்கைகள் அடங்கிய மனுக்களையும் அளித்தனர்.

நாம் எதிர்க்கட்சிதான். ஆனாலும் மக்கள் நம்மீது மாறாத நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். என்றும் அந்த நம்பிக்கைக்கு உரியவர்களாக நமது கடமையைத் தொடர்ந்து செம்மையாக நிறைவேற்றி வருகிறோம். கீழடியிலும் நமக்கான கடமைகள் நிறைய இருக்கின்றன.

சிந்துசமவெளி நாகரிகம் பற்றி ஹரப்பா-மொகஞ்சாதாரோ அகழ்வாய்வுகள் வாயிலாக, இந்தியா முழுவதும் தொன்மையான திராவிட நாகரிகம் மூவாயிரம் ஆண்டுகள் முன்பே பரவியிருந்ததை ஆய்வாளர்கள் உறுதி செய்தனர். அதன்

தொடர்ச்சியாக தாமிரபரணி நதிக்கரை நாகரிகம் குறித்த ஆதிச்சநல்லூர் ஆய்வுகளும் வெளிப்பட்டன. எனினும்,தமிழரின் பெருமைகளை வெளிப்படையாகக் கூறுவதற்கு தொல்பொருள் அகழ்வாய்வுத்துறை தயக்கம் காட்டி வருவதும் போராடிப் போராடி அதனை வெளிக்கொண்டு வருவதும் தொடர்ந்து நமது கடமையாக அமைந்துள்ளது.

தமிழுக்குச் செம்மொழித் தகுதியைப் பெற்றுத் தருவதற்கு பரிதிமாற்கலைஞர் போன்ற அறிஞர்கள் 100 ஆண்டுகளாக மேற்கொண்ட முயற்சிகளையும் கருணாநிதியால்தான் நிறைவேற்ற முடிந்தது. இடையில் எத்தனையோ தமிழ்ச்சான்றோர்களின் போராட்டம்! அத்தனையையும் மனதில்கொண்டு, தனது உறுதியால்-செல்வாக்கால்-எல்லாவற்றும் மேலாக தமிழ் மீது கொண்ட பாசத்தால், பற்றால் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சியில் தமிழுக்குச் செம்மொழித் தகுதி கிடைத்திடச் செய்தார் தலைவர் கருணாநிதி.

இதோ இந்தக் கீழடி ஆய்வுகளும் அத்தனை எளிதாக வந்துவிட்டனவா? முழுமையாக வந்துவிட்டனவா? இதுகுறித்து எத்தனை முறை வலியுறுத்தவும், நினைவூட்டவும் வேண்டியிருந்தது.

2016 ஆம் ஆண்டு சட்டப்பேரவைத் தேர்தலையொட்டி திமுக வெளியிட்ட தேர்தல் அறிக்கையில் கீழடியில் தொல்லியில் ஆய்வுகள் தொடரப்படும். அங்கு கிடைத்துள்ள பல்வேறு அருங்கலைப் பொருட்கள் காட்சிப்படுத்தப்பட அங்கே அருங்காட்சியகம் ஒன்று அமைக்கப்படும் என உறுதி அளிக்கப்பட்டது.

தமிழக சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவர் என்ற முறையில், 6-1-2016 அன்று, கீழடி அகழ்வாய்வைத் தொடரவும் நிதி ஒதுக்கீடு செய்திடவும் வலியுறுத்தி மத்திய கலாச்சாரத் துறை அமைச்சராக இருந்த மகேஷ் சர்மாவுக்குக் கடிதம் எழுதினேன். அதில் கீழடியில் ஆய்வுப் பணிகளை

நிறுத்துவதற்கு மத்திய தொல்லியல் துறை முடிவு செய்திருப்பதையும், அந்த முடிவை மாற்றி, ஆய்வுப் பணிகளைத் தொடர்ந்து மேற்கொண்டு, தமிழர் தம் நாகரிகம் உலகறியச் செய்யத் தேவையான நிதி ஒதுக்கீடு வழங்கப்பட வேண்டும் என்பதையும் குறிப்பிட்டிருந்தேன்.

இக்கடிதத்தைத் தொடர்ந்து, கீழடி ஆய்வுப் பணிகள் தொடரும் என மத்திய கலாச்சாரத்துறை உத்தரவிட்டதற்கு நன்றி தெரிவித்ததுடன், 20-2-2017 அன்று தமிழ்நாடு சட்டப்பேரவையில் நடைபெற்ற விவாதத்தில் இது பற்றிக் குறிப்பிட்டேன். அதுபோலவே, 22-06-2017 அன்று சட்டப்பேரவையில் எதிர்க்கட்சித் தலைவர் என்ற முறையில் ஆற்றிய உரையில், “தமிழர்களின் பண்பாட்டு அடையாளங்கள் மிகவும் தொன்மை வாய்ந்தவை என்பதை நிரூபிக்கும் வகையில் அமைந்துள்ள கீழடி அகழ்வாய்வுக்கு மத்திய அரசின் ஒத்துழைப்பு போதுமானதாக இல்லை என்ற குற்றச்சாட்டு தொடர்ந்து இருந்து வருகிறது.

அந்த அகழ்வாய்வில் முழு ஈடுபாட்டோடு செயல்பட்டு வந்த ஆய்வாளர்கள் திடீரென மாற்றப்படும் நிலையும் தொடர்கிறது. கீழடியில் கிடைத்த பழங்கால பொருட்களை அண்டை மாநிலத்தில் உள்ள மைசூருக்கு மாற்றும் முயற்சியும் நடந்து கொண்டிருக்கிறது.

தமிழர்களின் வரலாற்றுப் பெருமைகளை அந்தக் கல்வெட்டுகள், செப்பேடுகள் உலகத்துக்கு எடுத்துக்காட்டக் கூடிய வகையில் அமைந்திருக்கின்றன. எனவே மத்திய அரசுக்கு\உரிய அழுத்தம் கொடுத்து அவற்றை எல்லாம் தமிழகத்திலேயே பேணிப் பாதுகாக்கின்ற வகையிலான எல்லாவித முயற்சிகளையும் இந்த அரசு எடுக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்” எனத் தெரிவித்துள்ளேன்.

கீழடி அகழ்வாய்வில் முக்கியப் பங்காற்றிய தொல்லியல் துறை கண்காணிப்பாளர் அமர்நாத் ராமகிருஷ்ணன் அவர்கள் திடீரென மாற்றப்பட்டு, அகழ்வாய்வுப் பணிகள் முடக்கப்பட்ட சூழல் உருவானபோது, அது குறித்து 25-09-2017 அன்று கண்டன அறிக்கை வெளியிட்டேன். அதேபோல், 5-2-2019 அன்று ஊராட்சி சபைக் கூட்டம் கீழடி கிராமத்தில் நடைபெற்றது.

அப்போது, நான் அகழ்வாழ்வ்வு நடைபெற்ற இடத்தை பார்வையிட்டேன். அப்போது அங்கிருந்த மக்கள், அகழ்வாய்வு பணிகள் நிறுத்தப்பட்டதற்கு வேதனை தெரிவித்தும், தொடர்ந்து விரிவான ஆய்வு நடத்திட வலியுறுத்தியும் என்னிடம் கோரிக்கை விடுத்தனர். நானும், அப்போது மத்திய, மாநில அரசுகளுக்கு வேண்டுகோள் விடுத்ததுடன், திமுகவின் 2019 நாடாளுமன்றத் தேர்தல் அறிக்கையில், “கீழடியில் அகழ்வாய்வு தொடரவும், அருங்காட்சியகம் அமைக்கவும் தேவையான நிதியுதவிகள் ஒன்றிய அரசு தந்திட திமுக பாடுபடும்”



என தெரிவித்திருந்தோம். ஒவ்வொரு கட்டத்திலும் கீழடிக்காக திமுக தொடர்ந்து உரிமைக் குரல் எழுப்பி வந்துள்ளது.

திராவிட நாகரிகத்தின் தொட்டிலாக சங்கத் தமிழர்களின் புகழ் கூறும் வைகை ஆற்றங்கரையில் வளர்ந்த கீழடி நாகரிகத்தையும் வரலாற்றின் பக்கங்களில் பதிவு செய்திட வேண்டும். அதற்கு மத்திய அரசின் ஒத்துழைப்பு மிக முக்கியம். அதனால்தான், கீழடிக்குப் பிறகு ஆய்வு மேற்கொள்ளப்பட்ட உத்தரபிரதேசம் மாநிலம் சனோவ்லி என்ற இடம் பாதுகாக்கப்பட்ட இடமாக அறிவிக்கப்பட்டிருக்கிறது என்பதையும், அதுபோல கீழடியும் பாதுகாக்கப்பட்ட இடமாக அறிவிக்கப்பட வேண்டும் என்பதையும் வலியுறுத்துகிறோம்.

கீழடியுடன் ஆய்வு தொடங்கப்பட்ட குஜராத் மாநிலம் வாட் என்ற இடத்தில் சர்வதேசத் தரத்திலான அருங்காட்சியகம் அமைக்கப்படும் என மத்திய அரசு அறிவித்துள்ளது. கீழடியிலும் அதே போன்ற உலகத் தரம் வாய்ந்த அருங்காட்சியகம் அமைக்கப்படுவதுடன், இந்த வைகை ஆற்று நாகரிகத்தின் தொடர்ச்சியான ஆய்வுகளுக்காக மதுரையில் ஓர் அலுவலகமும் அமைக்கப்பட வேண்டும் என்பதை தொடர்ந்து வலியுறுத்துகிறோம். நாடாளுமன்றத்தில் மாநிலங்களவை உறுப்பினராக இருந்த கனிமொழி இதுகுறித்து, பல முறை பேசியதுடன், தற்போது மக்களவை உறுப்பினராகவும் வலியுறுத்தி வருகிறார்.

திமுகவின் சார்பில் நான் அனுப்பிய கோரிக்கை மனுவை நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழியும், அவருடன் இந்திய தேசிய காங்கிரஸ் எம்.பி. கார்த்தி சிதம்பரம், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சு.வெங்கடேசன் ஆகியோரும் ஒன்றிய கலாச்சாரம் மற்றும் சுற்றுலாத்துறைக்கு தனிப் பொறுப்பு வகிக்கும் இணையமைச்சர் பிரகலாத் சிங் பாட்டீலைச்

சந்தித்து அளித்திருக்கிறார்கள். கீழடியில் அருங்காட்சியகம் அமைக்க மாநில அரசிடம் இடம் ஒதுக்கித் தருமாறு மத்திய அரசு கேட்டிருப்பதாக ஒன்றிய இணையமைச்சர் தெரிவித்திருக்கிறார். அதற்கான இடவசதியை மாநில அரசு விரைந்து உருவாக்கித் தர வேண்டும்.

அதே நேரத்தில், கீழடியில் இதற்கு முன்பாக மத்திய தொல்லியல் துறை நடத்தியுள்ள 3 கட்ட ஆய்வுகளின் முடிவுகளை வெளியிட வேண்டும். தொடர்ந்து மத்திய தொல்லியல் துறை ஆய்வு நடத்திட வேண்டும். மாநில அரசின் தொல்லியல்துறை மேற்கொள்ளும் ஆய்வுகளுக்கு போதிய நிதியுதவி இல்லாத நிலையில், மத்திய தொல்லியல் துறை இதில் அலட்சியம் காட்டுவது தமிழர்களை வஞ்சிக்கும் செயல் மட்டுமல்ல, பண்டைச் சரித்திரத்தைப் பாழ்படுத்தும் செயலாகிவிடும்..

கீழடி மட்டுமின்றி, ஏற்கெனவே ஆய்வு மேற்கொள்ளப்பட்ட ஆதிச்சநல்லூர் குறித்த முடிவுகளையும் தொல்லியல் துறை வெளியிடவேண்டியயது கட்டாயமாகிறது. திமுக ஆட்சிக்காலத்தில் தலைவர் கருணாநிதியின் முனைப்பினால், கங்கைகொண்ட சோழபுரம், பரிகுளம், மாங்குளம், செம்பியன்கண்டியூர், பூம்புகார், அழகன்குளம், ராஜக்கமங்கலம், தேரிருவேலி, தலைச்சங்காடு, நெடுங்கூர் உள்ளிட்ட இடங்களில் தொல்லியல் ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. 2010-ல் நடைபெற்ற உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டின்போது, சோழமன்னன் ராஜாதிராஜன் ஆட்சிக்கால செப்பேடுகள் கண்டெடுக்கப்பட்டு, மாநாட்டுக் கண்காட்சியில் பார்வைக்கு வைக்கப்பட்டன.

தொல்தமிழர் பண்பாடு உலகின் மூத்த பண்பாடு, மனித இனத்தின் முழுமுதல் பண்பாடு ஆகும். அதனை திராவிடப் பண்பாடு என வரலாற்று அறிஞர்கள் குறிப்பிடுவதைக் கேட்கும் போது, செவிகளில் இன்பத் தேன் பாய்கின்றது. தமிழ் என்ற சொல் ‘த்ரமிட’ என்றாகி, ‘த்ராவிட’ என்றும் திராவிட என்றும் மருவியுள்ளது என மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் தொடங்கி இக்காலக் கவிஞர்கள், அறிஞர்கள், ஆய்வாளர்கள் வரை சுட்டிக்காட்டுகின்றனர். அதுபோலவே மொகஞ்சதாரோ-ஹரப்பா அகழ்வாய்வுகள் நடத்தப்பட்ட பகுதிகளில் தொல்தமிழரின் திராவிட மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த மொழிகள் பேசப்பட்டதையும் ஆவணப்படுத்தியுள்ளனர்.

அந்த வகையில் கீழடியாக இருந்தாலும் சிந்துசமவெளி நாகரிகமாக இருந்தாலும் அது தமிழர் பண்பாட்டின் தொடர்ச்சி-நீட்சி என்றே ஆய்வாளர்கள் கருதுகிறார்கள். இந்த ஆய்வுகள் ஒரு பேருண்மையை உணர்த்துகின்றன. அதாவது, இந்தியாவின் வரலாறு தெற்கிலிருந்துதான் தொடங்கப்பட வேண்டும் என பல அறிஞர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதனைத் தமிழ்நாட்டிலிருந்து தொடங்கப்பட வேண்டும் என்பதை கீழடி ஆய்வுகள் உறுதிப்படுத்தியிருக்கின்றன.

கீழடியில் மட்டுமல்ல, தமிழர்கள் பல பகுதிகளிலும் சிறப்பான நாகரிகத்தையும் செவ்விய பண்பாட்டையும் கடைப்பிடித்து, உலகத்திற்கே முன்னோடியாக விளங்கியவர்கள். அந்தப் பண்பாட்டுப் பெருமைகளை மீட்பது மட்டுமல்ல, அதனைப் பாதுகாப்பதும் கடமையாகும். பாதுகாக்க வேண்டிய அதிகாரத்தில் இருப்பவர்களிடம் அதை வலியுறுத்துவோம்! பாதுகாக்கின்ற பொறுப்பை மேற்கொள்ளும் காலமும் கனிந்து வரும்; அப்போது அகிலம் அகம் மிக மகிழ்ந்திடும் வண்ணம் அந்தப் பொறுப்பை ஆற்றலுடன் நிறைவேற்றுவோம்.

(28.9.2019 எழுதிய கடிதம்)

தொன்மையை புறந்தள்ளுகிறார்கள்

“கீழடி அகழாய்வில் இருந்து உலக அளவிலான ஆய்வகங்களுக்கு அனுப்பி, கரிமப் பகுப்பாய்வில் காலக்கணக்கீடு செய்யப்பட்ட மாதிரிகள், *AMS* அறிக்கைகளை அளித்த பின்னரும் மேலும் சான்றுகள் தேவைஎன்கிறார்கள் அவர்கள்!

தமிழ்ப் பண்பாட்டின் தொன்மையைப் புறந்தள்ளுகிறார்கள்

இதற்கு நேர்மாறாக, மதிப்புமிக்க வரலாற்றாய்வாளர்கள், தொல்லியல் அறிஞர்கள் கடுமையாக எதிர்க்கும் நிலையிலும் கற்பனையான சரஸ்வதி நதி நாகரிகத்தை பா.ஜ.க. ஆதரிக்கிறது. எந்த நம்பத்தகுந்த சான்றும் இல்லாமல் இதனை அவர்கள் முன்னெடுக்கிறார்கள். ஆனால் நாம் கடுமையான பரிசோதனைகள் மூலம் நிறுவியுள்ள தமிழ்ப் பண்பாட்டின் தொன்மையைப் புறந்தள்ளுகிறார்கள்.

எல்லாவற்றையும் உலகம் உற்று நோக்குகிறது

கீழடி மற்றும் தமிழ் மரபுசார் உண்மையைப் பொறுத்தவரை பா.ஜ.க.- ஆர்.எஸ்.எஸ் கும்பல் கதறுவது சான்றுகள் இல்லை என்பதால் அல்ல; கீழடி காட்டும் உண்மை அவர்கள் முன்னெடுக்கும் ஸ்க்ரிப்ட்க்கு எதிரானதாக இருப்பதால்தான். எங்கள் வரலாற்றை வெளிக்கொணர பல நூறாண்டுகள் போராடினோம். அதனை எப்படியாவது மறைத்து அழிக்க ஒவ்வொரு நாளும் அவர்கள் முயல்கிறார்கள். எல்லாவற்றையும் உலகம் உற்று நோக்கிக் கொண்டுதான் இருக்கிறது. காலமும் கூட”.

(13.6.2025 பதிவு)

மதுரை நெடுஞ்சாலை வழியே 13 கிலோ மீட்டர் தொலைவில் கீழடி அமைந்துள்ளது.

கீழடி முடிவுகள்

1. பொதுவாக 'சங்க காலம்' என்பது கி.மு. மூன்றாம் நூற்றாண்டு முதல் கி.பி. மூன்றாம் நூற்றாண்டு வரை என்று கருதப்பட்டு வந்தது ஆனால், கீழடியில் கிடைத்த காலக்கணிப்புகள் தமிழகத்தின் எழுத்தறிவை கி.மு. ஆறாம் நூற்றாண்டுக்கு எடுத்துச் செல்கிறது. சங்ககாலத்தின் காலவரையறையை மீளாய்வுக்கு

2. கொடுமணல், பொருந்தல் ஆகிய இடங்களில் கிடைத்த தமிழ்-பிராமி எழுத்துப் பொறிப்பு பெற்ற மட்பாண்டங்களின் காலம் கி.மு.5-ஆம் நூற்றாண்டு வரை இட்டுச் செல்கிறது. ஆனால், கீழடியில் கிடைத்த அறிவியல் சார்ந்த கால கணிப்புகள் இதன் காலத்தை மேலும் ஒரு நூற்றாண்டுப் பழமையானதாக அதாவது கி.மு. ஆறாம் நூற்றாண்டில் நிலை நிறுத்தியுள்ளது.

3. இந்தியாவில் கங்கைச் சமவெளி பகுதியில் கி.மு. ஆறாம் நூற்றாண்டளவில் தோன்றிய இரண்டாம் நகரமயமாக்கம் தமிழகத்தில் காணப்படவில்லை என்ற கருதுகோள் இதுவரை அறிஞர்களிடையே நிலவிவந்தது. ஆனால், கீழடி அகழாய்வு கி.மு.ஆறாம் நூற்றாண்டளவில் தமிழகத்தில் நகரமயமாக்கம் உருவாகிவிட்டதை நமக்கு உணர்த்துகிறது.

4. வைகைக்கரையில் அமைந்துள்ள கீழடியில் சங்ககாலத்தில் வாழ்ந்த மக்கள் வேளாண்மையையும், கால்நடை வளர்ப்புத் தொழிலையும் முக்கியத் தொழிலாகக் கொண்டிருந்தனர். வேளாண்மைக்கு உதவக்கூடிய துணைத் தொழில்களின் தொழிற்கூடங்களை அமைத்துள்ளனர்.

5.கீழடியில் வெளிப்பட்டுள்ள செங்கல் கட்டுமானங்களில் செங்கல் இணைப்பிற்கு 97 சதவீதம் கொண்ட சுண்ணாட்ட சாந்தினை பயன்படுத்தியுள்ளது. இச்சுவரானது வலிமையாக இன்று வரை நீடித்திருப்பதற்கு சான்றாக திகழ்கிறது. இக்கட்டுமான அமைப்பானது சங்க காலத்தில் இருந்த வளர்ச்சியடைந்த சமூகத்தின் அடையாளமாகப் பார்க்கப்படுகிறது.

6. அன்றாட தேவைகளுக்கான பானைகளைத் தயாரிக்கும் தொழிற்கூடம், நாகரிக வாழ்க்கையை வெளிப்படுத்த கூடிய ஆடைகளைத் தயாரிக்கும் நெசவுக்கூடம் போன்றவற்றை ஏற்படுத்தியுள்ளனர்.

7. புலவர்கள் மட்டுமின்றி சாதாரண மக்களும் கல்வி அறிவு பெற்றிருந்தனர்.

8.சங்க காலத்தில் இப்பகுதியில் வாழ்ந்திருந்த மக்கள் தங்கம், செம்பு, தந்தம், பளிங்குக் கல், கண்ணாடி, சூதுபவளம் போன்றவற்றால் செய்யப்பட்ட அணிகலன்களை அணிந்துள்ளனர். இவை இவர்களின் பொருளாதார வளத்தைக் காட்டுகின்றன.

9. இவ்வூர் மக்கள் வெளியூர், இந்தியாவின் பல்வேறு பகுதிகள் மற்றும் உரோம நாட்டுடன் வாணிபத் தொடர்புகள் கொண்டிருந்தனர் என்பதற்கு அப்பகுதியிலிருந்தே கொண்டு வரப்பட்ட பானைகள், மணிகள் போன்ற தொல்பொருட்கள் சான்று பகர்கின்றன.

10. வைகைக்கரையில் வாழ்ந்த சங்ககால மக்கள் வேளாண்மை மூலம் பொருளாதாரத்தை பெருக்கி தன்னிறைவுடன் தங்களது வாழ்க்கைத் தரத்தினை உயர்த்திக் கொண்டனர். இம்மக்கள் செங்கல் கட்டுமானத்தில் வீடுகள், தொழிற்கூடங்கள் அமைத்துள்ளதும் பிற நாட்டினருடன் வாணிபம் மேற்கொண்டுள்ளதும் நகரநாகரிகத்தோடு வாழ்ந்திருந்தனர் என்று கூறுவதற்கு பொருத்தமானதாகும்.

2

பொருநை நம் பெருமை

பொருநை காண வாருங்கள்

தமிழர்களின் தொன்மையை அனைவரும் அறிந்து கொள்ளும் வகையில் திருநெல்வேலி மாவட்டத்தில் மிகப் பிரம்மாண்டமாக கட்டப்பட்டு, 20.12.2025 அன்று திறப்பு விழா காணும் பொருநை அருங்காட்சியகத்தின் சிறப்புகள் குறித்து நான் ஆற்றிய காணொளி உரை:

எல்லோருக்கும் என்னுடைய அன்பான தமிழ் வணக்கம்!

தமிழ்நாட்டின் முதலமைச்சராக, உங்கள் எல்லோரையும் திருநெல்வேலி நோக்கி அழைக்க தான் இந்த வீடியோ!

வரலாற்றை தெரிந்து கொள்வதும் - மீட்டெடுப்பதும் எதற்காக? வெறும், பழம்பெருமையை பேசி, அதில் மனநிறைவு அடைவதற்காகவா? இல்லை!

நாம் வந்த பாதையை தெரிந்து கொண்டு,எதிர்காலத்தில் இன்னும் முற்போக்காக, இன்னும் பரந்த மனப்பான்மையோடு வளர்வதற்கான தேடல் அது!

இந்தியத் துணைக்கண்டத்தின் வரலாறு, தமிழ்நிலப்பரப்பில் இருந்து தான் எழுதப்படவேண்டும் என்று தொடர்ந்து நான் சொல்லிகொண்டு வருகிறேன்.

இது ஏதோ தற்பெருமைக்காகவோ, மேடை அலங்காரத்துக்காகவோ பேசிய வெற்றுப் பேச்சு இல்லை. “அறிவியல்பூர்வமான உண்மை இது”- என்று நம் திராவிட மாடல் அரசு தொடர்ந்து மெய்ப்பித்துக் கொண்டு வருகிறது.

திருநெல்வேலியில் இருந்து திருச்செந்தூர் செல்லும் சாலையில் ஆதிச்சநல்லூர் இருக்கிறது.

தென்னிந்தியாவின்
நாகரிகத் தொட்டில்
பொருநை
ஆற்றங்கரை

மதுரைக்கு பக்கத்தில் கீழடி அகழ்வாய்வு கண்டுபிடிப்புகளைக் கொண்டு கீழடி அருங்காட்சியகத்தை மிகவும் கம்பீரமாக உருவாக்கி இருக்கிறோம்.

அடுத்ததாக, இப்போது திருநெல்வேலியில் பொருநை அருங்காட்சியகத்தை திறந்து வைக்கிறேன்.

பொருநை ஆற்றங்கரை நாகரிகத்தில் நுண்-கற்கருவிக் காலம் தொடங்கி, இரும்புக் காலம், தொடக்க வரலாற்று காலம்- என்று தொடர்ச்சியாக வரலாற்றுத் தடயங்கள் பொருநை ஆற்றங்கரைப் பகுதிகளில் ஏராளமாக கிடைக்கிறது.

குறிப்பிட்டு சொல்ல வேண்டுமென்றால், சங்ககாலத் துறைமுக நகரமான கொற்கையைபற்றி, சங்க இலக்கியங்களில் முழுமையாக பார்க்கலாம். ‘தாலமி’, ‘பிளினி’ போன்ற அயல்நாட்டவர்களும் இதுபற்றி நிறையவே எழுதி இருக்கிறார்கள்.

கொற்கையில் கிடைக்கக்கூடிய முத்துக்களைப் பற்றி சிறப்பாக குறிப்பிடுகிறார்கள்.அதேபோல ஆதிச்சநல்லூர், சிவகளை போன்ற இடங்களில், இரும்புக் காலத்தைச் சார்ந்த புதைப்பிடப் பகுதிகளும், மக்கள் வாழ்விடப் பகுதிகளும் கண்டுபிடிக்கப்பட்டு இருக்கிறது.

திராவிட மொழிகளின் ஒப்பிலக்கண நூலை உலகுக்கு கொடையாக கொடுத்த ராபர்ட் கால்டுவெல் அவர்கள், 1876- ஆம் ஆண்டிலேயே கொற்கையை ஆய்வு செய்ததோடு, சிறிய அளவிலே அகழாய்வும் செய்தார். அதேபோல, ஜாகர் -அலெக்ஸாண்ட்ரே நூறு ஆண்டுகளுக்கு முன்பே ஆதிச்சநல்லூரில் அகழாய்வு செய்திருக்கிறார்கள்.

பொருநை ஆற்றங்கரையில் தான் கொற்கை, ஆதிச்சநல்லூர், சிவகளை போன்ற தொல்லியல் சிறப்பு மிக்க ஊர்கள் உள்ளன. இதில் கொற்கை இடைச் சங்க காலத்தில் பாண்டியர்களின் தலைநகரமாகவும் துறைமுகமாகவும் இருந்தது.

தமிழர் பண்பாட்டின் தொன்மையையும் சிறப்பையும், உலக அரங்கிற்கு கொண்டு செல்லும் முயற்சியில் நம் அரசு முழு வீச்சில் ஈடுபட்டு வருகிறது.

பொருநை ஆற்றங்கரையின் முக்கியமான இடங்களில் தமிழ்நாடு தொல்லியல் துறை விரிவாகநடத்திய அகழாய்வுகளில், ஏராளமான சான்றுகள் வெளியே கொண்டுவரப்பட்டு இருக்கிறது.

ஆதிச்சநல்லூர், சிவகளையில் நடத்தப்பட்ட அகழாய்வுகளில் -வெண்கலம், தங்கம், செம்பு, இரும்பு என்று பல்வேறு உலோகங்களால்செய்யப்பட்ட தொல்பொருட்கள் வெளிக்கொண்டு வரப்பட்டு இருக்கிறது. இதில் குறிப்பாக, இரும்பை உருக்கி கருவிகளை செய்யும் தொழில்நுட்பம் தமிழ்நாட்டில்தான் சிறப்பாக இருந்திருக்கிறது.

தொல்லியல் அகழாய்வுகளில் இதுவரை கிடைத்த இரும்பு பொருட்களிலேயே, காலத்தால் முந்தைய இரும்பு சிவகளையில் கிடைத்த இரும்பு தான் என்பதும் அறிவியல் அடிப்படையிலானகாலக்கணிப்பு முடிவுகள் மூலமாக உறுதி செய்யப்பட்டிருக்கிறது. உலகின் தலைசிறந்த ஆய்வறிஞர்கள் முன்னிலையில இந்த அறிவிப்பை ஜனவரி 2025-ல் நான் உலகுக்கு வெளியிட்டேன்.

பொருநை ஆற்றங்கரை அகழாய்வுகளில் கிடைத்த தொல் பொருட்கள் இந்த பகுதியிலேயே அருங்காட்சியகம் அமைத்து காட்சிப்படுத்தப்படும்என்று அறிவித்து, அந்தப் பணிகள் நிறைவடைந்துஇப்போது பிரமாண்டமாக உருவாகியிருக்கிறது.

தன்பொருந்தம், தண்பொருநம் என்றும் கல்வெட்டுகள் சொல்கிறது.

தமிழி எழுத்துகள் கொண்ட பானை ஓடுகள் கிடைத்துள்ளன.

மின் விளக்குகளின் அலங்காரத்தில் ஜொலிக்கின்றபொருநை அருங்காட்சியகத்தின் டிரோன் காட்சிகளை உங்களில் பலர் பார்த்திருப்பீர்கள் என்று நம்புகிறேன்.

2023- ஆம் ஆண்டு மார்ச்சில் நான் திறந்து வைத்த கீழடி அருங்காட்சியகத்தை, 2025 நவம்பர் வரை, 12 லட்சத்து 50 ஆயிரம் பேர் உலகெங்கும் இருந்து வந்து பார்த்திருக்கிறார்கள். நேரில் வர முடியாதவர்களும் இருந்த இடத்தில் இருந்தே, இணையவழி மூலமாக கீழடி அருங்காட்சியகத்தை காட்சியாக சுற்றிப் பார்க்க ‘மெய்நிகர் இணையவழி சுற்றுலா’வை உருவாக்கி கொடுத்திருக்கிறோம்!

இப்போது பொருநை அருங்காட்சியமும் 55 ஆயிரம் சதுர அடியில் மரபார்ந்த வடிவமைப்போடு, அதேநேரத்தில் அதிநவீன தொழில்நுட்பங்களோடு உருவாக்கப்பட்டிருக்கிறது.

டிஜிட்டல் முறையில் உருவகப்படுத்தப்பட்ட இரும்பு உருக்கு செயல்முறை, 5-D முறையில் தமிழ் நிலங்களின் வழியாக உணர்வுப் பயணம், பாண்டி விளையாட்டு தரை ஒளிப் படக் காட்சி, தொல்லியல் வரலாற்றுப் பின்புலம் குறித்த டாக்குமெண்டரி படம், மெய்நிகர் படகு அனுபவ உருவகம், ஆற்றுப் பள்ளத்தாக்கு நாகரிகங்களின் தொடுதிரை காட்சி, கருவிகளை உருவாக்கும் ஊடாடு சுவர் அதாவது இண்டராக்டிவ் வால், டிஜிட்டல் ஃபீட்பேக் மையம், பொருநையின் குரல் பயணம் போன்ற ஏராளமான நவீன தொழில்நுட்ப அனுபவங்கள் இங்கே நீங்கள் பெறலாம்!

பொன்திணித்த
புனல் பெருகும்
பொருநை – கம்பன்

இந்தியாவில் நடைபெற்ற அகழாய்வுகளில் ஆதிச்சநல்லூரில் நடந்த அகழாய்வே முதல் அகழாய்வு ஆகும்.

தமிழர்களின் தொன்மையை, தமிழர்களின் நாகரிகமேன்மையைஇந்ததலைமுறையினருக்கு மட்டுமல்ல, ஜென்-சீ உள்ளிட்ட அடுத்தடுத்த தலைமுறைக்கும் எடுத்து கொண்டு போக வேண்டும் என்று பார்த்து பார்த்து இவ்வளவும் செய்திருக்கிறோம்.

என்னுடைய இந்த எண்ணம் ஈடேற நீங்கள் எல்லோரும் உங்கள் குடும்பங்களோடு கீழடி அருங்காட்சியகத்தையும், பொருநை அருங்காட்சியத்திற்கும் அணி அணியாக வரவேண்டும் என்று அன்போடு, உரிமையோடுஅழைக்கிறேன்.

நம்முடைய பெருமையையும் வரலாற்றையும் நாம் முதலில் தெரிந்து கொண்டால் தான்,உலகத்திற்கு அதை எடுத்துச் சொல்ல முடியும்.அதற்கான நம் அரசின் முயற்சிக்கு உங்கள் ஆதரவு வேண்டும்!

கீழடி, நம் தாய்மடி!

பொருநை, தமிழரின் பெருமை!- என்றுஉரக்கச் சொல்வோம்!

பொருநையில் கண்டெடுக்கப்பட்ட பொருட்கள்

- ஈமக்காட்டில் பெரிய தாழிகள்
- எலும்புகள்
- மட்பாண்டங்கள்
- பொன்கள்
- உயர்தர வெண்கலம்
- இரும்பு
- கிண்ணங்கள்
- பொன் தகடு
- பெண் உருவம்
- எறிவேல்
- ஈட்டி
- குத்துவாள்
- கூர்மையான வாள்
- கைக்கோடரி
- கோடரி
- கேடயம்
- கருப்பு மட்பாண்டங்கள்
- சிவப்பு மட்பாண்டங்கள்
- விலங்கு உருவங்கள்
- அணிகலன்கள்
- வளையல்
- மோதிரம்

13 ஏக்கர் பரப்பளவில்...

இப்போது நான் மகிழ்ச்சியில் மட்டுமல்ல, பெருமையாகவும் நிற்கிறேன். அதற்கு காரணம் என்னவென்றால், நேற்று, பொருநை அருங்காட்சியகத்தைத் திறந்து வைத்த பெருமிதத்தில் கம்பீரமாக உங்கள் முன்பு நான் நின்று கொண்டிருக்கிறேன்!

"பொருநை - தமிழரின் பெருமை!"

"இந்தியத் துணைக்கண்டத்தின் வரலாறு, இனிமேல், தமிழ் நிலத்தில் இருந்துதான் தொடங்கி எழுதப்படவேண்டும்!" என்ற நம்முடைய வாதத்திற்கான சான்றுகளை அறிவியல் பூர்வமாக நாம் நிறுவி இருக்கிறோம்!

நாம் ஏன் கீழடி - பொருநை என்று நம்முடைய வரலாற்று தரவுகளை, தொடர்ந்து உரக்கப் பேசிக் கொண்டிருக்கிறோம்? தமிழர்களான நம்முடைய பண்பாடு தனித்துவமானது, முற்போக்கானது! இந்தியத் துணைக்கண்டத்தில் நாகரிகத்தின் தொட்டிலாகவும், உச்சமாகவும் இருந்தது, நம்முடைய தமிழ்நிலம்தான்! அதற்கு பல இலக்கியச் சான்றுகள் இருக்கிறது! ஆனால், இலக்கியம் மட்டுமே ஒருபோதும் வரலாற்று சான்றாகாது! எனவே, அதை அறிவியல் ரீதியாக மெய்ப்பிக்கவும், தொல்லியல் சான்றுகளை சேகரிக்கவும் நாம் மேற்கொள்ளும் காலப் பயணம்தான் அகழாய்வுகள்!

இந்த நிலையில்தான், கீழடி தொடங்கி பல வரலாற்று இடங்களில் நாம் மேற்கொள்ளும் அகழாய்வுகளுக்கு, ஒன்றிய பா.ஜ.க. அரசு எப்படியெல்லாம் தடை போடுகிறார்கள் என்று தொடர்ந்து அம்பலப்படுத்திக் கொண்டிருக்கிறோம்! அவர்களுடைய எண்ணம்

என்ன? தமிழர்களின் வரலாற்றுத் தொன்மையை நிரூபிக்கும் ஆய்வுகள் எதுவும் நடைபெறக் கூடாது; மீறி நடந்தாலும், அந்த ஆய்வு முடிவுகள் வெளியே வந்துவிடக் கூடாது!

இப்படிப்பட்ட எண்ணம் கொண்ட, தமிழ் மீதும் – தமிழர்கள் மீதும் வெறுப்போடு செயல்படுபவர்களை எதிர்த்துதான் நாம் இன்றைக்கு உறுதியுடன் எதிர்த்துப் போராடிக் கொண்டிருக்கிறோம். இல்லாத சரஸ்வதி நதி நாகரிகத்தைத் தேடி அலைபவர்களுக்கு கண் முன்னே நாம் வெளியிடும் ஆய்வுகள் தெரிவதில்லை. அதற்காக நாம் சோர்ந்துவிட முடியுமா? நம்முடைய கடமையில் இருந்து நாம் பின்வாங்கிவிட முடியுமா? நம்முடைய வரலாற்றை விட்டுக்கொடுத்துவிட முடியுமா? நிச்சயம் முடியாது!

ஈராயிரம் ஆண்டுகால சண்டை இது! இதில் நாம் தோல்வி அடைந்துவிட மாட்டோம்! நாமும் தொடர்ந்து அடுக்கடுக்கான சான்றுகளை வெளியிட்டுக் கொண்டே இருக்கிறோம்! சான்றுகளை ஆய்வறிக்கைகளை வெளியிட்டுவிட்டால் மட்டும் போதுமா? அறிவுத்தளத்தில் மட்டும் போராடிக் கொண்டிருந்தால் போதுமா? அதையெல்லாம் மக்கள் மன்றத்தில் கொண்டு வைத்து இன்றைக்கு அந்தப் பணியை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம். அதற்காகத்தான் அருங்காட்சியகங்களை அமைத்துக் கொண்டு வருகிறோம்!

ஆதிச்சநல்லூரில் கிடைக்கப்பெற்ற தொல் பொருட்களைத் தொகுத்து பார்க்கும் போது பொருநை ஆற்றங்கரையில் 3,200 ஆண்டுகளுக்கு முன்னரே இரும்பினைக் கண்டுபிடித்து வார்ப்பிரும்பு, தேனிரும்பு, எஃகு முதலியவற்றைத் தயாரித்தல், கப்பல் கட்டுதல், கடல் வணிகம் போன்றவை சிறந்து விளங்கியதை அறிய முடிகிறது.

ஆதிச்சநல்லூர் அகழாய்வில் 847 பொருட்கள் கிடைத்துள்ளன.

13 ஏக்கர் நிலப்பரப்பில், 54 ஆயிரத்து 296 சதுர அடி பரப்பளவில், பொருநை அருங்காட்சி அரங்கத்தை நான் திறந்து வைத்திருக்கிறேன்! தமிழ்நாட்டின் முதலமைச்சராக, தமிழினத்தின் தலைமை இயக்கமான திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவராக மட்டுமல்ல, ஒரு தமிழனாகவும் நான் இன்றைக்கு பெருமைப்படுகிறேன். நான் இங்கே கேட்க விரும்புவது, உறுதியோடு உங்களை எல்லாம் நான் கேட்க விரும்புவது, நீங்கள் எல்லோரும் குடும்பத்துடன் சென்று, இந்த அருங்காட்சியகங்களை பார்க்க வேண்டும்! பார்ப்பீர்களா? பார்த்தே தீரவேண்டும்.

இந்த நேரத்தில், மற்றொரு விஷயத்தை நான் குறிப்பிட்டாக வேண்டும். கடந்த 2021–ஆம் ஆண்டு ஒன்றிய பட்ஜெட்டில் ஆதிச்சநல்லூர் அருங்காட்சியகம் அமைப்பதற்கு அறிவிப்பு வந்தது. அந்தப் பணிகள் இப்போது எந்த நிலையில் இருக்கிறது? இன்னும் அதற்கான பணிகள் எதுவும் தொடங்கவில்லை. ஆனால், நாம் ஆட்சிப் பொறுப்பிற்கு வந்த பிறகு தமிழ்நாடு தொல்லியல் துறை சார்பில், சிவகளை உள்ளிட்ட அகழாய்வுகளை மேற்கொண்டு இப்போது உலகமே திரும்பிப் பார்க்கக்கூடிய அளவிற்கு பொருநை அருங்காட்சியகத்தை உருவாக்கி இருக்கிறோம். அதனால், இந்த நேரத்தில் மாண்புமிகு திரு. மோடி அவர்களையும், மாண்புமிகு நிதியமைச்சர் திருமிகு நிர்மலா சீதாராமன் அவர்களையும் தமிழ்நாட்டில் கட்டியிருக்கக்கூடிய கீழடி அருங்காட்சியகத்திற்கு வந்து பார்க்கவேண்டும். இந்த கூட்டத்தின் மூலமாக, இந்த விழாவின் மூலமாக நான் அன்போடு அவர்களை அழைக்கிறேன். நீங்கள் வந்து பார்த்தால்தான் தமிழினுடைய நாகரிகம் எந்த அளவுக்கு தொன்மை கொண்டிருக்கிறது என்பது தெரியும்.



கொற்கையை ஆய்வு
செய்து உலகறியச்
செய்தவர் கால்டுவெல்.

இதை மிகச் சிறப்பாக உருவாக்கியிருக்கக்கூடிய மாண்புமிகு நிதியமைச்சர் திரு. தங்கம் தென்னரசு அவர்களுக்கும், கட்டி எழுப்பியுள்ள மாண்புமிகு அமைச்சர் திரு. எ.வ.வேலு அவர்களுக்கும், அரசு அலுவலர் அனைவருக்கும் என்னுடைய பாராட்டுக்களை, வாழ்த்துகளை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அமைச்சர் தங்கம் தென்னரசு அவர்கள் - தமிழ் ஆர்வலர்! தொல்லியல் ஆய்வாளர்! இயற்கையின் காதலர்! என்று பன்முகம் கொண்டவர் அவர்! இப்படி, தமிழ் மீதும், தொல்லியல் துறையிலும், தனிப்பட்ட ஆர்வம் கொண்ட ஒருவர் இந்த துறைக்கு அமைச்சராக இருப்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்! அதேபோல், தொல்லியல் துறை செயலாளராக இருக்கக்கூடிய நிதித்துறைச் செயலாளர் திரு.உதயச்சந்திரன், இ.ஆ.ப., அவர்களும் தொல்லியல் ஆய்வாளர்தான். தமிழ்நாட்டின் தனிப்பெருமையை உலகம் ஏற்றுக்கொள்ளும் வகையில், உயர்த்திக் காட்ட வேண்டும் என்ற அக்கறை கொண்டவர் உதயச்சந்திரன் அவர்கள்.

இப்படிப்பட்ட இரண்டு பேரும் சேர்ந்து ஏற்கனவே கீழடி அருங்காட்சியத்தை உருவாக்கி, பார்வையாளர்களிடம் அது மிகவும் ஹிட்டாகியிருக்கிறது! இப்போது, பொருநை அருங்காட்சியகத்தையும் உருவாக்கி தமிழ்ச் சமுதாயத்திற்கு ஒரு மாபெரும் வரலாற்றுக் கடமையை ஆற்றி இருக்கிறார்கள்.

நம்முடைய திராவிட மாடல் அரசு என்பது ஒரு கட்சியின் அரசு அல்ல; இனத்தின் அரசு என்று நான் தொடர்ந்து சொல்கிறேன். அதற்கான பெருமைமிகு சாட்சிதான், கீழடியும், இங்கு அமைந்திருக்கும் பொருநை அருங்காட்சியகமும்! வெளியில் நம்மை எதிர்க்கக்கூடியவர்கள், விமர்சனம் செய்யக் கூடியவர்கள், "தமிழ் என்றாலே தி.மு.க-தான்; வேறு யாராலும் இதையெல்லாம் யோசிக்கக் கூட முடியாது" என்று மனதிற்குள் நிச்சயம் பாராட்டிக் கொண்டிருப்பார்கள்!

(21.12.2025 அன்று பொருநை அருங்காட்சியகத்தை திறந்து வைத்து பின்னர், பாளையங்கோட்டையில் நடைபெற்ற அரசு விழாவில் ஆற்றிய உரை)

பொருநை ஆய்வுகள், தமிழ்நாட்டின் வரலாற்றை தமிழ்நாட்டின் தென்பகுதியில் இருந்து தொடங்க வேண்டும் என்ற நிலைப்பாட்டுக்கு நம்மை இட்டுச் செல்கிறது.

3

இரும்பின் தொன்மை

தமிழ் நிலப்பரப்பில் இருந்துதான் இரும்பின் காலம் தொடங்கியது!

இந்திய நாட்டுக்கு மட்டுமல்ல. உலகிற்கே மீண்டும் சொல்கிறேன். தமிழ் நிலப்பரப்பில் இருந்து தான் இரும்பின் காலம் தொடங்கியது என்ற மாபெரும் மானுடவியல் ஆய்வுப் பிரகடனத்தை இந்த நிகழ்ச்சி வாயிலாக அறிவிக்கிறேன்! என்று 23.1.2025 அன்று சென்னை, அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் தொல்லியல் துறை சார்பில் நடைபெற்ற விழாவில் நான் குறிப்பிட்டேன். எனது உரை:

“கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளொடு முன் தோன்றிய மூத்தகுடி நமது தமிழ்க்குடி”-என்று பெருமை பொங்க நாம்சொன்னபோது வெற்றுப் பெருமை பேசுகிறார்கள் என்று, சிலர் விமர்சித்தார்கள். அதற்குக் காரணம், தமிழ்ச் சமுதாயத்தில் வந்து புகுந்த இழிவுகளும் - அதனால் ஏற்பட்ட தேக்க நிலையும்தான் காரணம்!

இந்த இடைக்கால இழிவுகள் நீங்க காலம்தோறும் எண்ணற்ற புரட்சியாளர்கள் தோன்றினார்கள். அய்யன் வள்ளுவர், வள்ளலார் தொடங்கி அயோத்திதாசப் பண்டிதர் என அந்தப் பட்டியல் நீளமானது… அவர்களின் தொடர்ச்சியாகத்தான், பகுத்தறிவையும் இனமான உணர்வையும் ஊட்டினார் தந்தை பெரியார்!

பண்பாட்டு ரீதியாக அடிமைப்படுத்தப்பட்டுக் கிடந்த நமது தமிழினத்தை, “ஏ தாழ்ந்த தமிழகமே”-என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் தன்னுடைய சிந்தனையாலும், நா நயத்தாலும் தட்டியெழுப்பினார்! சங்க இலக்கியத்தில்சொல்லப்பட்ட நம்முடைய வாழ்வியலை திராவிட இயக்க மேடைகள்தோறும் எடுத்துச் சொன்னோம்! இலக்கியங்கள் படைத்தோம்.

முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் “இமய வரம்பினிலே வீரம் சிரிக்கும்… இங்கு வீணை நரம்பினிலே இசை துடிக்கும்… அதுவும் மானம் மானம் என்றே முழங்கும்!”-என்றுசங்கத்தமிழைச் சாறெடுத்து, நம்முடைய வரலாற்றை எடுத்துச் சொன்னார்!

ஆனால், இந்த இலக்கியப் பெருமைகளைமெய்ப்பித்து, பரந்துபட்டு வாழ்ந்த தமிழினத்தின் புதையுண்ட வரலாற்றை மீட்டெடுத்து, அறிவுலகத்துக்கு அறிவிக்கவேண்டும் என்றும்; வரலாற்றுப் படிப்பினைகள் வழியாக, முன்னேறும் நிகழ்காலத்தில் இருந்து, மேலும் சிறப்பான எதிர்காலத்துக்கு தமிழர்களைவழிநடத்த வேண்டும் என்றும், நம்முடையஉழைப்பை செலுத்தி வருகிறோம்! அந்த உணர்வோடுதான் நாம் இங்கு கூடியிருக்கிறோம்! ஐம்பெரும் விழாவாக இந்த விழாவை நடத்திக்கொண்டு இருக்கிறோம்!

- இரும்பின் தொன்மையை நாட்டுக்கு அறிவித்தல்
- 'இரும்பின் தொன்மை' நூலை வெளியிடுதல்
- கீழடி திறந்தவெளி அருங்காட்சியகத்துக்கும்
- கங்கைகொண்ட சோழபுரம் அருங்காட்சியகத்துக்கும் அடிக்கல் நாட்டுதல்

கீழடி இணைய தளத்தைத் தொடங்கி வைத்தல் என்று தமிழ்ப் பண்பாட்டை உலகுக்குச் சொல்லும் விழாவாக இந்த விழா சிறப்பாக நடந்து கொண்டு இருக்கிறது!

தொன்மையும் திண்மையும் வளமையும் பெருமையும் கொண்ட தமிழ்நாட்டின் சிறப்பை வெளிப்படுத்தும் விழாவாக இந்த விழாவை ஏற்பாடு செய்திருக்கும், மாண்புமிகு அமைச்சர் தங்கம் தென்னரசு அவர்களையும், அரசு முதன்மைச் செயலாளர் திரு. உதயச்சந்திரன், இ.ஆ.ப., ஆகிய இருவருக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த பாராட்டுகள்! வாழ்த்துகள்!

இந்த விழாவின் மூலம் முக்கியமான அறிவிப்பு ஒன்றை வெளியிடப் போவதாக நேற்று சொல்லியிருந்தேன்... பலரும் என்ன அறிவிப்பு என்று கேட்டுக்கொண்டே இருந்தார்கள். இந்த நிகழ்ச்சிக்கு வருகின்ற வரையில் கேட்டுக்கொண்டே இருந்தார்கள். தமிழர்களின் தொன்மையை உலகத்திற்கே சொல்லும் ஒரு மாபெரும் ஆய்வுப் பிரகடனத்தை இப்போது நான் அறிவிக்கப் போகிறேன்... இங்கு கூடியிருப்பவர்களும், நேரலையில் இந்த விழாவை பார்ப்பவர்களும் கவனமாக கேளுங்கள்.

தமிழ் நிலப்பரப்பில் இருந்துதான் இரும்பின் காலம் தொடங்கியது! இந்திய நாட்டுக்கு மட்டுமல்ல. உலகிற்கே மீண்டும் சொல்கிறேன். தமிழ் நிலப்பரப்பில் இருந்துதான் இரும்பின் காலம் தொடங்கியது என்ற

மாபெரும் மானுடவியல் ஆய்வுப் பிரகடனத்தை இந்த நிகழ்ச்சி வாயிலாக அறிவிக்கிறேன்!

5ஆயிரத்து 300 ஆண்டுகளுக்கு முன்பே 'உருக்கு இரும்பு தொழில்நுட்பம்' தமிழ் நிலத்தில் அறிமுகமாகிவிட்டது! இப்போது, தமிழ்நாட்டில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வுகள் மூலம் அண்மையில் கிடைக்கப்பெற்ற காலக்கணக்கீடுகள் இரும்பு அறிமுகமான காலத்தை கி.மு. 4000-ஆம் ஆண்டின் முதற்பகுதிக்குக் கொண்டு சென்றிருக்கிறது.

தென்னிந்தியாவில், குறிப்பாக தமிழ்நாட்டில்5300 ஆண்டுகளுக்கு முன்பு இரும்பு அறிமுகம் ஆகியிருக்கிறது என்று உறுதியாக சொல்லலாம். இதை ஆய்வு முடிவுகளாகவே நான் அறிவிக்கிறேன். தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையால் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வுகளில் சேகரிக்கப்பட்ட மாதிரிகள் உலகத்தின் தலைசிறந்த ஆய்வகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

- புனே நகரில் இருக்கும் பீர்பால் சகானி தொல் அறிவியல் நிறுவனம்,
- அகமதாபாத் நகரில் இருக்கும் இயற்பியல் ஆராய்ச்சி ஆய்வகம் ஆகிய தேசிய அளவில்புகழ்பெற்ற ஆய்வு நிறுவனங்களுக்கும் பன்னாட்டு அளவில் உயரிய நிறுவனமான அமெரிக்க நாட்டின் புளோரிடா மாநிலத்தில் இருக்கும் பீட்டா ஆய்வகத்துக்கும் - மாதிரிகள், பகுப்பாய்வுக்கு அனுப்பிவைக்கப்பட்டது. தேசிய நிறுவனங்களில் OSL பகுப்பாய்வுக்கும், பீட்டா ஆய்வகத்தில் கதிரியக்க காலப் பகுப்பாய்வுக்கும் ஒரே தாழியிலிருந்து மாதிரிகளை அனுப்பி வைத்தோம். இப்படியான மூன்று நிறுவனங்களிடம் இருந்தும் ஒரே மாதிரியான பகுப்பாய்வு முடிவுகள் பெறப்பட்டிருக்கிறது.

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை பல்வேறு ஆய்வு நிறுவனங்களுக்கு மாதிரிகளை அனுப்பி பெறப்பட்ட முடிவுகளை, கூர்ந்து ஒப்பாய்வு செய்ததில் ஒரே மாதிரியான முடிவுகள் கிடைக்கிறது. இப்போது கிடைத்திருக்கும் கதிரியக்கக் காலக்கணக்கீடுகள் மற்றும் OSL பகுப்பாய்வு காலக்கணக்கீடுகள் அடிப்படையில் கி.மு.3345-லேயே, தென்னிந்தியாவில் இரும்பு அறிமுகமாகிவிட்டது என்று தெரிய வருகிறது.

அதற்கான ஆய்வு முடிவுகள் இதோ...

இந்த பகுப்பாய்வு முடிவுகள், வெளிநாடுகள் மற்றும் இந்தியாவில் இருக்கும் தொல்லியல் அறிஞர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அவர்கள் எல்லோரும் இரும்பின் தோற்றத்தையும் பண்டைய தொழில்நுட்பத்தைப் பற்றியும் ஆய்வு செய்துவரும் அறிஞர் பெருமக்கள். அந்த அறிஞர் பெருமக்கள் எல்லோரும் இந்த அவையில் கூடியிருக்கிறார்கள். இவர்கள்எல்லோரும் ஒருசேர தமிழ்நாடு அரசையும், தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையின் ஆய்வு முன்னெடுப்புகளையும் வெகுவாகபாராட்டியிருக்கிறார்கள்.

இரும்பின் காலம் குறித்த முடிவுகளுக்கு ஆதரவாகவும் - கண்டுபிடிப்புகளை பாராட்டியும் இருக்கிறார்கள். இது போன்று பகுப்பாய்வு முடிவுகள் ஆய்வாளர்களுக்கு புதிய உத்வேகத்தை அளித்திருக்கிறது.

கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத் தகைசால் பேராசிரியர் 'பத்மஸ்ரீ திலீப்குமார் சக்கரவர்த்தி' அவர்களும், ஒன்றிய அரசின் தொல்லியல் துறையில் பணியாற்றி ஓய்வு பெற்றிருக்கும் 'முனைவர் ராகேஷ் திவாரி' அவர்கள் உட்பட எல்லா அறிஞர் பெருமக்களும் பகுப்பாய்வு முடிவுகளைப் பாராட்டி தங்களின் கருத்துகளை சொல்கிறார்கள்.

இவை எல்லாவற்றையும் தொகுத்துதான் 'இரும்பின் தொன்மை' என்ற நூல் வெளியிடப்பட்டிருக்கிறது. தேசிய அளவில் தொல்லியலில் வல்லுநராக இருக்கும் ஆய்வாளர்களிடம் பகுப்பாய்வு முடிவுகள் பற்றி கருத்து பெறப்பட்டு, அந்த அறிஞர்களின் கருத்துகளும்இந்தநூலில்இடம்பெற்றிருக்கிறது.

அகழாய்வு செய்யப்பட்ட இடங்களில் இருக்கும் இரும்புப் பொருட்களின் உலோகவியல் பகுப்பாய்வும், இரும்புத்தாது இருக்கும் தொல்லியல் தளங்களில் எதிர்காலத்தில் மேற்கொள்ளவுள்ள அகழாய்வுகளும் இந்தக் கண்டுபிடிப்புகளுக்கு மேலும் வலுசேர்க்கும்; சான்றுகளை வழங்கி தெளிவுபெற வைக்கும். அப்படியான வலுவான சான்றுகளுக்காக நம்பிக்கையோடு நாம் காத்திருப்போம்.



இருந்தாலும், அண்மைக்கால அகழாய்வு முடிவுகள் வாயிலாக தமிழ்நாட்டில் மட்டுமல்ல, இந்திய அளவில் மட்டுமல்ல, உலகளவில்இரும்புத் தாதுவிலிருந்து, இரும்பை பிரித்துஎடுக்கும் தொழில்நுட்பம் தமிழ் நிலப்பரப்பில் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது என்று பெருமிதத்தோடு கூறுவோம்.

அதாவது, 5300 ஆண்டுகளுக்கு முன்பு தமிழ் நிலப்பரப்பில் இரும்பு அறிமுகப்படுத்தப்பட்டு இருப்பதை அறிவியல் அடிப்படையில் நிறுவியிருக்கிறோம் என்று மட்டற்ற மகிழ்ச்சியுடன் உலகுக்கு நான் அறிவிக்கிறேன். இது தமிழுக்கும், தமிழினத்துக்கும், தமிழ்நாட்டுக்கும், தமிழ் நிலத்துக்கும் பெருமை! உலக மானுட இனத்துக்கு தமிழ்நிலம் வழங்கும் மாபெரும் கொடை என்றே இதை நாம் கம்பீரமாகசொல்லலாம்.

தமிழ்த்தாயின் தலைமகனான பேரறிஞர் அண்ணாவின் பெயரில் அமைந்திருக்கும் இந்த அறிவுச் சுரங்கத்தில் நடைபெறும் இந்த விழாவின் வழியாக பெருமையுடன்சொல்கிறேன்.

"பேரறிஞர் அண்ணா அவர்களே! இதோ நமது உயர்வான தமிழ்நாட்டைப் பாருங்கள்...!" - "அன்று கிண்டல் கேலி பேசியவர்கள் எல்லாம் நம்மை கற்பனாவாதிகள் என்று குற்றம் சொன்னவர்கள் எல்லாம் வாயடைத்து நிற்கிறார்கள் பாருங்கள்" - "இலக்கியத்தில் இருப்பதெல்லாம் வரலாறு ஆகாது" என்று சிறுமைப்படுத்தி பேசியவர்கள் எல்லாம் அறிவியல்பூர்வமாக நம்முடைய வரலாற்றை நிரூபணம் செய்வதைக் கண்டு திகைத்து நிற்கிறார்கள் பாருங்கள்!

இந்தியாவின் வரலாறு இனி தமிழ் நிலத்திலிருந்துதான் எழுதப்படவேண்டும் என்று நான் தொடர்ந்து சொல்லிக் கொண்டு வருகிறேன். அதை மெய்ப்பிக்கும் ஆய்வுகளை தமிழ்நாடு தொல்லியல் துறை தொடர்ச்சியாக செய்து வருகிறது. இந்த ஆய்வுகள், பல்வேறு திருப்புமுனைகளையும் உருவாக்கி வருகிறது.

- **தமிழ்நாட்டில் நகர நாகரிகமும் எழுத்தறிவும் கி.மு. 6-ஆம் நூற்றாண்டே தொடங்கிவிட்டது என்று கீழடி அகழாய்வு முடிவுகள் நிறுவியிருக்கிறது.**
- **பொருநை ஆற்றங்கரையில் 3 ஆயிரத்து200 ஆண்டுகளுக்கு முன்பு வேளாண் பயிர்த் தொழிலில் நெல் பயிரிடப்பட்டிருக்கிறது என்று சிவகளை அகழாய்வு முடிவு வெளிப்படுத்தி இருக்கிறது.**
- **இதற்கு முன்பு, தமிழ்நாட்டில் இரும்பின் அறிமுகம் 4 ஆயிரத்து 200 ஆண்டுகளுக்கு முன்பே இருந்ததை கிருஷ்ணகிரி மாவட்டம் மயிலாடும்பாறை அகழாய்வு மூலம் தமிழ்நாடு சட்டமன்றத்தில் நான் உலகுக்கு அறிவித்திருக்கிறேன்.**

இத்தகைய அகழாய்வு முடிவுகள் தமிழ்நாட்டு வரலாற்றுக்கு மட்டுமல்லாமல் இந்தியத் துணைக்கண்ட வரலாற்றுக்கே முக்கிய திருப்புமுனையாக திகழ்ந்து வருகிறது. இதுபோன்ற ஆய்வுகளை தொல்லியல் துறை தொடர்ந்து செய்யவேண்டும் என்று துறையின் அமைச்சர் மாண்புமிகு தங்கம் தென்னரசு அவர்களையும் - துறை ஆணையரையும் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ், தமிழ் நிலம், தமிழ்நாடு குறித்து நாம்இதுவரை சொல்லி வந்ததெல்லாம் இலக்கியப் புனைவுகள் அல்ல; அரசியலுக்காகச் சொன்னவை அல்ல; எல்லாம் வரலாற்று ஆதாரங்கள். உலக அறிஞர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டவை என்று மெய்ப்பிக்க வேண்டிய கடமையை நம்முடைய திராவிட மாடல் அரசு எடுத்துக் கொண்டுள்ளது! ஏற்றுக் கொண்டுள்ளது!

தமிழினின் பெருமையை தமிழினத்தின் தொன்மையை உலகம் அங்கீகரித்து ஏற்றுக்கொண்டதை சொல்லும் வரலாற்றுப் பெருமைமிக்க இந்த விழா, நாம் வாழும் காலத்தில், நான் ஆளும் காலத்தில் நடைபெறுவது என் வாழ்நாளில்கிடைத்திருக்கக்கூடிய பெருமை! பெருமையிலும் பெருமை! பெறுதற்கரிய பெருமை!

இந்தப் பெருமையை நம்முடையகுழந்தைகளிடம் நாம் எடுத்துச் சொல்லவேண்டும். இப்படிப்பட்ட பெருமைமிக்க தமிழ்ச்சமூகம், உலகுக்கே வழிகாட்டும் அறிவார்ந்த சமூகமாக வளரவேண்டும் என்று எதிர்காலத்துக்கான திசையை காட்டவேண்டும்! பழம்பெருமையை பேசுவது என்பது புது சாதனைகள் படைக்க ஊக்கமாக அமையவேண்டும்! என்பதை மட்டும் இந்த நேரத்தில் எடுத்துச் சொல்லி விடைபெறுகிறேன்.

நன்றி! வணக்கம்.

அறிஞர்கள் ஏற்றுக் கொள்கிறார்கள்

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையால் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வுகளில் சேகரிக்கப்பட்ட மாதிரிகள் உலகின் தலைசிறந்த ஆய்வகங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டன. புனே நகரிலுள்ள பீர்பால் சகானி தொல்அறிவியல் நிறுவனம், அகமதாபாத் நகரிலுள்ள இயற்பியல் ஆராய்ச்சி ஆய்வகம் ஆகிய தேசிய அளவில் புகழ்பெற்ற ஆய்வுநிறுவனங்களும், பன்னாட்டளவில் உயரிய நிறுவனமான அமெரிக்க நாட்டு புளோரிடா மாநிலத்திலுள்ள பீட்டா ஆய்வகமும் இதனை ஒப்புக் கொண்டுள்ளன. இந்த பகுப்பாய்வு முடிவுகள் இந்தியாவில் உள்ள தொல்லியல் அறிஞர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டன. அவர்களும் ஏற்றுக்கொண்ட பிறகுதான் நாட்டுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. 5300 ஆண்டுகளுக்கு முன்னர் தமிழ் நிலப்பரப்பில் இரும்புஅறிமுகப்படுத்தப் பட்டுள்ளது என்பதை இவர்கள் அனைவரும் ஒப்புக் கொண்டுள்ளார்கள்.

“விந்திய மலைக்கு வடக்கே அமைந்துள்ள பண்பாட்டு இடங்கள் செப்புக் காலத்தில் இருந்தபோது, விந்தியத்தின் தெற்கே வணிகத்திற்குப் பயன்படுத்தும் அளவிற்கு செப்புத் தாது குறைவாக கிடைத்தன. ஆனால், செம்பைவிட வலிமையானஇரும்பு பயன்பாட்டிற்கு வந்துவிட்டது. எனவே, வடஇந்தியாவின் செப்புக்காலமும் தென்னிந்தியாவின் இரும்புக் காலமும் சமகாலத்தவை” என்று இந்த ஆய்வு முடிவுகள் கூறுகின்றன.

- **தமிழ்நாடு அரசுத் தொல்லியல்துறையால் மேற்கொள்ளப்பட்டுவரும் அகழாய்வு முடிவுகள் பல்வேறு திருப்புமுனைகளை ஏற்படுத்தியுள்ளன. தமிழ்நாட்டில் நகர நாகரிகமும். எழுத்தறிவும் கி.மு. ஆறாம் நூற்றாண்டளவிலே தொடங்கிற்று என்று கீழடி அகழாய்வு முடிவுகள் அறிவியல் அடிப்படையில் நிறுவியுள்ளன.**
- **பொருநை ஆற்றங்கரையில் 3200 ஆண்டுகளுக்கு முன்னர் வேளாண் பயிர் தொழிலில் நெல் பயிரிடப்பட்டுள்ளது என்பதை சிவகளை அகழாய்வு முடிவு வெளிப்படுத்தியது.**
- **அதனைத் தொடர்ந்து கிருஷ்ணகிரி மாவட்டம் மயிலாடும்பாறை அகழாய்வின் மூலம் தமிழ்நாட்டில்இரும்பின் அறிமுகம் 4200 ஆண்டுகளுக்கு முன்னர் நடைபெற்றது என்பதை உறுதி செய்கிறது.**

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையால் இப்போது செய்து வரும் ஆய்வுகளின் மூலமாக கிடைக்கும் சான்றுகளும், அறிவியல் அடிப்படையிலான காலக்கணக்கீடுகளும் இதுவரை நாம் சொல்லி வந்த கருத்துகளை மீளாய்வு செய்யும் வகையில் அமைந்துள்ளன. அதனடிப்படையில்தான் தமிழ்நாட்டில் இரும்பு 5300 ஆண்டுகளுக்கு முன் அறிமுகமாகி இருக்க வேண்டும் என்று ஆய்வுகள் ஒப்புக் கொண்டுள்ளன.

இரும்பின் அறிமுக காலத்தை நிறுவுவதற்கான ஆய்வில்உலகளவில் தொல்லியல் ஆய்வாளர்கள் தொடர்ந்து ஈடுபட்டுவருகின்றனர். இரும்புத் தொழில்நுட்பம் ஆசியா மைனரில் கி.மு.1000 ஆண்டுவாக்கில் தோன்றியதாகவும் பின்னர் உலகின் பல பகுதிகளுக்கு பரவியதாகவும் கருதப்பட்டது. இதனை வைத்து ஒவ்வொரு நாடும் ஆய்வு செய்து வருகிறது. தமிழ்நாட்டின் ஆய்வு இதன் காலத்தை 5300 ஆண்டுகளாகக் கணித்துள்ளது.

இதனை கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தின் தெற்காசிய தொல்லியல் துறை பேராசிரியர் திலீப் குமார் ஏற்றுக் கொண்டுள்ளார். “இந்தக் கண்டுபிடிப்பு முக்கியத்துவம் வாய்ந்தது” என்று சொல்லி இருக்கிறார். “கதிரியக்கக் காலக்கணக்கீடுகள் தமிழ்நாட்டு மாதிரிகள் காலத்தால் முந்தியவை என்பதை மெய்ப்பிக்கின்றன” என்று பாரீசில் உள்ள பிரெஞ்சு தேசிய அறிவியல் ஆராய்ச்சி மையத்தின் பேராசிரியர் ஒஸ்மண்ட் போப்போராச்சி கூறியிருக்கிறார்.

இந்திய தொல்லியல் துறையின் முன்னாள் தலைமை இயக்குநர் முனைவர் ராகேஷ் திவாரி, “இந்திய தொல்லியல் துறையில் இது ஒரு திருப்புமுனை. இந்தக் காலக்கணக்கீடுகள் இந்தியாவிலும் உலகெங்கிலும் இரும்புத் தொழில் நுட்பத்தின் தொடக்க காலத்தை நிறுவுகின்றன” என்று சொல்லி இருக்கிறார்.

இரும்பு குறித்து இலக்கியம்

இரும்பு உருக்குதல், ஆயுதங்கள் செய்தல், வேளாண் உற்பத்திக்குத் தேவையான அடிப்படைக் கருவிகளை செய்தல் போன்ற தொழில்நுட்ப அறிவினைப் பெற்றிருந்தனர் என்பதை சங்க இலக்கியங்கள் எடுத்துரைக்கின்றன.

“இரும்பு ஊது குருகின் இடந்து இரை தேரும்”

“இரும்பு செய் தொடியின் ஏர ஆகி”

எஃகுறு மாந்தரின் இனைந்துகண் படுக்கும்

- ஆகிய அகநானூறு நூலின் வரிகள் இரும்பை ஆயுதமாக்கும் முறையையும் பயனையும் விரிவாக எடுத்துரைக்கின்றன.



4

தொல்லியல் முயற்சிகள்



காலத்தால் முந்தியவர்கள் நாம்

தமிழ்நாடு தொல்லியல் துறையால் மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள் மற்றும் அறிவியல் வழி ஆய்வுகளில் கிடைத்த முடிவுகள் தொடர்பாக 09.05.2022 அன்று தமிழ்நாடு சட்டமன்றத்தில் பேரவை விதி 110 இன் கீழ் ஒரு அறிக்கையை வாசித்தேன். அந்த அறிக்கை:

தமிழ்ச் சமூகத்தின் தொன்மை மற்றும் தொடர்ச்சியைஉறுதிசெய்து, உலகுக்கு அறிவித்திட தமிழ்நாடு தொல்லியல் துறை எடுத்துவரும் மகத்தானமுயற்சிகளை இந்த மாமன்ற உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் முன்னெடுக்கப்பட்ட பூம்புகார், கொற்கை, அழகன்குளம் உள்ளிட்ட சங்ககாலத் துறைமுக நகரங்களில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வுகளில் கிடைத்த ரோமானிய நாணயங்கள், மெருகூட்டப்பட்ட மட்பாண்டங்கள், அரேபியத் தீபகற்பத்தைச் சார்ந்தஅயலகப் பொருட்களை முன்னிறுத்தி, இந்தத்துறைமுகங்கள் வழியே சங்க காலத் தமிழர்கள்கடல்வழி வணிகத்தில் சிறந்து விளங்கினர் என்பதைச் சான்றுகளின் அடிப்படையில் நம்மால் நிறுவ முடிந்தது.

அதேபோல், அங்கே கிடைத்த அரியவகை சூதுபவள மணிகள், ஒளிர்மிகு நீலமணிகள் கொண்டு கங்கைச் சமவெளி மற்றும் வடமேற்கு இந்தியப்பகுதிகளுடன் தமிழர்கள் உள்நாட்டு வணிகம் மேற்கொண்டிருந்தது உறுதி செய்யப்பட்டது. கீழடி அகழாய்வில் வெளிப்பட்ட கட்டுமானங்கள், தொல்பொருட்களின் செய்நேர்த்தி, தொழில்நுட்பத்திறன், பொறியியல் நுணுக்கம் ஆகியவற்றை ஆராய்ந்து பார்த்ததில் சங்ககாலத் தமிழகத்தில் நன்கு முதிர்ச்சியடைந்த நகரப் பண்பாடு செழித்துவளர்ந்திருந்தது என்பதை உலகுக்கு நம்மால்அறிவிக்க முடிந்தது.

அதுமட்டுமல்ல; கீழடி, கொடுமணல் மற்றும் பொருந்தல் போன்ற இடங்களில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வுகள் மூலம் தமிழி எழுத்துக்களின் காலம் கி.மு. ஆறாம் நூற்றாண்டு என்று அறிவியல் அடிப்படையில் உறுதி செய்யப்பட்டது. மேலும், 2600 ஆண்டுகளுக்குமுன்னரே, தமிழ்க் குடிமக்கள் பரவலான எழுத்தறிவுபெற்ற சமூகமாக விளங்கினர் என்ற உண்மையைஅறிவுலகம் ஏற்றுக் கொண்டது நமக்கெல்லாம் பெருமையளிக்கக்கூடிய செய்தியாகும்.

அதைத் தொடர்ந்து, சென்ற ஆண்டு சிவகளைபகுதியில் அகழாய்வு செய்தபோது கிடைத்த நெல்மணிகளை பகுப்பாய்வு செய்து, பொருநை ஆற்றங்கரை நாகரிகம், 3200ஆண்டுகளுக்கு முற்பட்டது என்று அறிவிக்கப்பட்டது. தமிழ்நாடு தொல்லியல் துறை, அகழாய்வுகளை மேற்கொள்வதிலும், தொல்பொருட்களை ஆய்வுசெய்வதிலும் பல்வேறு நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி வருகிறது. காந்த அளவியல் பகுப்பாய்வு(*Magnetometer Survey*), ஆளில்லா வான்வழி ஊர்திஆய்வு (*Unmanned Aerial Survey*), தரை ஊடுருவல்தொலையுணர்வு மதிப்பாய்வு (*Ground Penetrating Radar Survey*) போன்ற புதிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி களஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

அதேபோல், அகழாய்வுகளில் கிடைக்கக்கூடிய தொல்பொருட்களை ஆய்வு செய்திட (1) தொல்தாவரவியல் (*Paleo Botany*), (2) தொல் விலங்கியல்(*Paleo Zoology*), (3) தொல் மரபணு ஆய்வு (*Ancient DNA Analysis*) (4) சுற்றுச்சூழல் தொல்லியல்(*Environmental Archaeology*) (5) மண் பகுப்பாய்வு (*Soil Analysis*), (6) உலோகவியல் (*Metallurgy Study*), (7) கடல்சார் ஆய்வு (*Marine Archaeology*) போன்றபல்துறை வல்லுநர்களுடன் இணைந்து பணியாற்றிட புகழ்பெற்ற நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் செய்யப்பட்டுள்ளன.

அவ்வாறு அறிவியல்வழி ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டதில் கிடைத்த ஆய்வு முடிவுகள் சிலவற்றை இந்த மாமன்ற உறுப்பினர்களுக்குத் தெரிவிப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்.

- **கீழடிக்கு அருகே அகரம் அகழாய்வுத் தளத்தில் சேகரிக்கப்பட்ட மண் மாதிரிகளை மகரந்தம் மற்றும் பைட்டோலித் முறையில் பகுப்பாய்வு செய்ததில், அங்கே நெற்பயிர்கள் பயிரிடப்பட்டிருப்பதற்கான சான்றுகள் கிடைத்துள்ளன.**
- **சிவகளை வாழ்விடப் பகுதியில் சேகரிக்கப்பட்ட மண் மாதிரிகளை ஆய்வு செய்ததில், அங்கே நீர்செல்லும் செங்கல் வடிகாலில் நன்னீர் சென்றுள்ளதாகவும், தேக்கி வைக்கப்பட்ட நீர்நிலையிலிருந்து இந்நீர் கொண்டு வரப்பட்டதாகவும் ஆய்வில் தெரிய வருகிறது.**

இவற்றுக்கெல்லாம் முத்தாய்ப்பாக, மிகமுக்கியமான ஒரு ஆய்வு முடிவை அறிவிப்பதில் நான் பெருமை கொள்கிறேன்.

கடந்த ஆண்டு, தமிழ்நாடு தொல்லியல் துறையால் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மயிலாடும்பாறை என்ற இடத்தில் ஈமச்சின்னங்கள் மற்றும் வாழ்விடப் பகுதியில் அகழாய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. பாறை ஓவியங்கள், புதிய கற்காலக் கருவிகள் என அரியவகை தொல்லியல் அடையாளங்களைக் கொண்ட மயிலாடும்பாறையின் வாழ்விடப் பகுதியில் 104 செ.மீ. மற்றும் 130 செ.மீ. ஆழத்தில் சேகரிக்கப்பட்ட இரண்டு கரிம மாதிரிகள், அமெரிக்காவிலுள்ள புளோரிடா மாநிலத்தின் பீட்டா பகுப்பாய்வுக் கூடத்துக்குஅனுப்பி வைக்கப்பட்டன. அந்தப் பகுப்பாய்வின் AMS (Accelerator Mass Spectrometry) காலக் கணக்கீடு முடிவுகள் தற்போது பெறப்பட்டுள்ளன. அவற்றின் சராசரி மைய அளவீட்டுக் காலம் முறையே கி.மு.1615 மற்றும் கி.மு. 2172 என்று காலக் கணக்கீடு செய்யப்பட்டுள்ளன.

இதன்மூலம், தமிழ்நாட்டில் இரும்பின் பயன்பாடு 4200 ஆண்டுகளுக்கு முன்னரே நிலவிவந்தது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

மனித இனம் இரும்பின் பயனை உணரத் தொடங்கிய பின்புதான், அடர்ந்த வனங்களை அழித்து வேளாண்மை செய்திடும் போக்கு உருவாகியுள்ளது. அந்த வகையில், தமிழ்நாட்டில் வேளாண்மைச் சமூகம் தொடங்கிய காலம் குறித்தான கேள்விகளுக்கு ஒரு தெளிவான விடை இன்று கிடைத்திருக்கிறது.

மேலும், இந்தியாவில் இரும்புக்காலப் பண்பாடு நிலவிய கங்கைச் சமவெளி, கர்நாடகம் உள்ளிட்ட 28 இடங்களில் இதுவரை AMS (Accelerator Mass Spectrometry) காலக் கணக்கீடுகள் செய்யப்பட்டுள்ளன. அவற்றில் தற்போது கிடைத்துள்ள மயிலாடும்பாறை ஆய்வு முடிவுகளான, 4200 ஆண்டுகளுக்கு என்பதே, காலத்தால் முந்தியது என்பது நமக்கெல்லாம் பெருமையளிக்கத்தக்க செய்தியாகும்.

அதேபோன்று, கருப்பு-சிவப்பு பானை வகைகள்4200 ஆண்டுகளுக்கு முன்னரே அதுவும் புதிய கற்காலத்தின் பிற்பகுதியில் அறிமுகப்படுத்தப்பட்டது என்பதையும் அறியமுடிகிறது.

இந்த இரும்புக்காலம் குறித்த முக்கியமான கண்டுபிடிப்பை கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் பத்மஸ்ரீ திலீப் சக்ரபர்த்தி, புனேடெக்கான் கல்லூரியின் முன்னாள் இயக்குநர் பத்மஸ்ரீ பேராசிரியர் பத்தையா, ஒன்றிய அரசின் தொல்லியல்துறையின் முன்னாள் இயக்குநர் பேராசிரியர் ராகேஷ்திவாரி, பனாரஸ் இந்து பல்கலைக்கழகத்தின்முன்னாள் பேராசிரியர் விபா திரிபாதி, கர்நாடகபல்கலைக்கழகப் பேராசிரியர் ரவி செட்டார் ஆகிய தலைசிறந்த வல்லுநர்கள் பாராட்டியுள்ளார்கள்.

தமிழ்நாடு தொல்லியல் துறையின் முயற்சிகள் இத்தோடு நின்றுவிடப் போவதில்லை. தொடர்ந்து தமிழர்கள் தடம்பதித்த இந்தியாவின் பிறபகுதிகளிலும், கடல்கடந்து வெற்றிகொண்ட நாடுகளிலும் அகழாய்வு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த

ஆண்டு, கேரளாவின் பட்டணம், கர்நாடக மாநிலத்திலுள்ள தலைக்காடு, ஆந்திர மாநிலத்தின் வேங்கி, ஒடிசாவிலுள்ள பாலூர் பகுதிகளில் அகழாய்வு மேற்கொள்ளப்படும் என்ற செய்தியை இந்த அவைக்கு மகிழ்ச்சியோடு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோன்று, சங்ககாலத் துறைமுகமான கொற்கையில் ஆழ்கடலாய்வின் முதற்கட்டமாக முன்கள ஆய்வு இந்த மாதம் தொடங்கப்பட உள்ளது.

மேலும், தமிழ்நாட்டில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வுகளின்போது கண்டெடுக்கப்பட்ட ஏராளமான பானை ஓடுகளில் காணப்படும் குறியீடுகளுக்கும், சிந்துவெளி நாகரிக முத்திரை எழுத்துகளுக்குமான உறவை ஒப்பீடு செய்து, ஆய்வு செய்திடும் திட்டத்தை தமிழ்நாடு தொல்லியல்துறை இந்தாண்டு முதல் மேற்கொள்ளும் என்பதை மகிழ்ச்சியோடு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் கடந்த ஆண்டு சட்டமன்றத்தில் குறிப்பிட்டதைப் போல, இந்தியத் துணைக்கண்டத்தின் வரலாறு, இனி தமிழ் நிலப்பரப்பில் இருந்துதான்தொடங்கி எழுதப்பட வேண்டும் என்பதைச் சான்றுகளின் அடிப்படையில்அறிவியல் வழி நிறுவுவதே நமது அரசின் தலையாய கடமை என்று நாங்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம். இதற்கு முத்தாய்ப்பாக தமிழகத்தில் இரும்பின் பயன்பாடு 4200ஆண்டுகளுக்கு முற்பட்டது என்பதை மயிலாடும்பாறை ஆய்வு முடிவுகள் இன்று நிலை நிறுத்தியுள்ளது நமக்கெல்லாம் பெருமை.

தமிழ்ச் சமூகத்தின் தொன்மை மற்றும் தொடர்ச்சியை உலகறியச் செய்திட எந்நாளும்உழைப்போம் என்று உறுதியளித்து நன்றி கூறிஅமைகிறேன்.

5

சிந்துசமவெளி

இந்தியத் துணைக்கண்ட வரலாற்றில் நமக்கான இடத்தை நிலைநிறுத்துவதுதான் நம்முடைய நோக்கம்!

சென்னை, எழும்பூர் அரசு அருங்காட்சியகக் கலையரங்கில் 05.01.2025 அன்று சிந்துவெளிப் பண்பாட்டுக் கண்டுபிடிப்பு நூற்றாண்டு நிறைவு பன்னாட்டுக் கருத்தரங்கு தொடக்க விழாவில் நான் ஆற்றிய உரை:

2021-ஆம் ஆண்டு நம்முடைய அரசு அமைந்ததும், 'திராவிட மாடல் அரசு' என்றுநாங்கள் அதற்கு பெயர் சூட்டினோம். "இது ஒரு கட்சியின் அரசல்ல, இனத்தின் அரசு" என்றுகுறிப்பிட்டேன். அதற்கு அடையாளமாக இந்த விழா நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இன வரலாற்றை ஆய்வுக் கண்ணோட்டத்தோடு பார்க்கும் முதிர்ச்சியின், அறிவுச்செயல்பாடாக இந்தக் கருத்தரங்கம் நடைபெறுகிறது.

சிந்துவெளிப் பண்பாட்டு கண்டுபிடிப்பின் நூற்றாண்டு நிறைவு விழாவை நாம் இப்போதுகொண்டாடி இருக்கிறோம். இந்தியாவில் வேறுஎந்த மாநிலத்திலும், இப்படி ஒரு விழாவை அரசே முன்னின்று நடத்தாது என்று சொல்லத்தக்க வகையில், மாபெரும் பண்பாட்டுப் பெருவிழாவாகஇது ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

இந்தியத் துணைக்கண்ட வரலாற்றில்நமக்கான இடத்தை நிலைநிறுத்துவதுதான் நம்முடைய நோக்கம்!

வரலாறும், பண்பாடும், தொல்லியலும், தொலைநோக்குப் பார்வையும் கொண்ட இந்த விழாவை ஏற்பாடு செய்திருக்கும் மாண்புமிகு நிதி மற்றும் தொல்லியல் துறை அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு அவர்களுக்கும், நிதித்துறை முதன்மைச் செயலாளர் மற்றும் தொல்லியல் ஆணையர் திரு. உதயச்சந்திரன் அவர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த பாராட்டுதல்களையும், நன்றியையும் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இரண்டு பேரும் தொல்லியல் ஆர்வலர்கள்! இப்போது கேட்டாலும், இந்த மேடையில் மணிக்கணக்கில் சிந்துவெளியைப் பற்றி பேசக் கூடியவர்கள். இவர்கள் இந்தத் துறைக்கு கிடைத்திருப்பது இந்தத் துறைக்கு மட்டுமல்ல, தமிழ்நாட்டிற்கே கிடைத்த பெருமை ஆகும்.

சிந்துவெளிப் பண்பாட்டு கண்டுபிடிப்பின் நூற்றாண்டு விழாவை கொண்டாட, தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையும், ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகத்தின் சிந்துவெளி ஆய்வு மையமும் இணைந்து இந்தப் பன்னாட்டு கருத்தரங்கம் ஏற்பாடு செய்திருக்கிறோம். இது நம்முடையஅரசின் கடமை!

இந்தக் கருத்தரங்கத்தில் வெளிநாடு மற்றும் நாட்டின் பல பகுதிகளில் இருந்தும் இருபதுக்கும் மேற்பட்ட அறிஞர் பெருமக்கள் கலந்து கொண்டுஆய்வறிக்கைகள் வழங்க இருப்பது எனக்கு பெருமிதமாக இருக்கிறது.

சிந்துவெளி நாகரிகம் முதன்முதலில் 1924-ஆம்ஆண்டு செப்டம்பர் 20-ஆம் நாளன்று உலகுக்கு அறிவிக்கப்பட்டது. 'தி இல்லஸ்டிரேட்டட் லண்டன் நியூஸ்' என்ற இதழில் இந்தியத் தொல்லியல் துறை டைரக்டர் ஜெனரல் சர் ஜான் மார்ஷல் அதைஅறிவித்தார். இது இந்தியத் துணைக்கண்ட வரலாற்றில் ஒரு திருப்புமுனையை உண்டாக்கி, நம்முடைய கடந்த காலத்தை பற்றிய புரிதலையே மாற்றி அமைத்தது. ஆரியமும் சமஸ்கிருதமும்தான் இந்தியாவின் மூலம் என்ற கற்பனையை வரலாறு என்று அதற்கு முன்னர் பலரும் சொல்லிக் கொண்டு வந்தார்கள். அதை மாற்றியது ஜான் மார்ஷல் அவர்களின் ஆய்வுகள்தான். சிந்துவெளி நாகரிகம் ஆரியத்துக்கு முற்பட்டது, அங்கு பேசப்பட்டது திராவிட மொழியாக இருக்கலாம் என்று அவர் நூறாண்டுகளுக்கு முன்பு சொன்ன குரல் இன்றைக்கு வலுப்பெற்றிருக்கிறது.

"என்னதான் அங்கு இல்லை!" என்று கேட்கும் அளவுக்கு நன்கு கட்டமைக்கப்பட்ட வளர்ச்சி பெற்ற ஒரு நாகரிகம் சிந்துவெளியில் இருந்ததை அங்கு கண்டெடுக்கப்பட்ட பல்வேறு அடையாளங்கள் காட்டுகிறது.

சிந்துவெளியில் 'காளைகள்'தான் இருந்தது. இது திராவிடச் சின்னம்! சிந்துவெளியில் இருந்து, இன்றைய அலங்காநல்லூர் வரை காளைகள் இருக்கிறது. பழந்தமிழ் இலக்கியங்களில், ஏறுதழுவுதல் நிகழ்ந்ததற்கான சான்றுகள் இருக்கிறது. காளையைத் தழுவிப் போரிட்டு அடக்குவதால் 'கொல்லேறு தழுவுதல்' என்று வருகிறது. சிந்துவெளி நாகரிகம் சார்ந்த ஒரு முத்திரையில் காளை உருவமும், அதை அடக்க முயலும் வீரரை அந்த காளை தூக்கி வீசுவதும் இருக்கிறது.

அப்படியே மற்றொரு பக்கம் பார்த்தோம் என்றால், குதிரை முத்திரை சிந்துவெளியில் இல்லை. வேத இலக்கியங்களில் பெருநகரங்களும் இல்லை, தாய்த்தெய்வ வழிபாடும் இல்லை! ஆனால், இந்த இரண்டும் சிந்துவெளியிலும் இருக்கிறது! கீழடியிலும் இருக்கிறது! இதையெல்லாம் வைத்துதான் சங்ககாலத் தமிழர்களின் மூதாதையர் இருந்த இடம்தான் சிந்துவெளி என்று நிறுவப்பட்டிருக்கிறது.

சிந்துவெளி பற்றி ஜான் மார்ஷல் அவர்கள் தன்னுடைய கண்டுபிடிப்பை வெளியிட்டதும், தந்தை பெரியார் அவர்கள் தன்னுடைய 'விடுதலை' நாளிதழில் அதைப் பற்றி கட்டுரைகள் வெளியிட்டிருக்கிறார். பேசியும் இருக்கிறார்.

தந்தை பெரியார் அவர்களை தொடர்ந்து பேரறிஞர் அண்ணா அவர்களும் 1948-ஆம் ஆண்டிலேயே சிந்துவெளி நாகரிகத்தின் அடையாளங்களை வெளிக்கொணர்ந்த சர் ஜான் மார்ஷல் அவர்களின் சாதனைகளை பாராட்டி எழுதியிருக்கிறார்.

2010-ஆம் ஆண்டு கோவை தமிழ்ச் செம்மொழி மாநாட்டை வெற்றிகரமாக நடத்திய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் செம்மொழி மாநாட்டு இலச்சினையில், குமரி வள்ளுவர் சிலை, பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்ற குறள் வரியுடன் சேர்த்து, சிந்துவெளி முத்திரையையும் பதிவிட்டார்!

அந்த மாநாட்டில் புகழ்பெற்ற அறிஞர்களான அஸ்கோ பர்போலா, ஐராவதம் மகாதேவன், ஆர்.பாலகிருஷ்ணன் உள்ளிட்டோர் சிந்துவெளி பண்பாட்டையும், தமிழ்ப் பண்பாட்டையும் ஒருங்கிணைத்து முக்கியத்துவம் வாய்ந்த ஆராய்ச்சிக் கட்டுரைகளை வாசித்தார்கள்.

அந்த மரபின் வழி வந்த நம்முடைய திராவிட மாடல் அரசு சார்பில், இப்போது சிந்துவெளி பண்பாட்டுக் கண்டுபிடிப்பு நூற்றாண்டு நினைவு பன்னாட்டுக் கருத்தரங்கை நடத்துகிறோம்.

சிந்துவெளி வரி வடிவங்களும், தமிழ்நாட்டுக் குறியீடுகளும், ஒரு வடிவவியல் ஆய்வு என்ற நூலையும் இங்கு வெளியிட்டிருக்கிறேன். இதற்கெல்லாம் முத்தாய்ப்பாக, ஜான் மார்ஷல் அவர்களின் சிலைக்கு அடிக்கல் நாட்டி இருக்கிறேன்.

சிந்துவெளிப் பண்பாட்டை கண்டுபிடித்தது மூலமாக, நம்முடைய வரலாற்றையும், பெருமையையும் மீட்டவர் ஜான் மார்ஷல். அவரைச் சிறப்பிப்பது தமிழ்நாடு அரசுக்குப் பெருமை! சிந்துவெளிப் பண்பாடு பேசப்படும் வரைக்கும், ஜான் மார்ஷல் அவர்களுக்கு சிலை வைத்தது திராவிட மாடல் அரசு என்ற பெருமையும் நிலைக்கும்.

சிவகங்கை மாவட்டம், கீழடியில் தற்போது நடைபெற்று வரும் அகழ்வாராய்ச்சி உலக அளவில் எல்லோருடைய கவனத்தையும் கவர்ந்திருக்கிறது.

தமிழ்நாடு தொல்லியல் துறையால், இப்போது மேற்கொள்ளப்பட்டு வரும் அகழாய்வில் ஆதிச்சநல்லூருக்கு அருகே சிவகளை ஆய்வு மூலம் ‘தண் பொருநை’ என்று அழைக்கப்பட்ட தாமிரபரணி ஆற்றங்கரை நாகரிகம், 3,200 ஆண்டுகளுக்கு முற்பட்டது என்று அறிவியல்வழிப்பட்ட ஆய்வுகள் அடிப்படையில் உறுதி செய்திருக்கிறோம்.

கீழடி அருங்காட்சியகம் போலவே, பொருநையிலும் ஒரு அருங்காட்சியகம் உருவாக்கப்பட்டு வருகிறது.

எட்டு இடங்களில் அகழ்வாராய்ச்சி நடைபெற்று வருகிறது. நம்முடைய அகழாய்வு முடிவுகள் பெரும் உற்சாகத்தைத் தருவதாக அமைந்திருக்கிறது.

குறிப்பாக, மட்பாண்டங்களில் காணப்படும் குறியீடுகளில், சிந்துவெளி எழுத்துக்களின் ஒப்பீட்டளவில் ஒற்றுமைகள் காணப்படுகின்றது.

சிந்துவெளி நாகரிகத்தில், வணிக நோக்கத்திற்காக பயன்படுத்தப்பட்ட முத்திரைகளில் இடம் பெற்றிருக்கும் குறியீடுகளையும், தமிழ்நாட்டில் அகழாய்வுகளில் கிடைக்கும் குறியீடுகளையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது 60 விழுக்காடு குறியீடுகள் ஒரே தன்மையிலான குறியீடுகளாக காணப்படுகிறது. அதேவேளையில், சிந்துவெளியில்பொதுமக்களால் பயன்படுத்தப்பட்ட மட்பாண்டங்களில் பொறிக்கப் பட்டிருக்கும் குறியீடுகளும், தமிழ்நாட்டில் பொதுமக்களால் பயன்படுத்தப்பட்ட மட்பாண்டங்களில் பொறிக்கப்பட்டிருக்கும் குறியீடுகளும், அதிகபட்சமாக 90 விழுக்காடு ஒரே தன்மை கொண்டவையாக காணப்படுகிறது என்று நம்முடைய தொல்லியல் ஆய்வாளர்கள் இப்போது நிறுவியிருக்கிறார்கள்.

சிந்துவெளியில் கிடைத்த சூதுபவளம், அகேட், நீலப் பளிங்குக் கற்கள் ஆகியவற்றால் செய்யப்பட்ட கல்மணிகள், உயர் வெண்கலப் பொருட்கள் மற்றும் கருப்பு, சிவப்பு மட்கலன்கள், நீத்தாரை புதைக்கும் வழக்கம் போன்ற பண்பாட்டுக் கூறுகளின்எச்சங்கள், தென்னிந்தியாவுக்கும், சிந்துவெளி நாகரிகத்துக்கும் இடையேயான பண்பாட்டுத் தொடர்பை, தொடர்ச்சியை உறுதிசெய்கிறது.

இதற்கெல்லாம் மகுடம் வைத்தது போன்று, அண்மையில் சிவகளை, ஆதிச்சநல்லூர், மயிலாடும்பாறை, மாங்காடு, தெலுங்கானூர், கீழ்நமண்டி போன்ற இடங்களிடல் கிடைத்தஅறிவியல் காலக்கணக்கீடுகள் சிந்துவெளி நாகரிகமும் தமிழ்நாட்டின் இரும்புக் காலமும் சமகாலத்தவை என்பதை உறுதிசெய்கிறது என்றுஅறிவிப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

அறிஞர் பெருமக்கள் நிறைந்த வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த நிகழ்ச்சியில் தமிழ்ப் பண்பாட்டை பேணிப் பாதுகாப்பதுதான் தமிழ்நாடு அரசின் தலையாய கடமை என்று உலகுக்கு உணர்த்தும் வகையில், மூன்று முக்கியமான அறிவிப்புகளை மிகுந்த மகிழ்ச்சியுடன் நான் வெளியிட விரும்புகிறேன்.

- செழித்து வளர்ந்த சிந்துவெளிப் பண்பாட்டின் எழுத்து முறையை இன்னும் நம்மால் தெளிவாக புரிந்துகொள்ள முடியவில்லை. நூறு ஆண்டுகளைக் கடந்தும் தீர்க்கப்படாத இந்த சிந்துவெளிப் புதிர் பற்றி உலகெங்கும் உள்ள தொல்லியல் ஆய்வாளர்கள், மொழியியல் தமிழ் அறிஞர்கள் மற்றும் கணினி வல்லுநர்கள் உட்பட பலரும் இன்றளவும் பெரும் முயற்சி செய்து கொண்டு இருக்கிறார்கள். அந்த முயற்சிகளை ஊக்கப்படுத்தும் வகையில், சிந்துவெளிப் புதிருக்கான உரிய விடையை கண்டுபிடித்து, சிந்துவெளி எழுத்து முறையை தெளிவாக புரிந்துகொள்ள உதவும் வழிவகையை தொல்லியல் அறிஞர்கள் ஏற்கும்படி வெளிக்கொணரும் நபர்கள் அல்லது அமைப்புக்கு ஒரு மில்லியன் அமெரிக்க டாலர் பரிசாக வழங்கப்படும் என்பது முத்தான முதல் அறிவிப்பு!

- சிந்துவெளி பண்பாடு குறித்து தொடர் ஆராய்ச்சிகளை, தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையுடன் இணைந்து ரோஜா முத்தையா நூலகத்தின் சிந்துவெளி ஆராய்ச்சி மையம் மேற்கொள்ளும் வகையில் தலைசிறந்த தொல்லியல் அறிஞர் ஐராவதம் மகாதேவன் அவர்கள் பெயரில் ஓர் ஆய்வறிக்கை அமைக்க 2 கோடி ரூபாய் நல்கை வழங்கப்படும் என்பது இரண்டாவது அறிவிப்பு!
- தமிழ்ப் பண்பாட்டின் தொன்மையை உலகமே தெரிந்து கொள்ள வேண்டும் என்று ஓயாமல் உழைக்கும் தலைசிறந்த தொல்லியல் அறிஞர்கள் மட்டுமின்றி, கல்வெட்டியல் ஆய்வாளர்கள், நாணயவியல் வல்லுநர்கள் ஆகியோரையும் ஊக்கப்படுத்தும் விதமாக, ஆண்டுதோறும் இரண்டு அறிஞர்களுக்கு விருதுகள் வழங்கப்படும். இது மூன்றாவது அறிவிப்பு.

இந்த மூன்று அறிவிப்புகளும் இந்தத் துறை ஆய்வுகளுக்கு வேகத்தையும், ஊக்கத்தையும் வழங்கும் என்று நான் நம்புகிறேன்.

சிந்துவெளி முதல் கீழடி வரை தமிழினத்தின் பெருமை நிரம்பி இருக்கிறது. திராவிட மொழிநூல் ஞாயிறு தேவநேயப் பாவாணர், மா. இராசமாணிக்கனார், க.த.திருநாவுக்கரசு போன்ற மாபெரும் அறிஞர்கள் எல்லாம் இது குறித்து எழுதியிருக்கிறார்கள். ‘சிந்து முதல் வைகை வரை’ என்ற நூலை நம்முடைய ஆர்.பாலகிருஷ்ணன் அவர்கள் எழுதி இருக்கிறார். டோனி ஜோசப் அவர்கள் மரபணு, மானுடவியல் சார்ந்த ஆய்வுகளைவைத்து நிறைய எழுதிக்கொண்டு வருகிறார்.இன்னும் ஏராளமான ஆய்வுகளும், கண்டுபிடிப்புகளும் வந்து கொண்டிருக்கிறது.

அறிவியல் முறைப்படி சான்றுகளின் அடிப்படையில், தமிழ்ச் சமூகத்தின் தொன்மையை அறிவுலகம் இப்போது ஏற்றுக் கொள்ளத் தொடங்கி இருக்கிறது. இந்தியத் துணைக்கண்டத்தின் வரலாற்றைத் தமிழைத் தவிர்த்துவிட்டு இனி எழுத முடியாது என்று நாம் உரக்கச் சொல்வோம்! ஜான் மார்ஷல் அவர்களின் கண்டுபிடிப்பின் நூற்றாண்டில் அவருக்கு நாம் நன்றியைஉரித்தாக்கி, அவர் விட்டப் பணியை நாம் தொடர்வோம்!

6

ஜான்மார்ஷலுக்குச் சிலை

சென்னை, எழும்பூர் அருங்காட்சியக வளாகத்தில் 50 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள சிந்துவெளி நாகரிகத்தை முதன்முதலில் வெளிப்படுத்தி திராவிட நாகரிகம் எனும் கருதுகோளுக்கு வழிவகுத்த பிரிட்டிஷ் இந்தியாவின் தொல்லியல் துறை தலைமை இயக்குநர் சர் ஜான் ஹூபர்ட் மார்ஷல் அவர்களின் திருவுருவச் சிலையை 19.3.2025 அன்று திறந்து வைத்தேன்.

சர் ஜான் ஹூபர்ட் மார்ஷல் அவர்கள் இங்கிலாந்து நாட்டின் மான்செஸ்டர் நகரில் 19.3.1876 அன்று பிறந்தார். 1902-ஆம் ஆண்டு தனது 26ஆவது வயதில் இந்தியத் தொல்லியல் கழகத்தின் தலைமை இயக்குநராகப் பொறுப்பேற்றார். 1924-ஆம் ஆண்டு செப்டம்பர் 20-ஆம் நாள் வரலாற்று சிறப்புமிகுந்த சிந்துவெளிப் பண்பாட்டின் கண்டுபிடிப்பை உலகுக்கு அறிவித்தார். இந்தியத் துணைக்கண்ட வரலாறு பற்றி அதுவரை நிலவிய புரிதல்களைப் புரட்டிப் போட்டது இந்த அறிவிப்பு. சிந்துவெளிப் பண்பாட்டின் மொழி குறித்த திராவிடக் கருதுகோளுக்கு வித்திட்டார்.

சர் ஜான் ஹூபர்ட் மார்ஷல் இந்தியத் தொல்லியல் கழகத்தின் தலைமைப் பொறுப்பு வகித்த காலத்திலேயே இங்கிலாந்து நாட்டின் தொல்லியல் அறிஞர் அலெக்ஸாண்டர் ரீ மூலம் ஆதிச்சநல்லூர் அகழாய்வுகள் (1903-04) நடைபெற்றன. தமிழ் மண்ணின் தொன்மையை உலகம் அறிவதற்கு வித்திட்ட சர் ஜான் ஹூபர்ட் மார்ஷல் அவர்கள் 17.8.1958 அன்று மறைந்தார்.

சென்னை, எழும்பூர் அருங்காட்சியக அரங்கில் 5.01.2025 அன்று நடைபெற்ற சிந்துவெளிப் பண்பாட்டுக் கண்டுபிடிப்பு நூற்றாண்டு நிறைவு பன்னாட்டுக் கருத்தரங்கு தொடக்க விழாவில் தலைமையுரை ஆற்றியபோது, சிந்துவெளிப் பண்பாட்டை கண்டுபிடித்து உலகிற்கு அறிவித்ததன் மூலமாக, நம்முடைய வரலாற்றையும், பெருமையையும் நிலை நிறுத்தி காட்டியவர் சர் ஜான் மார்ஷல். அவரைச் சிறப்பிப்பது தமிழ்நாடு அரசுக்குப் பெருமையாகும் என்றும், சிந்துவெளிப் பண்பாடு பேசப்படும் வரைக்கும், ஜான் மார்ஷல் அவர்களுக்கு சிலை வைத்தது திராவிட மாடல் அரசு என்ற பெருமையும் நிலைக்கும் என்றும் புகழஞ்சலி செலுத்தினேன். பிரிட்டிஷ் இந்தியாவின் தொல்லியல் துறை தலைமை இயக்குநர் சர் ஜான் ஹூபர்ட் மார்ஷல் அவர்களுக்கு திருவுருவச்சிலை அமைத்திட அடிக்கல் நாட்டினேன்.

சர் ஜான் ஹூபர்ட் மார்ஷல் அவர்களின் புகழுக்கு பெருமை சேர்க்கின்ற வகையில் சென்னை எழும்பூர் அருங்காட்சியக வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள அவரது திருவுருவச் சிலையைத் திறந்து வைத்துள்ளேன்

7

வள்ளுவர் கோட்டம் புதுப்பிப்பு



பூம்புகார் பெருந்தச்சன் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் 1974, 1975 ஆகிய ஆண்டுகளில் நிர்மாணிக்கப்பட்டது சென்னை மாநகரின் கலைச்செல்வம் வள்ளுவர் கோட்டம். இந்த வள்ளுவர் கோட்டம் சுற்றுலா மையமாக எழுச்சிபெற்று உலகத் தமிழ் அறிஞர்களாலும்,தமிழ்நாட்டு மக்களாலும் பெரிதும் பாராட்டப்படுகிறது.

முந்தைய 10 ஆண்டுகால ஆட்சியில் பராமரிக்கப்படாமல் பாழ்பட்டிருந்த வள்ளுவர் கோட்டத்தின் தோற்றத்தைப் பார்த்து நான் மிகவும் மனம் நொந்து வேதனைக்கு ஆளானேன். அதன்பின் அதிகாரிகளை அழைத்து வள்ளுவர் கோட்டத்தைப் புதுப்பித்திட வேண்டும் என்று உத்தரவிட்டேன். அதன் பயனாக, வள்ளுவர் கோட்டம் புதுப்பிக்கப்பட்டு எழிற்கோலம் கொண்டுள்ளது.



திருவள்ளுவர் சிலையை நோக்கிப் பார்வையாளர்கள் தடையின்றிச் செல்வதற்கு வசதியான மூடிய நடைபாதையுடன்கூடிய “வேயா மாடம்” ஏற்படுத்தப்பட்டுள்ளது.

தமிழ்ப் பண்பாட்டு இலக்கிய நிகழ்ச்சிகளை நடத்துவதற்குத் தக்க வகையில் வடிவமைக்கப்பட்டு 20,000 சதுரஅடி பரப்பளவில் 1,548 இருக்கைகளுடன் அதிநவீன வசதிகளுடன் குளிரூட்டப்பட்ட பிரம்மாண்டமான “அய்யன் வள்ளுவர் கலையரங்கம்” மேம்படுத்தப்பட்டுள்ளது.

27,000 சதுர அடி பரப்பில் தரை நிலை, தரையின் கீழ் நிலப்பகுதிகளில் 162 கார்கள் வரை நிறுத்துவதற்கான வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் உரை விளக்கத்துடன் 1,330 திருக்குறள்களையும் கொண்ட குறள் பலகைகள் அமைக்கப்பட்டு– ஓவியங்களுடன் புதிய வடிவம் பெற்றுள்ளது “குறள் மணிமாடம்”.

100 பேர் அமரும் வசதியுடன் “திருக்குறள் ஆய்வரங்கம் மற்றும் ஆராய்ச்சி நூலகம்” இலக்கிய விவாதங்கள் ஆவணப்பதிவு மற்றும் கல்வி ஆராய்ச்சிக்குப் பயன்படும் வகையில் புதுப்பிக்கப்பட்டுள்ளது.

தமிழ்க் கோட்டத்தை அனைவரும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்

ரூ.80 கோடியில் புதுப்பிக்கப்பட்ட சென்னை வள்ளுவர் கோட்டத்தை 21.6.2025 அன்று பொதுமக்களின் பார்வைக்கு திறந்து வைத்து நான் ஆற்றிய உரை:

தலைவர் கலைஞர் அவர்களைப் பொறுத்தவரை, திருவள்ளுவர் மீதும், திருக்குறள் மீதும் தீராக் காதல் கொண்டவர்; திருக்குறளைத் தூக்கிச் சுமந்து பரப்பினார்!

பொதுப்பணித்துறை அமைச்சராகவும், போக்குவரத்துத் துறை அமைச்சராகவும் இருந்தபோது அரசுக் கட்டடங்களில் திருவள்ளுவர் படம் வைத்தவர்; திருக்குறளை எழுதச் சொன்னவர்! பேருந்துகளில் குறளை இடம்பெற செய்தவர்!



வள்ளுவர் கோட்டத்தைப் பார்வையிட வருகைபுரியும் பொதுமக்களுக்குப் பயன்படும் வகையில் 3,336 சதுர அடியில் உணவகம் அமைக்கப்பட்டுள்ளது.



275.56 சதுர அடி பரப்பளவு கொண்ட நினைவுப் பொருள் மற்றும் பரிசுப் பொருள்களுக்கான விற்பனையகமும் அருகே அமைக்கப்பட்டுள்ளது.

1971-ல் முதலமைச்சராக தமிழறிஞர்கள் கணித்த திருவள்ளுவர் ஆண்டை அரசாணையாக வெளியிட்டவர்! வள்ளுவரை தமிழ்ச் சமூகம் வானளாவ போற்றவேண்டும் என்ற இந்திய நாடு தொடங்கும் குமரி முனையில் சமத்துவத்தை வலியுறுத்திய வள்ளுவருக்கு வானுயர சிலை அமைத்தவர்! அந்தச் சிலையின் வெள்ளி விழாவையும் நாம் கொண்டாடினோம்!

இப்படி, வள்ளுவருக்கு முத்தமிழறிஞர் கலைஞர் சூட்டிய புகழ்மாலைகளில் மிக முக்கியமானது, 1974-ல் அவர் அடிக்கல் நாட்டிய இந்த வள்ளுவர் கோட்டம்! திருவள்ளுவர் சிலையும், திருவாரூர் தேரும் அமைந்துள்ள இந்தக் கோட்டம், தலைவர் கலைஞரின் கனவுப் படைப்பு!

இந்தக் கலைக் கருவூலத்தைதான் நாம் இப்போது 80 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதுப்பித்திருக்கிறோம்! பொதுவாக, தி.மு.க. ஆட்சியில் செய்யப்பட்ட திட்டங்கள் என்று சொன்னால், அ.தி.மு.க. ஆட்சியில் கிடப்பில் போட்டுவிடுவார்கள். நாம் உருவாக்கிய கட்டடங்கள், நினைவுச் சின்னங்கள் போன்றவற்றை பராமரிக்காமல் விட்டுவிடுவார்கள். அப்படி கவனிப்பார் இல்லாமல் இருந்த இந்த வள்ளுவர் கோட்டத்தை, இப்படி புதுப்பொலிவோடு மீட்டெடுத்து இருக்கிறோம்! அதை செய்து காட்டிய பொதுப் பணித்துறை அமைச்சர் திரு. எ.வ.வேலு அவர்களை நான் மனதார பாராட்டுகிறேன்! வாழ்த்துகிறேன்!

தலைநகர் சென்னையின் மைய மண்டபமாக ஆயிரத்து நானூறு பேர் அமரக்கூடிய மாபெரும் கூட்ட அரங்கத்தோடு அமைந்திருக்கின்றது. இந்த தமிழ்க் கோட்டத்தை எல்லோரும் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கின்றேன்!

பார்வையிடும் பொதுமக்கள் உள்ளம் மகிழும் வகையில் இசை நீரூற்றுகளும் அமைக்கப்பட்டுள்ளன. கலைஞர் உருவாக்கிய வள்ளுவர் கோட்டம் கலை அழகுடன் மீண்டும் திறக்கப்பட்டுள்ளது.

உணவகப் பகுதியில் 72 பேர் அமரவும், காபி அருந்தும் பகுதியில் 24 பேர் அமரக்கூடிய வசதிகளையும் கொண்டுள்ளது.

திருவாரூர்த் தேர் வடிவில் 106 அடி உயரமுடைய திருக்குறள் கருத்துகளை விளக்கும் சிற்பங்கள் நுட்பமான முறையில் வடிவமைக்கப்பட்டுள்ள கல் தேர் ஒலி–ஒளி தொழில்நுட்பத்தில் மிளிரும் வண்ணம் அமைக்கப்பட்டுள்ளது.

8

திருவள்ளுவர் சிலைக்கு கண்ணாடி பாலம்

கன்னியாகுமரியில், முக்கடல் சூழும் குமரி முனையில் அய்யன் திருவள்ளுவர் சிலை வெள்ளி விழாவில் 31.12.2024 கலந்து கொண்டு ஆற்றிய உரை:

முக்கடல் சூழும் குமரி முனையில், முப்பால் புலவர் வள்ளுவருக்கு முத்தமிழறிஞர் வைத்த சிலையினை போற்றக்கூடிய வெள்ளிவிழாவை திராவிட ஆட்சியில், நான் நடத்தி வைப்பதில்மகிழ்ச்சி அடைகிறேன்! பெருமை அடைகிறேன்! பூரிப்பு அடைகிறேன்! இன்னும் சொல்லவேண்டும் என்றால், வாழ்நாளில் என் சிறந்த நாளாக தமிழின் பெருமையை, குறளின் அருமையை இளைய தலைமுறைக்கு கொண்டு செல்லும் கடமையைநிறைவேற்றியதாக நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்தச் சிலையை திறந்து வைக்கின்றபொத்தானை அழுத்தக்கூடிய நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் அழுத்தியபோது சொன்னார். தன்னுடைய உடல் நடுங்கியதாக தலைவர் கலைஞர் சொன்னார். ஏனென்றால், அந்தளவுக்கு உணர்ச்சிப் பெருக்கத்தில் அவர் இருந்தார். வான்புகழ் வள்ளுவருக்கு வானுயரச் சிலை அமைக்கவேண்டும் என்பது, அவருடையநெடுங்கனவு!

அந்தக் கனவு நனவான மகிழ்ச்சி, அவருக்கு அந்த உணர்வை தந்தது! இன்றைக்கு இந்தச் சிலையின் வெள்ளி விழாவை நடத்தும்போது, எனக்குள் இருக்கின்ற பெருமை இன்றைக்கு ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது! எவ்வளவு பெரிய சாதனையை செய்துவிட்டு, நமக்கு இப்படி ஒரு வரலாற்று வாய்ப்பைத் தலைவர் கலைஞர் அவர்கள்உருவாக்கித் தந்துவிட்டுப் போயிருக்கிறார் என்ற எண்ணம்தான், இந்தப் பெருமைக்குக் காரணம்!

பொதுவாக, குடும்பங்களில் சாதாரணமாககேட்பார்கள்…“உன் அப்பா என்ன வைத்துவிட்டுபோனார்?” என்று கேட்பார்கள். என்னை கேட்டால், இந்த குமரிமுனையில்வள்ளுவர் சிலையில் தொடங்கி, தலைவர் கலைஞர் செய்த சாதனைகளை சொல்லிக் கொண்டே போகலாம். இதையெல்லாம் தனிப்பட்ட ஸ்டாலினுக்காக செய்தாரா? இல்லை! அப்போதுயாருக்காக செய்தார்? தமிழ்நாட்டுக்கும் –தமிழுக்கும் – தமிழினத்துக்கும் உருவாக்கிக் கொடுத்த சொத்துகள்தான் இதெல்லாம்! என்னைப்பொறுத்தவரையில், அவர் வழியில் இந்த நாட்டுக்கும் – நாட்டு மக்களுக்கும் – தமிழுக்கும் உழைப்பதுதான் என்னுடைய வாழ்நாள் கடமை!

திருவள்ளுவர் சிலை அமைத்து 25 ஆண்டுகள் ஆகிவிட்டது என்று சொன்னவுடன், அதற்கு பெரிய விழா நடத்தவேண்டும் என்று நான் சொன்னேன்… உடனே சில அதிமேதாவிகள், ஒரு சிலை அமைப்பதற்கு எதற்கு விழா நடத்தவேண்டும் என்றுகேட்க தொடங்கினார்கள். அவர்கள் கேள்வியில்அர்த்தம் கிடையாது; ஆனால் உள்ளர்த்தம் உண்டு! அவர்களுக்கு ‘பதிலுக்குப் பதில்’ சொல்ல தேவையில்லை! ஆனால், உங்களுக்கு நான் சொல்லிக்கொள்ள விரும்புவது, திருவள்ளுவர், தமிழர்களுக்கு இருக்கக்கூடிய

உலக அடையாளம்!திருக்குறள் தமிழர்களின் பண்பாட்டு அடையாளம்! அதனால் கொண்டாடுகிறோம்! கொண்டாடுவோம்! கொண்டாடிக் கொண்டே இருப்போம்!

இன்று நடைபெறுவது, ஐம்பெரும் விழா!

- **அய்யன் திருவள்ளுவர் சிலை வெள்ளி விழா**
- **அய்யன் திருவள்ளுவர் சிலையையும், விவேகானந்தர் பாறையையும் இணைக்கின்ற கண்ணாடி இழைப் பாலம் திறப்பு விழா**
- **வெள்ளி விழா மலர் வெளியீடு**
- **திருக்குறள் கண்காட்சி தொடக்கம்**
- **அய்யன் திருவள்ளுவர் தோரணவாயில் அடிக்கல் நாட்டுதல் என்று இந்த விழா சிறப்பாக நடந்துகொண்டிருக்கிறது!**

நேற்று அய்யன் திருவள்ளுவர் சிலையையும், விவேகானந்தர் பாறையையும் இணைக்கக்கூடிய 37 கோடி ரூபாய் மதிப்பிலான கண்ணாடி இழை பாலத்தைத் திறந்து வைத்தேன். இந்த விழாவை சிறப்பாக ஏற்பாடு செய்த எதிலும் வல்லவர் மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு.எ.வ.வேலு அவர்களுக்கு, என்னுடைய மனமார்ந்த நன்றியை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல், நானூறு பக்கங்களில் திருவள்ளுவர் சிலை வெள்ளி விழா மலரை இலக்கிய வரலாற்று கருவூலமாக உருவாக்கித் தந்திருக்கக் கூடிய மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.மு.பெ. சாமிநாதன் அவர்களுக்கும் என்னுடைய பாராட்டுக்கள்! வாழ்த்துகள்!

சுற்றுலாப் பயணிகளை கவரும் வகையில், 12கோடி ரூபாய் செலவில் அய்யன் திருவள்ளுவரின் வாழ்க்கை வரலாறு மற்றும் உலகப் பொதுமறையான திருக்குறளை பறைசாற்றும் வகையில், 3டி சீரொளிக்காட்சி அமைத்திருக்கும் சுற்றுலா துறை அமைச்சர் மாண்புமிகு திரு. ராஜேந்திரன் அவர்களுக்கும் என்னுடைய பாராட்டுக்கள்! வாழ்த்துகள்!

கன்னியாகுமரி மாவட்டத்தின் பொறுப்பு அமைச்சர் என்ற முறையில், இந்த விழாவைசிறப்பாக ஒருங்கிணைத்து, அதில் வெற்றி கண்டிருக்கக்கூடிய மாண்புமிகு நிதி அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு அவர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த பாராட்டுக்கள்! வாழ்த்துகள்!

இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்ச்சி நடைபெற உழைத்த தலைமைச் செயலாளர், பல்வேறு துறைகளை ஒருங்கிணைத்து, சிறப்பாக செய்து காட்டியிருக்கக்கூடிய முதன்மைச் செயலாளர் திரு. கார்த்திகேயன் மாவட்ட ஆட்சியர் உள்ளிட்ட அனைத்து அலுவலர்களுக்கும் எனது பாராட்டுக்கள்! வாழ்த்துகள்! நன்றிகள்!

தமிழ்நெறியின் அடையாளமாக, சுனாமியையும் எதிர்த்து உயர்ந்து நிற்கின்ற இந்த வள்ளுவர் சிலைதான், நம்முடைய அடையாளத்தின் பண்பாட்டுக் குறியீடு!

திருக்குறளையும்,திருவள்ளுவரையும் சொல்லிலும், செயலிலும்,நெஞ்சிலும் தூக்கிச் சுமந்த இயக்கம் திராவிட இயக்கம்! சமத்துவத்தை சொல்வதால் தான், தந்தை பெரியார் சொன்னார்… “நம் மதம், குறள் மதம்! நம் நெறி, குறள் நெறி!” என்று சொன்னார். குறள் மாநாடு நடத்தி திருக்குறள் புத்தகத்தை குறைந்த விலைக்கு அச்சிட்டு வழங்கினார்கள்.பேரறிஞர் அண்ணா அவர்கள், “குறள் என்பது வகுப்பறையில் மட்டுமல்லாமல், உங்கள் இல்லங்களில், உள்ளங்களில் பரவ வேண்டும்”என்று சொன்னார். நம்முடைய

தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கள், திருக்குறள் தலைவராகவேவாழ்ந்தார்! வலம் வந்தார்!

தலைவர் கலைஞர் அவர்கள் பள்ளிச் சிறுவனாகஇருந்தபோது, முதன்முறையாக பேச்சுப்போட்டியில் கலந்துகொண்டு, 'நட்பு' என்ற தலைப்பில் பேசியபோது, திருக்குறளைத்தான் மேற்கோள்காட்டி பேசியிருக்கிறார்!

அப்போதிருந்து குறளாசான் வள்ளுவருக்கும்,தமிழ்க் குரலோன் தலைவர் கலைஞருக்கும் வாழ்நாள் முழுக்க நட்பு இருந்தது! வள்ளுவத்தைப் போற்றுகின்ற தொண்டு இருந்தது.

தி.மு.க. ஆட்சிக்கு வருவதற்கு முன்பே, சட்டமன்றத்தில் வாதாடி வள்ளுவர் படம் திறக்க வைத்தவர் நம்முடைய தலைவர் கலைஞர்! போக்குவரத்துத் துறை அமைச்சரானதும், அனைத்துப் பேருந்துகளிலும் திருக்குறளை இடம்பெறச் செய்தார்! பொதுப்பணித்துறை அமைச்சராக இருந்தபோது, அனைத்து அரசு விடுதிகளிலும், திருவள்ளுவர் படமும், திருக்குறளும் இடம்பெற வைத்தார்! காவலர் பதக்கத்தில் வள்ளுவரைப் பொறித்தார். தமிழறிஞர்களால் உருவாக்கப்பட்ட திருவள்ளுவர் ஆண்டை அரசின் சார்பில் ஏற்றுக்கொண்டு அறிவித்தார்.

மயிலாப்பூரில், திருவள்ளுவர் நினைவாலயம் அமைத்தார். சென்னையில் வள்ளுவருக்கு கோட்டம் அமைத்தார். குறளோவியம் தீட்டினார். திருக்குறளுக்கு உரை எழுதினார். இப்படி திருக்குறளுக்காகவே வாழ்ந்தார்!

இந்தச் சிலையும் சாதாரணமாக அமைக்கப்படவில்லை. இதற்கென்று ஒரு வரலாறு இருக்கிறது... வான்புகழ் வள்ளுவருக்கு வானுயரச் சிலை அமைக்கவேண்டும் என்று 31.12.1975 அன்று அமைச்சரவையில் முதன்முதலாக தீர்மானம் நிறைவேற்றினார்கள்.

1990-ஆம் ஆண்டு சிலைக்கான பணிகள் தொடங்கப்பட்டது. ஆனால் தொடர்ந்து தடைகள் ஏற்பட்டது!

1997-ஆம் ஆண்டுதான் துரிதமாக பணிகள் நடைபெறத் தொடங்கி இந்தச் சிலை அமைக்கப்பட்டது!

கலைஞருடைய கனவுக்கு உரு கொடுத்த மாமனிதர்தான், கணபதி ஸ்தபதி அவர்கள்! அவர்தான் வள்ளுவர் கோட்டத்தையும், பூம்புகார் கோட்டத்தையும், பாஞ்சாலங்குறிச்சி கோட்டையையும் அமைத்தார். அவருடையஅப்பாதான், சென்னையில் இருக்கின்ற காந்தி மண்டபத்தை அமைத்தவர்.

இந்த கம்பீர வள்ளுவர் சிலைக்கு கலைஞர் காரணகர்த்தா என்றால், சிற்பக் கலைஞர் கணபதி ஸ்தபதி அவர்கள்தான் கலைக்கர்த்தா! இந்தச் சிலையை பற்றி சொல்லவேண்டும் என்றால், திருக்குறளின் அதிகாரங்களை குறிக்கின்றவகையில், 133 அடி உயரம்! அதில், அறத்துப்பால் அதிகாரங்களை குறிக்கின்ற வகையில், பீடம் 38 அடி. அறம் என்ற பீடத்தில் பொருளும்-இன்பமுமாக 95 அதிகாரங்கள் சிலையாக இருக்கிறது.

தலைமீது தூக்கி முடிந்திட்ட கொண்டையையே மகுடமாக கொண்டு - இடுப்பில் பட்டாடையையும் - மார்பில் மேல் துண்டும் - வலது கையானது அறம், பொருள், இன்பம் என்பதைக் காட்டும் மூன்று விரல்களாகவும் - இடது கையில் குறள் ஓலைச் சுவடிகளும் இருப்பதுபோல அமைத்திருக்கிறார் கணபதி ஸ்தபதி அவர்கள்.

7000 டன் எடைகொண்ட இந்தச் சிலையில், 3,681 கற்கள் இருக்கிறது. இத்தனைக் கற்களைக் கொண்டு ஒரு சிலையை உருவாக்கலாம். ஆனால், அதை ஒரு பாறையில் தூக்கி நிறுத்தி வைத்திருப்பதுதான் இந்தச் சிலையின் பெருமை!

133 அடிக்கு சிலை வைக்க, 180 அடிக்கு சாரம் கட்டி இதை அமைத்தார்கள். 500 சிற்பிகள் இந்தப் பணியில் ஈடுபடுத்தப்பட்டார்கள். கணபதி ஸ்தபதி அவர்கள் சொன்னார்... தஞ்சைப் பேரரசன் இராசராச சோழனிடம் அன்று கண்ட சிற்பக்கலை மரபை இன்று, ஆயிரம் ஆண்டுகளுக்குப் பிறகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களிடத்தில் காண்கிறேன் என்று சொன்னார்.

தஞ்சை பெரிய கோயிலை வடிவமைத்த குஞ்சரமல்லனின் வம்சத்தைச் சேர்ந்தவர்தான் கணபதி ஸ்தபதி அவர்கள். சொற்சிற்பியாம் கலைஞரும் - கல்சிற்பியாம் கணபதி ஸ்தபதியும் சேர்ந்து உலக வாழ்க்கைச் சிற்பியாம் வள்ளுவருக்காக உருவாக்கிய சிலைக்கு, நாம்வெள்ளிவிழா கொண்டாடிக் கொண்டிருக்கிறோம்.

இந்த திருக்குறள் விழாவை முன்னிட்டு, சில அறிவிப்புகளையும் நான் வெளியிட விரும்புகிறேன்.

- முக்கடல் சூழும் குமரிமுனையில் இங்கிருந்து சுற்றுலாப் பயணிகள் அனைவரும் அய்யன் திருவள்ளுவர் சிலையை சென்றடைய பயனடைவதற்காக படகு சவாரி வசதியை மேம்படுத்துவதற்காக 3 புதிய பயணிகள் படகுகள் வாங்கப்படும்.
- முதல் படகிற்கு தியாகத்தின் உருவாகி, தொண்டின் கருவாகி, தமிழ்நாட்டில் அடித்தளமிட்ட பெருந்தலைவர் காமராசர் பெயரும், இரண்டாம் படகிற்கு தென்குமரியை தமிழ்நாட்டுடன் இணைக்க வலியுறுத்தி போராடி சாதனைப் படைத்த சாதனையாளர் மார்சல் நேசமணி பெயரும், மூன்றாம் படகிற்கு கனடாவில் பிறந்தாலும், கன்னித்தமிழ் வளர்த்தவரும், திருக்குறளை மொழிப் பெயர்த்தும், தமிழ் இலக்கண நூலை எழுதியும், அழியாப் படைப்புகளை அளித்த ஜி.யு.போப் பெயரும், என மூன்று பெயர்களும் அந்தப் படகுகளுக்கு சூட்டப்படும்.

இரண்டாவது அறிவிப்பு

- ஒவ்வொரு மாவட்டத்துக்கும் திருக்குறளில்ஆர்வமும், புலமையும் மிக்க ஆசிரியர்கள், பயிற்றுநர்கள் தேர்வு செய்யப்பட்டு,அவர்களுக்குப் பயிற்சி வழங்கி மாவட்டம்தோறும் தொடர் பயிலரங்குகள், பயிற்சி வகுப்புகள் நடத்தப்படும். ‘திருக்குறள் திருப்பணிகள்’ தொடர்ந்து நடைபெற திட்டம் வகுக்கப்படும். இதற்காக, ஆண்டிற்கு மாவட்டம் ஒன்றிற்கு மூன்று இலட்சம் ரூபாய் வழங்கப்படும்.

மூன்றாவது அறிவிப்பு

- ஆண்டுக்கு 133 உயர்கல்வி நிறுவனங்களில்,திருக்குறள் தொடர்பான கலை இலக்கிய அறிவுசார் போட்டிகள் மற்றும் கருத்தரங்குகள் நடத்த திட்டமிடப்படும்.

நான்காவது அறிவிப்பு

- ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் கடைசி வாரம் ‘குறள் வாரம்’ கொண்டாடப்படும்.

ஐந்தாவது அறிவிப்பு

- தமிழ்த் திறனறி தேர்வில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான திருக்குறள் மாணவர் மாநாடு ஆண்டுதோறும் நடத்தப்படும்.

ஆறாவது அறிவிப்பு

- திருக்குறளும், உரையும் அரசு அலுவலகங்களில்எழுதப்படுகிறது போல, தனியார் நிறுவனங்களிலும் எழுதுவதற்கு, ஊக்குவிக்க உரிய முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

இத்துடன் சேர்த்து, குமரிக்கு வந்து இந்த பகுதிக்கான அறிவிப்பு செய்யாமல் இருக்க முடியாதல்லவா? தமிழ்நாட்டின் தென்கோடியில்அமைந்திருப்பது மட்டுமில்லாமல் வள்ளுவர் சிலையால் சிறப்பு பெற்றிருக்கின்ற, சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கின்ற வகையில், கன்னியாகுமரி பேரூராட்சி, நகராட்சியாக தரம் உயர்த்தப்படும்.

பேரறிவுச் சிலையாக இருக்கக்கூடிய வள்ளுவர் சிலையின் வெள்ளி விழாவில் நான் மறுபடியும் சொல்கிறேன். திருவள்ளுவர் வெறும் சிலையல்ல; திருக்குறள் வெறும் நூல் அல்ல; நம்முடைய வாழ்க்கைக்கான வாளும், கேடயமும்! அது நம்மைக் காக்கும், நம்மை அழிக்க வரும் தீமைகளை தடுக்கும். நம்மை மட்டுமல்ல, காவி சாயம் பூச நினைக்கிற தீய எண்ணங்களையும் விரட்டியடிக்கும். தனி மனிதர் முதல் அரசு வரைக்கும் நீதிநெறி சொன்னவர் நம்முடையவள்ளுவர் அவர்கள். நாம் செய்ய வேண்டியது, பள்ளிகளில், கல்லூரிகளில், அரசு அலுவலகங்களில் திருக்குறளை இன்னும் இன்னும் அதிகமாக இடம்பெறச் செய்யவேண்டும். இது அரசுக்கான உத்தரவு மட்டுமல்ல, தனியார் நிறுவனங்களும் இதைப் பின்பற்றவேண்டும் என்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

வள்ளுவம் வாழ்வியல் நெறியாக மாறட்டும்! சமுதாயம் குறள் சமுதாயமாக மலரட்டும்! வாழ்க கலைஞரின் புகழ்! வாழ்க குறளின் புகழ்!

9

தமிழ் பரப்புரைக் கழகம்

24.09.2022 அன்று சென்னை, அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் தமிழ்ப் பரப்புரைக் கழகத்தைத் தொடங்கி வைத்து ஆற்றிய உரை:

‘தமிழ்’ - வெறும் மொழியல்ல!

அது நம் உயிர்!

முத்தமிழறிஞர் - முத்தமிழ் வித்தகர் தலைவர் கலைஞர் அவர்கள், தமிழைப்பற்றி அடிக்கடி பெருமையோடு சொல்லுவார்கள். அதனை நான் பல்வேறு இடங்களில் சொல்லியிருக்கிறேன். அதை இந்த நிகழ்ச்சியிலும் குறிப்பிடுவது பொருத்தமாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

“உளங்கவர் ஓவியமே,

உற்சாகக் காவியமே,

ஓடை நறுமலரே,

ஒளியுமிழ் புதுநிலவே,

அன்பே,

அமுதே,

அழகே,

உயிரே,

இன்பமே,

இனியத்தென்றலே,

பனியே,

கனியே,

பழரசச் சுவையே,

மரகத மணியே,

மாணிக்கச் சுடரே,

மன்பதை விளக்கே என்றெல்லாம் தமிழை அழைக்கத் தோன்றுகிறது. இருந்தாலும் தமிழை தமிழே என்று அழைக்கக்கூடிய சுகம் வேறு எதிலும் இருக்காது” என்றார் தலைவர் கலைஞர்.

அத்தகைய தமிழ் வாழும் காலமெல்லாம் நின்று நிலைபெறக்கூடிய தமிழ்ப் பரப்புரைக் கழகத்தைத் தொடங்கி வைப்பதை என்னுடைய வாழ்நாளில் கடமையாக மட்டுமல்ல - என்னுடைய வாழ்நாளில் பெருமையாகவும் நான் கருதிக் கொண்டிருக்கிறேன்.

'வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்' - என்பதை முழக்கமாகக் கொண்ட திராவிட முன்னேற்றக் கழக அரசுக்கு, தமிழ்ப் பாதுகாப்புக் கழகம் தொடங்குவது என்பது முழு முதல் கடமை!

தி.மு.க. என்று சொல்வதைத் திரையுலகத்தில் பரப்பியபோது, ஒரு பாடல் பிரபலப்படுத்தப்பட்டது. அந்தப் பாடலை எழுதியவர் மதிப்பிற்குரிய கவிஞர் கண்ணதாசன் அவர்கள். பாடி நடித்தவர் திரு. கலைவாணர் அவர்கள். திராவிட முன்னேற்றக்கழகம் பிறந்த நான்கே ஆண்டில் வந்தது அந்தப்படம். தொண்டர்களுடைய உணர்ச்சியைத் தட்டி எழுப்பியது மட்டுமல்ல, தி.மு.க. என்றால் என்ன என்பதை சொன்னது அந்தப் பாடல்...

"தீனா... மூனா... கானா...

எங்கள் திருக்குறள் முன்னேற்றக் கழகம்

தீனா ... மூனா.... கானா

அறிவினைப் பெருக்கிடும்

பகுத்தறிவோடு நாட்டினர் வாழ

திருக்குறள் தந்தார் பெரியார் - வள்ளுவப்

பெரியார் - அந்தப்

பாதையிலே நாடு சென்றிடவே -

வழி வகுப்பதையும் அதன்படி

தீனா... மூனா... கானா...

திருக்குறள் முன்னேற்றக் கழகம்..." என்று கலைவாணர் அவர்கள் பாடுவார்.

அதாவது திமுக என்றாலே தமிழ்!

தமிழ் என்றாலே திமுக! என்று வளர்க்கப்பட்டதுதான் இந்த இயக்கம்.

அத்தகைய இயக்கம் ஆட்சிக்கு வந்தபோது, தாய்த்தமிழ் நாட்டுக்கு தமிழ்நாடு என்று பெயர் சூட்டப்பட்டது. அதற்கு முன்னால், இந்த மாநிலத்துக்கு சென்னை ராஜதானி - சென்னை மாகாணம் என்று பெயர். அதனைப் மாற்றி தமிழ்நாடு என்று பெயர் சூட்டியவர் பேரறிஞர் பெருந்தகை அறிஞர் அண்ணா அவர்கள். அத்தகைய அண்ணாவின் பெயரால் அமைந்துள்ள இந்தப் பல்கலைக்கழகத்தில் தமிழ்ப் பரப்புரைக் கழகம் தொடங்குவது பொருத்தமானது. மிகமிகப் பொருத்தமாக அமைந்திருக்கிறது!

அனைவருக்குமான வளர்ச்சி -

அனைத்துத் துறை வளர்ச்சி -

அனைத்து மாவட்ட வளர்ச்சி -

அனைத்து சமூக வளர்ச்சி -

என்பதை உள்ளடக்கமாகக் கொண்ட திராவிடமாடல் ஆட்சியை நாம் நடத்தி வருகிறோம். அந்த வகையில் தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் எண்மச் சேவைகள் துறையும் வளர்ச்சி அடைந்துவருகிறது.

தமிழ்நாட்டில் தகவல் தொழில்நுட்பவியலுக்கு அடித்தளம் அமைத்ததே கழக அரசுதான். இதற்கு கம்பீரமான சாட்சியாக இன்றும் எழிலுடன் நிற்கிறது டைடல் பார்க். 1996-ஆம் ஆண்டு முதலமைச்சராகதலைவர் கலைஞர் அவர்கள் இருந்தபோது தொடங்கிய தகவல் தொழில்நுட்பப் புரட்சிதான் கடந்த 27 ஆண்டுகள் அத்துறை மகத்தானவளர்ச்சியைப் பெறுவதற்குக் காரணம்.

உலகம் முழுக்க தமிழ்நாட்டு இளைஞர்கள்பணியாற்றுகிறார்கள் என்றால் அதற்கு கலைஞர்அவர்கள்தான் அடித்தளம் அமைத்தார்கள்.

அதன் அடுத்தகட்டம்தான் கணினிமயமாக்கல்.நம்முடைய அறிவுச் சொத்துக்கள் அனைத்தையும்முழுமையாக அறிவியல் தொழில்நுட்பங்களின்அடிப்படையில் மாற்றிச் சேமித்து வைக்கக்கூடிய, மகத்தான பணியைத் தமிழ் இணையக் கல்விக்கழகம் செய்து வருகிறது.

1999-ஆம் ஆண்டு Tamilnet99 என்ற தமிழ்இணையவழி மாநாட்டின் மூலம் இணையத்தமிழ்தொடர்பான முன்னெடுப்புகளையும், தமிழ்இணையக் கல்விக்கழகத்தின் தோற்றத்தையும்முதல்வர் கலைஞர் அவர்கள் அறிவித்தார். அதன்பின் 5.7.2000 அன்று தமிழ் இணையக் கல்விக்கழகம் தோற்றுவிக்கப்பட்டது.

பல நூறு ஆண்டுகளாகத் தமிழின் சொத்துக்கள்சேகரித்து வைக்கப்படாமல் அழிந்து போய்விட்டது.அந்தத் தவறு தடுக்கப்பட்டு, இன்று தொகுத்தும் - சேகரித்தும் - தொழில்நுட்ப அடிப்படையில்மாற்றியும் வைத்திருக்கிறோம். இந்தத் தமிழ்த்தொண்டைச் செய்து வரக்கூடிய, அமைச்சராக பொறுப்பேற்றிருக்கக்கூடிய திரு. மனோ தங்கராஜ்அவர்களை நான் இந்த நேரத்தில் பாராட்ட விரும்புகிறேன். இந்தப்பணியில் தன்னைமுழுமையாக ஈடுபடுத்திக் கொண்ட தமிழ்இணையக் கல்விக் கழகத்தின் தலைவர் திரு. உதயச்சந்திரன், இ.ஆ.ப., அவர்களையும் நான் இந்த நேரத்தில் மனதாரப் பாராட்டுகிறேன், வாழ்த்துகிறேன்.

சி.வை. தாமோதரனார் - உ.வே.சாமிநாதர் - போன்ற ஒரு சிலரால்தான் தமிழ் இலக்கியங்கள்காப்பாற்றப்பட்டது. அதே போன்ற பணியை தனிஅக்கறையுடன் செயல்படுத்தி வரும் அனைவருக்கும் அரசின் சார்பில் நான் என்னுடைய இதயப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதற்கு மகுடம் வைப்பதைப் போல தமிழ்ப்பரப்புரைக் கழகம் இன்று தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

தமிழர்கள் முப்பதுக்கும் மேற்பட்ட நாடுகளில் அதிகமாகவும் - அறுபதுக்கும் மேற்பட்டநாடுகளில் குறைந்த எண்ணிக்கையிலும் வாழ்கிறார்கள். சில நாடுகளில் தமிழ் எழுதவும் பேசவும் படிக்கவும் மறந்த தமிழர்களும் இருக்கிறார்கள். இவர்கள் அனைவருக்கும் தமிழைச் சொல்லிக் கொடுப்பதற்காகத்தான் தமிழ்ப்பரப்புரைக் கழகம் தொடங்கப்பட்டுள்ளது.

24 மொழிகளில் தமிழ்ப் பாட நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன. 30 நாடுகள் - 20

மாநிலங்களைச் சேர்ந்த தமிழ் அமைப்புகளின் பொறுப்பாளர்களும், ஆசிரியர்களும், மாணவர்களும் இணையவழியாக இணைந்து இந்த விழாவில் பங்கேற்றுள்ளது எனக்கு மகிழ்ச்சியை அளிக்கிறது.

உணர்வால் - உள்ளத்தால் - தமிழால் - நாம்அனைவரும் இணைந்துள்ளோம். அமெரிக்கா, குவைத், ஓமன், நார்வே போன்ற நாடுகளைச் சேர்ந்த நம் உறவுகளும் இணைந்துள்ளார்கள்.

மொழிக்கு மட்டும்தான் இத்தகைய அன்பால் இணைக்கக்கூடிய ஆற்றல் உண்டு. மொழியால் இணைந்தவர்களை சாதியால், மதத்தால் பிரிக்கமுடியாது. தமிழால் ஒன்றிணைய வேண்டிய காலக்கட்டத்தில் தமிழ்ப் பரப்புரைக் கழகம் தொடங்கப்பட்டுள்ளது.

ஒரு காலத்தில் பேராசிரியர் செந்தமிழ் அரிமா என்று போற்றப்பட்ட இலக்குவனார் அவர்கள், தமிழ்ப் காப்புக் கழகம் தொடங்கினார். அது தமிழைக் காக்கவேண்டிய காலக்கட்டமாக இருந்தது. தமிழை நாம் பாதுகாத்து விட்டோம்.

இது தமிழைப் பரப்ப வேண்டிய காலக்கட்டம். அதனால் தமிழ்ப் பரப்புரைக் கழகம் தொடங்கி இருக்கிறோம்.

தாய்மொழியாம் தமிழ் மொழியை உலகெங்கும் கொண்டு செல்லும் உயரிய நோக்கம்தான் இதற்குக் காரணம்!

தமிழ் இணையக் கல்விக் கழகத்தின் சார்பில்

- **அயலக வாழ் தமிழ் மாணவர்களுக்கு அடிப்படைநிலை முதல் பட்டக்கல்வி நிலைவரை தமிழ்க்கல்வி இணையவழியாக அளிக்கப்படுகிறது.**
- **உலகம் முழுவதும் உள்ள தொடர்பு மையங்கள் மூலம் இந்த இணையவழி தமிழ்க் கல்வித்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.**
- **கடந்த ஐந்து ஆண்டுகளில் 28 தொடர்பு மையங்கள் மட்டுமே ஏற்படுத்தப்பட்டன. ஆனால், கடந்த ஓராண்டில் மட்டும் 17 புதிய தொடர்பு மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.**
- **தமிழ்ப் புத்தகங்கள் மின்னுருவாக்கம் செய்யப்படுகின்றன.**
- **கணினித் தமிழுக்குத் தேவைப்படும் மென்பொருட்கள் உருவாக்கப்படுகின்றன.**
- **அண்மையில் கீழடி என்ற விசைப்பலகையும், தமிழிணைய ஒருங்குறி மாற்றியும் நமது அரசால் வெளியிடப்பட்டன.**
- **தமிழ் எழுத்துருக்களைத் தரப்படுத்தி, அவற்றை உலகம் முழுமைக்கும் பொதுமைப்படுத்தி இருப்பதுதமிழ்இணையக்கல்விக்கழகத்தினுடைய முக்கிய சாதனை.**
- **இந்த முன்னேற்றங்களில் மாணவர்களின் பங்கேற்பை உறுதிசெய்ய கணித்தமிழ் பேரவைகள் 200 கல்லூரிகளில் உருவாக்கப்பட்டுள்ளன.**
- **தமிழ் இணையக் கல்விக் கழகத்திற்கு 5 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

தமிழ்மொழி மற்றும் பண்பாட்டு வளர்ச்சிக்கு நமது அரசு அளித்துவரும் முக்கியத்துவத்தைஅனைவரும் அறிவீர்கள். தமிழ்மொழிக்கு செம்மொழி அங்கீகாரம் பெற்றது முதல் பொருநை அருங்காட்சியகம் அமைப்பது வரை, நாங்கள் தமிழுக்காகவும், தமிழர்களின் தொன்மையினை வெளிக் கொணருவதற்காகவும் முன்னெடுக்கும் முயற்சிகள் பலப் பல.

- **2022-23-ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில், தமிழ் வளர்ச்சித் துறைக்கு ரூபாய் 82 கோடிஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**
- **தமிழ் எழுத்தாளர்களைச் சிறப்பித்து வருகிறோம்.**
- **ஜெர்மனி நாட்டின் கொலோன் பல்கலைக்கழகத்தில் தமிழ் இருக்கைக்கான நிதி உதவி அளித்திருக்கிறோம்.**
- **தமிழறிஞர்களின் நூல்களை நாட்டுடைமை ஆக்கியிருக்கிறோம்.**
- **நவிமும்பை தமிழ்ச் சங்கக் கட்டடத்திற்கு நிதிஉதவி செய்யப்பட்டுள்ளது.**
- **தீராக்காதல் திருக்குறள் என்ற பெயரில் தீந்தமிழ் நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டுள்ளது.**
- **பாரதியின் நினைவு நூற்றாண்டு தொடர்பான நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டது.**
- **திருவள்ளுவர் தொடங்கி அறிஞர்கள் பெயரால் விருதுகள் வழங்கி வருகிறோம்.**
- **புகழ்பெற்ற தலைவர்கள், தமிழ் அறிஞர்கள் ஆகியோரின் அரிய ஒலி/ஒளிப் பொழிவுகளை இணையதளத்தில் ஆவணப்படுத்தி வருகிறோம்.**
- **இலக்கிய கூட்டங்கள் நடத்தி வருகிறோம்.**

சில நாட்களுக்கு முன்னால் தமிழகம் வந்த அகில இந்தியத் தலைவர் ஒருவர், “தமிழுக்கு திமு கஎன்ன செய்தது?” என்று கேட்டுவிட்டுப் போய்விட்டார்? தமிழுக்கு என்ன செய்யவில்லை! என்பதுதான் அவருக்கு நம்முடைய பதிலாக இருக்கமுடியும்.

இப்படி ஓராண்டு காலத்தில் தமிழ்த் தொண்டு ஆற்றிய ஆட்சி திமுக ஆட்சி!

இதற்கு மகுடமாகத்தான் தமிழ்ப் பரப்புரைக்கழகம் தொடங்கப்பட்டுள்ளது. இது தமிழின் புகழ்பாடும் கழகம் அல்ல, பேசிக் களிக்கும் கழகம்அல்ல. தமிழை உலகெங்கும் பரப்பக்கூடிய கழகம்!

தமிழர்கள் அனைவரும் தமிழில் எழுத - பேச - படிக்க - சிந்திக்க வேண்டும் என்பதே இதனுடைய முழுமுதல் நோக்கம்!

கல்வி - வேலைவாய்ப்பு - வெளிநாட்டு வாழ்க்கை ஆகியவற்றின் காரணமாக, தமிழை முழுமையாகப் பயன்படுத்த முடியாத சூழலுக்கு அயலகத் தமிழர்கள் தள்ளப்பட்டுள்ளார்கள். இது தவிர்க்கமுடியாத ஒரு நெருக்கடி. அப்படி ஒரு நெருக்கடி இருந்தாலும், தமிழைத் தள்ளிவைத்துவிடக்கூடாது.

மொழிதான் ஒரு இனத்தின் அடையாளம்.

மொழிதான் ஒரு இனத்தின் உயிர்.

மொழிதான் ஒரு மனிதரின் உணர்ச்சிக்கு உணவு.

மொழிதான் ஒருவரின் சிந்தனைக்கு உரம்.

எனவே தாய்மொழிப் பற்று என்பது தாய்மொழிப் படிப்பாக - தாய்மொழி அறிவாக மாற வேண்டும் என்பதே என்னுடைய ஆசை!

இப்போது முதல்நிலை முதல் பருவப் பாடநூல் வெளியிடப்பட்டுள்ளது. தமிழ் மொழியை எளிமையாக கற்க - மாணவர்களின் கற்கும் ஆர்வத்தை தூண்டும்விதத்தில்தயாரிக்கப்பட்டுள்ளது.

விருப்பங்களோடு தமிழைக் கற்கலாம்.

படங்களைக் கொண்டு தமிழைக் கற்கலாம்.

audio books வழங்க இருக்கிறோம்.

சந்தேகங்கள் எழும்போது *video lessons* பார்த்து தெளியலாம்.

flash cards மூலம் அதிக சொற்களைக் கற்கலாம்.

இதன் மூலம் தமிழ் கற்றல் என்பது ஒருபாடமாக இல்லாமல் மகிழ்ச்சியான அனுபவமாக இருக்கும். 24 மொழிகளில்மொழிபெயர்க்கப்பட்டுள்ளது இந்தப் புத்தகம். 12 மொழிகளில் ஒலிப் புத்தகமாகவும் கிடைக்கிறது. *L-S-R-W (listening, Speaking, Reading, Writing)* என் றதிறன்கள் அடிப்படையில் இவை அமைக்கப்பட்டுள்ளன.

இதன் தொடர்ச்சியாக, ஐந்தாம் நிலை வரையிலான பாடப்புத்தகங்கள் தயாரிக்கப்பட்டு வெளியிடப்படவுள்ளன. இதன்மூலமாக தமிழில் பேசலாம், படிக்கலாம் என்பது எளிமையாக்கப்படும். தமிழ் படிப்பது என்பதை சுவைக்காக மட்டுமல்லாமல், தமிழ்ப் பண்பாட்டை அறிவதற்காகவும் அனைவரும் படிக்கவேண்டும். நம்முடைய இலக்கியங்கள் அறநெறியை அதிகமாக வலியுறுத்துகின்றன.

பிரிக்கும் பண்பாடு அல்ல நம்முடையது!

பிணைக்கும் பண்பாடுதான் தமிழ்ப் பண்பாடு!

அத்தகைய பண்பாட்டைக் கொண்ட பழந்தமிழ் இலக்கியங்களை அனைவரும் அறிய தமிழைப் படிக்க வேண்டும்.

தேவாரம் உள்ளிட்ட பாடல்களை இசைக்கோவைகளாக வழங்க இருக்கிறோம்.

முதல்நிலை முதல் பருவத்திற்கான பாடநூல்கள் 26 நாடுகள், 20 மாநிலங்களில் உள்ள தமிழ்ப் பள்ளிகள், தொடர்பு மையங்கள், தமிழ் ஆர்வலர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

இன்று தொடங்கப்பட்டுள்ள தமிழ்ப் பரப்புரைக் கழகத்தின் மூலமாக, 22 நாடுகள் மற்றும் 20 மாநிலங்களைச் சேர்ந்த 25 ஆயிரம் மாணவர்கள் முதற்கட்டமாகப் பயனடை யஇருக்கிறார்கள். இதனை, மேலும் உலகு தழுவி வாழக்கூடிய பல ஆயிரக்கணக்கான அயலகத் தமிழ்மாணவர்களுக்குக் கொண்டு செல்லும் பணியை தமிழ் இணையக் கல்விக் கழகம் மூலமாகத் தமிழ்நாடு அரசு மேற்கொள்ளும்.

தமிழ்நாடு என்று பெயர் சூட்டிய பேரறிஞர்அண்ணாவின் கனவை - செம்மொழித் தகுதியைப் பெற்றுத்தந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் கனவை - நிறைவேறும் நாளாக இது அமைந்துள்ளது.

தொண்டு செய்வாய் தமிழுக்கு;

துறைதோறும் துறைதோறும் துடித்தெழுந்தே !

- என்று வலியுறுத்தி, இந்த இனிய வாய்ப்பைப் பெற்ற இந்த நேரத்தில் உங்கள் அனைவருக்கும் என்னுடைய இதயப்பூர்வமான நன்றியைத் தெரிவித்து என் உரையை நிறைவு செய்கிறேன்.

10

புத்தகச் சந்தை

அறிவுப் புரட்சிக்கான கருவிகள் புத்தகங்களே!

(8.1.2026 சென்னை, நந்தனம், ஒய்.எம்.சி.ஏ. உடற்கல்வியியல் கல்லூரி வளாகத்தில், 49-வது சென்னை புத்தகக் காட்சி 2026-யை தொடங்கி வைத்து, ஆற்றிய உரை)

சென்னையில் தொடர்ந்து 49-வது ஆண்டாக நடைபெற்றுக் கொண்டிருக்கக்கூடிய இந்த புத்தகக் கண்காட்சி. இந்த அறிவுச் சங்கமத்தை அறிவுத்திருவிழாவை தொடங்கி வைப்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். சிந்தனை ஊற்றெடுக்கும் அடித்தளமாக இருக்கும் புத்தகங்களை, மக்களிடம் கொண்டு போய் சேர்க்க வேண்டும் என்கின்ற அந்த எண்ணத்தோடு, இந்தப் புத்தகக் கண்காட்சியை தொடர்ந்து நடத்திக் கொண்டிருக்கக்கூடிய தென்னிந்திய புத்தக விற்பனையாளர்கள் மற்றும் பதிப்பாளர்கள் சங்கத்திற்கு என்னுடைய மனமார்ந்த பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்!

1977-இல் தொடங்கிய இந்த அறிவுப்பணி, இப்போது 49-ஆவது ஆண்டில் இருந்து கொண்டிருக்கிறது. அன்றைக்கு 13 அரங்குகளுடன் தொடங்கப்பட்ட இந்தப் புத்தகக் கண்காட்சி, இன்றைக்கு 900 அரங்குகளுடன் இருப்பதே, இதன் வெற்றிக்கான சாட்சியாக அமைந்திருக்கிறது!

இந்த வெற்றியை அடுத்தக் கட்டத்திற்கு கொண்டு செல்வது போல, புதிதாக வெற்றி பெற்றிருக்கும் ப.பா.சி. பொறுப்பாளர்கள் செயல்படுவார்கள் என்று உங்களைப் போல நானும் நம்புகிறேன். அந்த நம்பிக்கையை அளிக்கும் விதமாகதான், உங்களின் செயல்பாடுகளும் இருந்து கொண்டிருக்கிறது.

குறிப்பாக, இன்னும் அதிகளவிலான மக்கள், இந்தக் கண்காட்சிக்கு வரவேண்டும் என்று, நுழைவுக் கட்டணத்தை ரத்து செய்திருப்பதை நான் வரவேற்கிறேன்; வாழ்த்துகிறேன்!

இதில், தனிப்பட்ட முறையில் எனக்கு கூடுதல் மகிழ்ச்சி அளிக்கக்கூடியது என்னவென்றால், தலைசிறந்த படைப்பாளிகளுக்கு, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பெயரால் பொற்கிழி விருதுகளை வழங்கியது. அதிலும் குறிப்பாக, தலைவர் கலைஞர் அவர்களே இந்தப் புத்தகக் கண்காட்சிக்கு தன்னுடைய சொந்த நிதியில் இருந்து வழங்கிய ஒரு கோடி ரூபாய் நிதியிலிருந்து பெறப்படும் வட்டித் தொகையில் இருந்து, ஆண்டுதோறும் 6 எழுத்தாளர்களுக்கு தலா ஒரு இலட்சம் ரூபாய் வழங்கிக் கொண்டிருக்கிறோம்!

அப்படி வழங்கப்பட்ட இதுவரைக்கும் ஒரு கோடியே 11 இலட்சம் ரூபாயை விருதாக வழங்கியிருக்கிறோம்.

இந்த ஆண்டிற்கான விருதுகளை நவீன தமிழ்க் கவிதையின் மிக முக்கியமான முகமாக இருக்கும் கவிஞர் சுகுமாரன் அவர்களுக்கு கவிதைக்கும் –

ஒடுக்குமுறைகளுக்கு எதிராக காத்திரமான படைப்புகளைப் படைக்கும் ஆதவன் தீட்சண்யா அவர்களுக்கு சிறுகதைக்கும் –

பன்முக எழுத்துக்குச் சொந்தக்காரரான இரா. முருகன் அவர்களுக்கு நாவலுக்கும் –

ஓவியங்கள், சிற்பங்கள், கட்டடக் கலைகள் அது குறித்த ஆய்வை நெடுங்காலமாக செய்துவரும் பேராசிரியர் பாரதிபுத்திரன் அவர்களுக்கு உரைநடைக்கும் –

நவீன நாடக மேடைகளில் இயங்கி வரும் முக்கியமான கலைஞரான கருணா பிரசாத் அவர்களுக்கு நாடகத்திற்கும்,

தமிழ்நாட்டின் மிக முக்கியமான அறிஞரும், எஸ். வி.ராஜதுரை அவர்களுடன் இணைந்து, பெரியார் சுயமரியாதைச் சமதர்மம் என்ற முக்கியமான வரலாற்று ஆவணத்தை தந்துள்ள வ.கீதா அவர்களுக்கு மொழிபெயர்ப்புக்கும் இன்றைக்கு வழங்கியிருப்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்; பெருமை அடைகிறேன்! அதற்காக உங்கள் எல்லோருக்கும் என்னுடைய நெஞ்சம் நிறைந்த வாழ்த்துகளை நான் தெரிவித்துக் கொள்கிறேன்!

நம்முடைய எண்ணம் எல்லாம், தமிழ்ச் சமூகம், அறிவில் சிறந்த சமூகமாக உலகத்தால் மதிக்கப்பட வேண்டும். அதற்கான அறிவுப்புரட்சியை ஏற்படுத்த நம்முடைய மண்ணில் தோன்றியதுதான், திராவிட இயக்கம்! இந்த அறிவுப்புரட்சிக்கு நாம் பயன்படுத்திய முக்கியமான கருவிதான், புத்தகங்கள்!

அதனால்தான், தந்தை பெரியார் அவர்கள், “என்னுடைய வாரிசுகள் என்பது, என்னுடைய புத்தகங்கள்தான்” என்று சொன்னார்.

பேரறிஞர் அண்ணா அவர்கள், “வீட்டுக்கு ஒரு நூலகம் அமையுங்கள்” என்று சொன்னார்.

அதைப்போல நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள், “புத்தகங்கள் மூலம் உலகைப் படியுங்கள்” என்று கட்டளையிட்டார். “அறிவுக்கான தீ பரவட்டும்” என்று அவர்கள் சொன்ன பாதையில்தான், நம்முடைய திராவிட மாடல் அரசும் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது!

இன்னும் சொல்ல வேண்டும் என்றால், தனிப்பட்ட முறையில், 2017-ஆம் ஆண்டு முதலே, என்னை சந்திக்க வருபவர்கள், அப்படி சந்திக்க வருகின்றபோது, எனக்கு பொன்னாடைகளுக்கும் பூங்கொத்துகளுக்கும் வழங்கக்கூடியவர்கள் அதற்குப் பதிலாக புத்தகங்களை வழங்க வேண்டும் என்று நான் சொன்னேன். அப்படி பெறப்பட்ட புத்தகங்களை, அண்ணா அறிவாலயத்தில் இருக்கும் பேராசிரியர் அன்பழகன் ஆய்வு நூலகம் மூலமாக, அந்த புத்தகங்கள் கேட்டு எனக்கு கடிதம் எழுதிய மாணவர்கள், இளைஞர்கள், படிப்பு வட்டங்கள், நூலகங்கள் என்று நான் தொடர்ந்து வழங்கிக் கொண்டிருக்கிறேன். இதுவரை எவ்வளவு புத்தகங்கள் அந்த அடிப்படையில் வழங்கப்பட்டிருக்கிறது தெரியுமா! சுமார் நான்கு இலட்சம் புத்தகங்கள் வழங்கப்பட்டு, அவைகள் எல்லாம் நான் பல்வேறு இடங்களுக்கு அனுப்பி வைத்திருக்கிறேன்.

தமிழ்நாடு மட்டுமல்ல, இலங்கை உள்ளிட்ட தமிழர்கள் வாழக்கூடிய நாடுகளுக்கும் அனுப்பியிருக்கிறோம். புத்தகங்களை பரிமாறுவதை ஒரு இயக்கமாகவே நடத்திக் கொண்டிருக்கிறோம்.

அண்மையில்கூட, தி.மு.க. இளைஞரணி சார்பில் வள்ளுவர் கோட்டத்தில் அறிவுத்திருவிழா நடத்தினார்கள். நான் வள்ளுவர் கோட்டத்திற்கு சென்று, அங்கு அரைநாள் முழுவதும் சுற்றிப்பார்த்து, அந்த புத்தகக் கடைகளை எல்லாம் நான் மகிழ்ச்சியோடு, பெருமையோடு, பூரிப்போடு பார்வையிட்டேன். நேரம் சென்றதே தெரியவில்லை. அந்த அளவிற்கு நான் பார்வையிட்டேன்.

தொடர்ந்து ஏராளமானோர், அங்கு வந்து புத்தகங்களை வாங்கி செல்லும் செய்தியை பார்த்தபோது நான் உண்மையிலேயே மகிழ்ச்சி அடைந்தேன். இப்படி நாம் வாங்கும் ஒவ்வொரு புத்தகமும் தனிப்பட்ட முறையில் நமக்கும் – நம்முடைய சமூகத்திற்கும் – எதிர்காலத்திற்கும் பயனளிக்கும் விலைமதிக்க முடியாத சொத்தாக அமைகிறது!

திராவிட முன்னேற்றக் கழகத்தின் மூலமாக மட்டுமல்ல, திராவிட மாடல் அரசு மூலமாகவும், வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்க வேண்டும் - புத்தகங்களை எல்லோருடைய கைகளுக்கும் கொண்டு சேர்க்க வேண்டும் என்று ஏராளமான திட்டங்களையும், முன்னெடுப்புகளையும் நாம் தொடர்ந்து செய்துகொண்டு இருக்கிறோம்!

நாம் செய்துகொண்டிருக்கும் பணிகளில் சிலவற்றை மட்டும் நான் தலைப்புச் செய்திகளாக சொல்ல வேண்டும் என்றால், இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் மட்டும்தான், தமிழ்நாடு அரசால், கன்னிமாரா நூலகத்தின் ஒரு பகுதியில், நிரந்தரப் புத்தகக் கண்காட்சிக்கு இடம் வழங்கப்பட்டு இருக்கிறது.

புத்தக கண்காட்சியை நடத்த ஆண்டுதோறும் 75 இலட்சம் ரூபாயை வழங்கிக் கொண்டிருக்கிறோம். கொரோனா காலகட்டத்தில், இந்த புத்தகப் பதிப்பாளர்கள், வெளியீட்டாளர்கள் அமைப்புக்கு 50 இலட்சம் ரூபாய்

நிதியுதவி வழங்கினோம். அந்த நிதியில் இருந்து பதிப்பாளர்கள் ஒவ்வொருவரும் 10 ஆயிரம் ரூபாய் நிதியுதவியைப் பெற்று பயனடைந்திருக்கிறார்கள்.

சென்னையில் மட்டுமல்ல, தமிழ்நாடு முழுவதும் புத்தகக் கண்காட்சி நடைபெறக் காரணம், நம்முடைய திராவிட மாடல் அரசுதான் என்று பெருமையுடன் சொல்வேன்.

இன்றைக்கு பார்க்கிறோம் - சென்ட்ரல் மெட்ரோ ரயில் நிலையத்தில், பள்ளிக்கல்வித் துறை சார்பில், சென்னை புத்தகப் பூங்கா அமைத்திருக்கிறோம்.

கடந்த மூன்று ஆண்டுகளாக பன்னாட்டு புத்தகக் கண்காட்சியையும் தொடர்ந்து நடத்திக்கொண்டிருக்கிறோம். வெளிநாட்டு நூல்களை தமிழில் மொழிபெயர்க்கவும் - தமிழ் நூல்களை உலக மொழிகளில் வெளியிடவும் - முத்தமிழ் அறிஞர் மொழிபெயர்ப்பு திட்டத்தைச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம்.

இது எல்லாவற்றையும்விட, நான் நினைத்து நினைத்து பெருமைப்படக் கூடிய திட்டமாக, 218 கோடி ரூபாயில், நாம் மதுரையில் அமைத்திருக்கும் கலைஞர் நூற்றாண்டு நூலகம் இருக்கிறது!

ஏனென்றால், 2007-இல் தலைவர் கலைஞர் அவர்கள் அறிவித்து, இங்கு சென்னையில், கோட்டூர்புரம் பகுதியில் அமைந்திருக்கக்கூடிய அண்ணா நூற்றாண்டு நூலகத்தை அவர் உருவாக்கினார். அந்தப் பயணத்தை, இப்போது நம்முடைய திராவிட மாடல் அரசில் இன்னும் வேகமாக தொடர்ந்து கொண்டு இருக்கிறோம். 2023-இல் திறக்கப்பட்ட இந்த கலைஞர் நூற்றாண்டு நூலகத்திற்கு, இதுவரைக்கும் வந்த பார்வையாளர்களின் எண்ணிக்கை எவ்வளவு தெரியுமா? 24 இலட்சத்து 72 ஆயிரத்து 988 பேர் வந்திருக்கிறார்கள். இதுதான், தமிழர்கள் புத்தகங்கள் மீது கொண்டிருக்கும் பற்றுக்கு சாட்சி!

இந்த அறிவுத் தேடலையும் - வாசிப்பு பழக்கத்தையும் அதிகரிக்க வேண்டும், பரவலாக்க வேண்டும் என்றுதான், திருச்சியில், காமராசர் அறிவுலகம், கோவையில், பெரியார் அறிவுலகம், திருநெல்வேலியில், காயிதே மில்லத் அறிவுலகம், சேலத்தில், பாரதிதாசன் அறிவுலகம், கடலூரில், அஞ்சலை அம்மாள் அறிவுலகம் என்று அமைப்பதற்கான பணிகளை நாம் செய்துகொண்டு இருக்கிறோம்.

இதுமட்டுமல்லாமல், பழைய நூல்களை எல்லாம் புதுப்பித்துக் கொண்டிருக்கிறோம் - பழைய நூலகங்களை எல்லாம் புதுப்பித்துக் கொண்டிருக்கிறோம். உள்ளாட்சி அமைப்புகளின் வழியாக, 604 நூலகக் கட்டடங்கள் கட்டியிருக்கிறோம். ஆயிரத்து 469 பொது நூலகங்களுக்கு வை-ஃபை வசதியும் ஏற்படுத்தி தந்திருக்கிறோம்.

அண்ணா நூற்றாண்டு நூலகத்தில், சென்னை இலக்கியத் திருவிழா, நெல்லையில், பொருநை, கோவையில், சிறுவாணி, திருச்சியில், காவிரி, மதுரையில், வைகை என்று இலக்கியத் திருவிழாக்களை எல்லாம் தொடர்ந்து நடத்திக் கொண்டு இருக்கிறோம்! அதுமட்டுமா?

தமிழ்நூல்கள் நாட்டுடைமை

எழுத்தாளர்கள் பிறந்தநாளில் கூட்டங்கள்

குறைந்த விலையில் சங்க இலக்கிய நூல்கள் வெளியீடு

திராவிடக் களஞ்சியம் உருவாக்கம்

இதழியலாளர்களுக்கு கலைஞர் எழுதுகோல் விருது

உலகப் பல்கலைக்கழகங்களில் செம்மொழித் தமிழ் இருக்கைகள்

நூலகங்களுக்கு சிற்றிதழ்கள்

இலக்கியமாமணி விருதுகள்

உயரிய விருது பெற்ற எழுத்தாளர்களுக்கு கனவு இல்லம்

திசைதோறும் திராவிடம் என்று எழுத்தாளர்களுக்கு ஏராளமான திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இப்படி என்னால் இன்னும் நிறைய முன்னெடுப்புகளை சொல்ல முடியும்!

இதையெல்லாம், தமிழ்நாட்டு மக்கள், குறிப்பாக, இளைஞர்கள் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். இரண்டு

இளைஞர்கள் சந்தித்துக்கொண்டால், “இப்போது நீங்கள் படித்துகொண்டு இருக்கும் புத்தகம் என்ன?” என்று புத்தகங்களை மையமாக வைத்து பேசும் அளவிற்கு இருக்க வேண்டும். புத்தகங்களை பற்றி விவாதிக்கும் அளவிற்கு வாசிப்பு பழக்கம் அதிகரிக்க வேண்டும்; அறிவுத்தீ பரவ வேண்டும்!

இன்றைக்கு வளர்ந்திருக்கும் தொழில்நுட்பம், புத்தகங்களை படிக்க நிறைய வாய்ப்புகளை உருவாக்கியிருக்கிறது. மின்னூல்கள், கிண்டில் கருவி என்று நிறைய ஆப்ஷன்ஸ் வந்துவிட்டது. பல்வேறு இணைய நூலகங்களில் இருந்து, நம்மால் எளிதாக புத்தகங்களை டவுன்லோட் செய்ய முடியும். இத்தனை வாய்ப்புகள் இருந்தாலும், ஒரு புத்தகத்தை கையில் ஏந்தி, ஒவ்வொரு பக்கமாக புரட்டி படிக்கும் அனுபவமே தனி சுகம் தான். புத்தகத்தின் ஒவ்வொரு பக்கத்தையும் புரட்டும்போதும், புது வெளிச்சம் உண்டாகும். அந்த வெளிச்சத்தில் அறியாமை எனும் இருள் விலக வேண்டும்.

இளைஞர்களுக்கு நான் சொல்வதெல்லாம்... தமிழும், தமிழ்நாடும் செழிக்க வேண்டும் என்றால், நீங்கள் வெற்றியாளர்களாக உயர வேண்டும் என்றால், புத்தகங்கள் எனும் அறிவாயுதங்களை இறுகப்பற்றிக் கொள்ளுங்கள்! வெளிநாடுகளுக்கு செல்லும்போது, அங்கு பூங்காக்கள், பயணங்கள் என்று பொது இடங்களில் நிறைய பேர் புத்தகங்களை படித்துகொண்டே செல்வதை பார்ப்பதுண்டு. நீங்களும் பார்த்திருப்பீர்கள். ஆனால், இங்கு அந்த நிலைமை இல்லை. இது மாற வேண்டும். உங்களின் சிந்தனைகள் வளர வளரத்தான் நம்முடைய தமிழினத்தின் வளர்ச்சி, மேல் நோக்கி போகும். போராடி போராடி இந்த நிலைமைக்கு உயர்ந்து வந்திருக்கிறோம். இங்கிருந்து நாம் முன்னால்தான் செல்ல வேண்டும். யாரும் நம்மை வீழ்த்த அனுமதிக்க கூடாது. அதனால், தினமும் ஒருமணி நேரமாவது படிக்கும் பழக்கத்தை வளர்த்துக்கொள்ளுங்கள். உங்கள் நேரத்தை புத்தகங்களில் செலவு செய்யுங்கள். புதிய எழுத்தாளர்கள் உருவாகி வாருங்கள். எழுத்துகளை படிக்க படிக்க எண்ணங்கள் வளரும்... எண்ணங்களை எழுத்துகளாக படைக்கும் பழக்கத்தை உண்டாக்கிக்கொள்ளுங்கள்! அதற்கு இதுபோன்ற புத்தகக் கண்காட்சிகள் நிச்சயம் கை கொடுக்கும்!

இந்த நிகழ்ச்சியை நேரலையிலும், செய்திகளிலும் பார்ப்பவர்களிடம் நான் கேட்டுக்கொள்வது - சென்னையிலும், சுற்றுப்புற மாவட்டங்களிலும் இருப்பவர்கள், இந்தப் புத்தக கண்காட்சிக்கு வாருங்கள்... விடுமுறை நாட்களில், குழந்தைகளுடன் வாருங்கள்... குழந்தைகளுக்கு புத்தகங்களை அறிமுகப்படுத்துங்கள்...

புத்தகக் கண்காட்சிகள் என்பது, எழுத்தாளர்களுக்கு மட்டுமானது அல்ல; அனைவருக்கும் சொந்தம்! வாசிப்பு பழக்கம் வளரவும் - சமூகத்தை முன்னோக்கி நகர்த்தும் படைப்புகளை ஊக்குவிக்கவும் நம்முடைய திராவிட மாடல் அரசு இருக்கிறது.

11

பன்னாட்டு புத்தகத் திருவிழா



தேசிய அளவில் இலக்கிய விருதுகள்

(18.1.2026 சென்னையில் நடைபெற்ற சென்னை பன்னாட்டுப் புத்தகத் திருவிழா - 2026 நிறைவு விழாவில் ஆற்றிய உரை)

மனித இனம் தன்னுடைய சிந்தனைகளை, தான் சேர்த்த அறிவுச் செல்வத்தை, பிறருக்கும், அடுத்தடுத்த தலைமுறைகளுக்கும் கொண்டு சேர்க்கும் கருவிதான், புத்தகங்கள்!

வாசிப்பு மூலமாக, தமிழ்நாட்டில் இருக்கின்ற ஒவ்வொரு வீட்டிலும் அறிவுத்தீ பரவ வேண்டும் என்று, ஏராளமான முன்னெடுப்புகளை நம்முடைய திராவிட மாடல் அரசு சார்பில் எடுத்து செய்து கொண்டிருக்கிறோம்! அதில் முக்கியமானது தான், புத்தகத் திருவிழாக்கள்!

எழுத்தாளர்கள் - பதிப்பாளர்கள் - விற்பனையாளர்கள் - வாசகர்கள் என்று எல்லோருக்குமான உறவுப் பாலமாக, இந்த புத்தகத் திருவிழாக்களை சிறப்பாக நாம் நடத்திக் கொண்டிருக்கிறோம்!

தலைநகரான சென்னையில் மட்டுமல்லாமல், தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய அனைத்து மாவட்டங்களிலும் புத்தகத் திருவிழாக்களை தொடர்ந்து நடத்திக் கொண்டிருக்கிறோம். இதன் தொடர்ச்சியாகதான், இந்த நான்காவது சென்னை பன்னாட்டு புத்தகத் திருவிழா நடைபெற்றுக் கொண்டிருக்கிறது!

102 நாடுகளின் பங்கேற்போடு சிந்தனையின் ஊற்றாக, பண்பாட்டின் கருவூலமாக, அறிவுப் பரிமாற்றத்தின் அடித்தளமாக, இந்த பன்னாட்டு புத்தகத் திருவிழா நிறைவடைந்ததில் தமிழ்நாடு முதலமைச்சராக மட்டுமல்லாமல், புத்தகத்தின் ஆர்வலனாகவும் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்!

அதுவும் சர்வதேச புக்கர் பரிசை வென்ற கன்னட பெண் எழுத்தாளர் மரியாதைக்குரிய பானு முஷ்டாக் அவர்கள், இந்த மேடையில் இருப்பது என்னுடைய மகிழ்ச்சியை மேலும் கூட்டுகிறது! இங்கே வந்தவுடன் என்னைப் பார்த்து, நான் ஆற்றக்கூடிய செயல்பாடுகள் பெருமை அளிப்பதாக சொன்னார். உண்மையிலேயே அவர்களின் எழுத்து தான் நம்மை பெருமைப்படுத்துகிறது.

“ஏற்கனவே, ஒய்.எம்.சி.ஏ. திடலில், ஒரு புத்தகக் கண்காட்சி நடைபெறுகிறதே, அப்படியானால், இந்த பன்னாட்டுப் புத்தகத் திருவிழாவின் மைய நோக்கம் என்ன?” என்று சிலர் நினைத்துக் கொண்டிருக்கலாம். அவர்களுக்கு நான் சொல்லிக்கொள்ள விரும்புவது, இந்தப் புத்தகத் திருவிழாவில் - மொழிபெயர்ப்புகள், பதிப்புரிமை பரிமாற்றம் ஆகியவற்றில்தான் மிகுந்த முக்கியத்துவம் செலுத்தியிருக்கிறோம்! அது எவ்வளவு அவசியம் என்பதற்கு இங்கே வந்திருக்கக்கூடிய பானு முஷ்டாக் அவர்களின் வெற்றியே ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக அமைந்திருக்கிறது! ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டதால்தான் அவருடைய “ஹார்ட் லேம்ப்” நூலும், தென்னிந்தியப் பெண்களின் வாழ்வுரிமை வாழ்க்கையும், உலக அளவில் கவனம் பெற்றிருக்கிறது!

நம்முடைய திராவிட மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த, சிறுபான்மை சமூகத்தைச் சேர்ந்த, பிற்போக்குத்தனங்களை எதிர்க்கின்ற, சமூகநீதிப் பார்வை கொண்ட, ஒரு பெண் எழுத்தாளரின் வருகையால் நம்முடைய புத்தகத் திருவிழா இன்றைக்கு மிகுந்த சிறப்படைந்திருக்கிறது!

எதையும் கேள்விகேட்டு, விமர்சனப் பார்வையுடன் அணுகி, பழமைகளை பொசுக்கிய திராவிட இயக்கம் தமிழ்நாட்டை பண்படுத்தியது! அதேபோல, கர்நாடகத்தில், கன்னட புரட்சி இலக்கிய மரபில் இயங்கி வருகின்ற பானு முஷ்டாக் அவர்கள், நம்முடைய அழைப்பை ஏற்று வருகை தந்தமைக்காக என்னுடைய நன்றியை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்!

ஜெர்மனி, இங்கிலாந்து, இத்தாலி, அமீரகம் -இப்படி, உலகத்தின் பல பகுதிகளில், இது போன்ற பன்னாட்டு புத்தகத் திருவிழாக்கள் நடைபெறுகின்ற செய்திகளை நான் பார்ப்பதுண்டு. அப்போதெல்லாம் இப்படிப்பட்ட முன்னெடுப்புகள், தமிழ்நாட்டிலும் நடைபெற வேண்டும் என்று நான் நினைப்பேன்! அந்த எண்ணத்தை இப்போது நம்முடைய திராவிட மாடல் அரசில் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம்!

இந்தப் புத்தகத் திருவிழாவில், நிறைய அறிவார்ந்த, இக்காலத்துக்கு அவசியமான உரையாடல்களும் ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதைப் பார்த்து நான் பெருமைப்பட்டேன். அதை பொதுமக்களிடமும் பகிர்ந்து கொண்டு, அவர்களை இந்தப் புத்தகத் திருவிழாவை நோக்கி அழைத்துக் கொண்டு வரவேண்டும் என்பதுதான் - “ஏ.ஐ. - அலாவுதீன் அற்புத விளக்கா? டிரோஜன் குதிரையா?” - “புத்தகங்களின் எதிர்காலம் குறித்த பிரெஞ்சு பார்வை” - “ஒடுக்கப்பட்ட மக்களின் இலக்கியம்” - “மொழிபெயர்ப்பாளர், மொழிபெயர்ப்பு சார்ந்த சவால்கள்” - “ரீல்ஸ் யுகத்தில் இலக்கியம் கவனம் பெறுவதில் உள்ள சவால்கள்” - “பெண் இலக்கியம்சார் சவால்கள்“ -இப்படி சுவாரசியமான பல பொருட்களில் உள்ள உரையாடல்கள் நடத்துகிறீர்கள்

என்று என்னுடைய சமூக வலைத்தளப் பக்கங்களிலும் 'ஷேர்' செய்தேன்! அதுவும் தமிழ்நாட்டைச் சேர்ந்த ஆளுமைகளின், இந்திய, வெளிநாட்டு ஆளுமைகளும் சேர்ந்து பேசியது, ஒரு பரந்து விரிந்த பார்வையை எல்லோருக்கும் வழங்கியிருக்கும் என்று நான் நம்புகிறேன்.

நம்முடைய மண்ணின் சிந்தனைகளும், எழுத்துகளும் உலகம் முழுக்கப் பரவவேண்டும்; உலகின் உயரிய சிந்தனைகள் நம்முடைய மக்களிடம் வந்தடைய வேண்டும் என்ற கனவு இந்த நிகழ்ச்சியால் நனவாகியிருக்கிறது!

மொத்தத்தில் இப்படியொரு அறிவுச் சங்கமத்தை வெற்றிகரமாக நடத்தியிருக்கின்ற நம்முடைய பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் என்னுடைய அருமை தம்பி அன்பில் மகேஸ் அவர்களுக்கும், செயலாளர் திரு.சந்தர மோகன், இ.ஆ.ப., அவர்களுக்கும், பொதுநூலக இயக்ககத்திற்கும், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்திற்கும், பன்னாட்டு ஒருங்கிணைப்பாளர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த பாராட்டுக்கள்! வாழ்த்துகள்!

அமைச்சர் அன்பில் மகேஸ் அவர்களைப் பற்றி நான் சொல்ல வேண்டும் என்றால், பள்ளிக்கல்வித் துறை என்கிற மிகப் பெரிய பொறுப்பு அவருக்கு ஒப்படைக்கப்பட்டதில் இருந்து, அதற்கேற்ப தன்னை தயார்படுத்திக் கொண்டு உழைத்துக் கொண்டு வருகிறார். இன்னும் சொல்லவேண்டும் என்றால், அவரே ஒரு டீச்சர் போல ஆகிவிட்டார். டீச்சர் போல மட்டுமல்ல, தொடர்ந்து கற்கும் மாணவராகவும் இருந்து முனைவர் பட்டம் பெற்று மாணவர்களுக்கு ஒரு நல்ல ரோல்மாடலாக இன்றைக்கு அவர் திகழ்ந்து கொண்டிருக்கிறார்.

இங்கே அவர் பேசும்போது சொன்னார், நான்கு ஆண்டுகளில், சென்னை பன்னாட்டுப் புத்தகத் திருவிழாவை உலக அளவிலான பதிப்புரிமை பரிமாற்ற மையமாக உருவெடுத்திருப்பதை நமக்குக் கிடைத்திருக்கக்கூடிய மிகப்பெரிய வெற்றியாக நான் பார்க்கிறேன்.

இன்று, நூற்றுக்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த பதிப்பாளர்கள் இங்கே குழுமியிருப்பது, சென்னை பன்னாட்டு அறிவு மையமாக உயர்ந்து வருவதை உறுதிப்படுத்துகிறது.

இலக்கியத்திற்கு எல்லைகள் கிடையாது! திருவள்ளுவரின் அறமும், இளங்கோ அடிகளின் காப்பியமும், பாரதியின் கவிதைகளும், பாரதிதாசனின் கருத்துக்களும் உலகமெல்லாம் ஒலிக்கவேண்டும்.

அதே வேளையில், உலகத்தரம் வாய்ந்த அறிவியல் மற்றும் இலக்கியப் படைப்புகள், எளிய தமிழில், நம்முடைய கிராமத்து மாணவர்களுக்கும் கிடைக்க வேண்டும். இதற்காகவே நம்முடைய அரசு, 'தமிழ்நாடு மொழிபெயர்ப்பு முகமை' மூலம் பல கோடி ரூபாய் நிதியை ஒதுக்கித் தந்து, கடந்த 3 ஆண்டுகளில், நூற்றுக்கணக்கான நூல்கள் இதன் மூலமாக மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது.

இந்தப் புத்தகத் திருவிழாவில் நடைபெறும் 'பதிப்புரிமைப் பரிமாற்றம்' வெறும் வணிகம் கிடையாது; இரு மொழிகளுக்கு இடையே நடைபெறுகின்ற பண்பாட்டுக் கைக்குலுக்கல்! செம்மொழியான தமிழின் சங்க இலக்கியங்கள் முதல் நவீன இலக்கியங்கள் வரை உலக மக்களுக்கு சென்று சேரவேண்டும்! இந்த நிலப்பரப்பிலிருந்து எவ்வளவு ஆழமான, பரந்த சிந்தனை கொண்ட கருத்துக்கள், இலக்கிய, இலக்கண மரபுகள் உருவாகியிருக்கிறது என்று நாம் உணர்த்த வேண்டும்!

தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் மூலமாக, சிறந்த தமிழ்ப் படைப்புகளை ஆங்கிலம், பிரெஞ்ச், ஜெர்மன் மற்றும் ஸ்பானிஷ் உள்ளிட்ட 20-க்கும் மேற்பட்ட மொழிகளில், மொழிபெயர்க்க நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறோம். *A.I.* கோலோச்சும் இந்த காலத்தில், புத்தகங்களையும், நவீனத் தொழில்நுட்பத்தையும் இணைக்க வேண்டிய அவசியத்தையும் எடுத்துகாட்டுவதாக இந்த அரங்கம் சிறப்பாக அமைந்திருக்கிறது.

இங்கே வந்திருக்கின்ற உலகப் பிரதிநிதிகளுக்கு நான் ஒரு செய்தியை அழுத்தமாக சொல்ல விரும்புகிறேன். தமிழ்நாடு என்பது நீங்கள் தொழில் முதலீடு செய்ய

மட்டும் உகந்த மாநிலம் இல்லை; அறிவைப் பகிர்ந்து கொள்வதற்கும் மிகச் சிறந்த மாநிலம். கீழடி முதல் பொருநை வரை கண்டெடுத்த தொல்லியல் சான்றுகளை பாருங்கள்; தமிழ்ச் சமூகத்தின் அறிவு மரபு எப்படிப்பட்டது என்பது அப்போது புரியும்!

உலக நாடுகளின் சிறந்த படைப்புகளைத் தமிழில் கொண்டு வாருங்கள்; அதேபோல, மனிதநேயத்தையும், சமூகநீதியையும் பேசுகின்ற எங்கள் திராவிடக் கருத்தியல் இலக்கியங்களையும் உங்கள் நாட்டு மக்களுக்கு அறிமுகப்படுத்துங்கள்; எழுத்தாளர்கள் உலகை வெல்வதை பெருமிதத்தோடு எதிர்நோக்கி அனைவரும் காத்திருப்போம்.

மொழி என்பது பிரிக்கக்கூடிய சுவர் இல்லை, அது உலக மக்களை இணைக்கும் பாலம். புத்தகங்கள் வெறும் பேப்பர் கிடையாது! அவை ஒரு தலைமுறை, மற்றொரு தலைமுறைக்கு விட்டுச் செல்லும் அறிவுச் சொத்து.

எனது அன்பிற்குரிய மாணவர்களே, இளைஞர்களே! ஒரு புத்தகத்தைத் திறப்பவர், உலகத்தின் ஜன்னலைத் திறக்கிறார். ஒரு புத்தகத்தை வாசிப்பவர், ஆயிரம் மனிதர்களின் வாழ்க்கையை வாழ்கிறார். நீங்கள் வாசிக்கின்ற ஒவ்வொரு பக்கமும் உங்கள் தன்னம்பிக்கையை வளர்க்கும். அறிவார்ந்த சமூகத்தைப் படைப்போம்! ‘உலகை தமிழுக்கும், தமிழை உலகுக்கும் கொண்டு சேர்ப்போம்’ என்று சொல்வோம்.

என்னுடைய உரையை நிறைவு செய்வதற்கு முன்பு, சில நாட்களுக்கு முன்பு, மனதுக்கு நெருடலாக ஒரு செய்தி தலைநகர் தில்லியில் இருந்து வந்தது. உங்களுக்கெல்லாம் தெரிந்திருக்கும். 2025-ஆம் ஆண்டுக்கான சாகித்ய அகாதெமி விருதுகள் இறுதி செய்யப்பட்டு, அறிவிக்கப்பட இருந்த நிலையில், ஒன்றிய அரசின் கலாச்சாரத் துறை தலையீட்டால், விருது அறிவிக்கும் நிகழ்ச்சி இரத்து செய்யப்பட்டிருக்கிறது. இனி, அது நடக்குமா? என்றும் தெரியவில்லை. கலை இலக்கிய விருதுகளில் கூட அரசியல் குறுக்கீடுகள் செய்வது ஆபத்தானது. இப்படி ஒரு சூழலில், தமிழ்நாடு அரசு ஆக்கப்பூர்வமான, உரிய எதிர்வினையை ஆற்றவேண்டும் என்று, பல்வேறு எழுத்தாளர்களும், கலை இலக்கிய அமைப்புகளைச் சார்ந்தோரும் என்னிடம் கோரிக்கை விடுத்திருந்தார்கள். இது, காலத்தின் தேவை என்று நாங்களும் உணர்ந்தே இருக்கிறோம்.

அதன்படி, உங்களுக்கு மகிழ்ச்சியளிக்கின்ற ஒரு அறிவிப்பை இந்த மேடையில் வெளியிட விரும்புகிறேன்.

“குறிப்பிட்ட இந்திய மொழிகளில் வெளியாகின்ற, தலைசிறந்த இலக்கிய படைப்புகளுக்கு தமிழ்நாடு அரசின் சார்பில், ஆண்டுதோறும் தேசிய அளவிலான விருதுகள் வழங்கப்படும்”. இதனை அறிவிப்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். முதல்கட்டமாக, தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், ஒடியா, வங்காளம் மற்றும் மராட்டிய மொழிகளில் வெளியாகின்ற தலைசிறந்த படைப்புகளுக்கு ஆண்டுதோறும் “செம்மொழி இலக்கிய விருது” என்ற பெயரில் அந்த விருது வழங்கப்படும். விருதுடன், தலா 5 இலட்சம் ரூபாய் பரிசுத்தொகையும் வழங்கப்படும்.

படைப்புகளின் இலக்கிய தரத்தையும், வெளிப்படையான தேர்வு முறையையும் உறுதி செய்யும் விதமாக புகழ்பெற்ற எழுத்தாளர்கள், விருதாளர்கள் அடங்கிய குழு ஒவ்வொரு மொழிக்கும் தனியே அமைக்கப்படும். புரவலர் பணியை தமிழ்நாடு அரசு மனநிறைவோடு மேற்கொள்ளும்.

அடுத்து அமையப்போவதும் திராவிட மாடல் 2.0 ஆட்சிதான்! அப்போது, இதைவிட பெரிய அளவில், உலகத்தின் கவனத்தை ஈர்க்கும் வகையில், இந்த பன்னாட்டுப் புத்தகத் திருவிழாவை நடத்துவோம்! தமிழ்நாடு முழுவதும் மேலும் பல பிரமாண்ட நூலகங்களை அறிவுக் கோயில்களாக எழுப்புவோம்! அறிவுத்தீ வளர்ப்போம்! வெல்வோம் ஒன்றாக!

12

அயலகத் தமிழர்

தமிழ் தான் நம்மை ஒற்றுமைபடுத்தும்

(12.1.2026) சென்னை, நந்தம்பாக்கம், சென்னை வர்த்தக மையத்தில் அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை சார்பில் நடைபெற்ற "அயலகத் தமிழர் தினம் – 2026" விழாவில், அயலகத் தமிழர்களுக்கு விருதுகளை வழங்கி, ஆற்றிய உரை)

தாய் மண்ணான தமிழ் மண்ணிற்கு வந்திருக்கக்கூடிய உங்கள் எல்லோருக்கும் அயலகத் தமிழர் நாள் வாழ்த்துகளைச் சொல்லி, புத்தாண்டு வாழ்த்துகளையும், தமிழர் திருநாளாம் பொங்கல் வாழ்த்துகளையும் சொல்லி, வருக! வருக! வருக! என வரவேற்கிறேன்!

தமிழ்நாட்டின் முதலமைச்சராக மட்டுமல்ல, உங்களின் உடன்பிறப்பாக நான் வரவேற்க கடமைப்பட்டிருக்கிறேன்.

உலகின் பல நாடுகளிலும், இந்தியாவின் மற்ற மாநிலங்களிலும், தமிழர்களான நீங்களும், உங்களின் குடும்பத்தாரும், பல முக்கிய பொறுப்புகளிலும், நல்ல நிலையிலும் இருப்பதை நினைத்து நான் பெருமைப்படுகிறேன்! மகிழ்ச்சி அடைகிறேன்!

ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி மாதம் நீங்கள் எல்லோரும், உங்கள் சொந்தங்களைப் பார்க்க தமிழ்நாட்டிற்கு வருகிறீர்கள். நாம் எல்லோரும் எதனாலும், யாராலும் பிரிக்க முடியாத தமிழ்ச் சொந்தங்கள்! தமிழினச் சொந்தங்கள்! இது பல்லாயிரம் ஆண்டு காலத்து சொந்தம். இன்னும் பலப்பல ஆண்டு தொடர இருக்கின்ற சொந்தம். நாடுகளும், கடல்களும் நம்மைப் பிரித்தாலும், மொழியும், இனமும் நம்மை உணர்வால் இணைக்கிறது!

70 நாடுகளில் இருந்தும், இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் இருந்தும் நீங்கள் அனைவரும் வந்திருக்கிறீர்கள். தமிழர் திருநாளாம் பொங்கல் நேரத்தில் இந்த மாபெரும் தமிழர் ஒன்று கூடக்கூடிய கடலை சிறப்பாக ஏற்பாடு செய்திருக்கிறீர்கள். ஏற்பாடு செய்திருக்கக்கூடிய அயலகத் தமிழர் நலத் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. நாசர் அவர்களுக்கும், துறை அதிகாரிகளுக்கும் என்னுடைய பாராட்டுகள்! வாழ்த்துகள்!

நம்முடைய நாசர் அவர்களைப் பற்றி சொல்ல வேண்டும் என்றால், கொஞ்சம் சத்தமிடுவார்! ஆனால் வேலை நடைபெறும். ஒரு வேலையை அவரிடத்தில் ஒப்படைத்தால், நாம் எதிர்பார்த்ததை விட சிறப்பாக செய்யக்கூடிய ஆற்றல் பெற்றவர் நம்முடைய திரு. நாசர் அவர்கள். நேற்றிலிருந்து நிகழ்ச்சியைப் பற்றி நீங்கள் கொடுத்த பேட்டியை பார்த்து, நாசர் தன்னுடைய பணியை சிறப்பாக செய்து நிரூபித்துக் காட்டிவிட்டார்.

நூற்றாண்டுகளுக்கு முன் தங்களின் தாய்மண்ணான தமிழ்நாட்டில் இருந்து, பல்வேறு காரணங்களுக்காக, வாய்ப்புகளுக்காக பறந்து சென்றவர்கள் உங்கள் முன்னோர்கள். அவர்களை வாழ்க்கை தேடிப் சென்றவர்கள் என்று சொல்வதைவிட, அந்தந்த நாடுகளை வளப்படுத்த சென்றவர்கள் என்று சொல்வதுதான் பொருத்தமாக இருக்கும். தாங்களும் வளர்ந்து, தங்களின் உழைப்பால் அந்த நாட்டையும் வளப்படுத்தி இருக்கிறார்கள். அதற்கு சிறந்த சான்று நீங்கள்தான்! வெளிநாட்டில் வாழ்ந்தாலும், தமிழ்நாட்டை மறக்காதவர்களாக நீங்கள் இருக்கிறீர்கள். அதனால்தான், தமிழ்நாட்டில் வாழும் தமிழர்களுக்கு நன்மை செய்வதை போலவே, அயல்நாட்டுத் தமிழர்களுக்கும் சகோதரனாக இருந்து நம்முடைய திராவிட மாடல் அரசு செயல்பட்டுக் கொண்டு வருகிறது.

உங்களுக்காகவே அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை ஓய்வில்லாமல் உழைத்துக் கொண்டிருக்கிறது. வேறு நாட்டிற்குச் சென்று வாழ்பவர்களாக இருந்தாலும், அயலகத்தில் உழைக்கும் தமிழ்நாட்டுத் தமிழர்களாக இருந்தாலும், நீங்கள் எந்த குறையும் இல்லாமல் வளமாய் வாழ வேண்டும் என்று செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம்!

நம்முடைய திராவிட மாடல் அரசு அமைந்த பிறகு, 'அயலகத் தமிழர் நல வாரியம்' என்று 15 உறுப்பினர்களைக் கொண்டு ஒரு குழு அமைத்தோம்.

ஜனவரி 12 அயலகத் தமிழர் நாளாக கொண்டாடிக் கொண்டிருக்கிறோம். தமிழால் இணைவோம், உலகெங்கும் தமிழ், தமிழ் வெல்லும் என்று கருத்தரங்குகள் நடத்தப்பட்டிருக்கிறது.

தமிழ்நாட்டில் 105 முகாம்களில் வாழும் இலங்கைத் தமிழர்களுக்காக,

7 ஆயிரத்து 469 வீடுகள் கட்டித்தர திட்டமிட்டு, படிப்படியாக கட்டப்பட்டு வழங்கிக் கொண்டிருக்கிறோம்.

வெளிநாடுவாழ் தமிழர்களுக்காக கட்டணமில்லா உதவி மையம் துவக்கப்பட்டிருக்கிறது.

“தமிழ் வேர்களைத் தேடி பயணம்” மூலமாக உங்களை எல்லாம் தமிழ்நாட்டிற்கு அழைத்துக் கொண்டு வருகிறோம்.

புலம்பெயர்ந்த தமிழர்கள் தங்களின் சொந்த ஊர்களை மேம்படுத்தும் ‘எனது கிராமம்’ திட்டம் செயல்பாட்டில் இருக்கிறது.

அயல்நாடுகளில் வேலைக்குச் சென்று அங்கு இறக்க நேரிடும் வாரிய உறுப்பினர் குடும்பத்திற்கு மாதந்தோறும் நிதியுதவி அளிக்கும் திட்டம் அமலில் இருக்கிறது.

உக்ரைன், கம்போடியா, தாய்லாந்து, மியான்மர், இஸ்ரேல் ஆகிய நாடுகளிலிருந்து மட்டும் கடந்த மூன்று ஆண்டுகளில், 2 ஆயிரத்து 398 தமிழர்களை அயல்நாடுகளில் இருந்தும், வெளிமாநிலங்களில் இருந்தும் மீட்டுக் கொண்டு வந்திருக்கிறோம்.

தமிழ்நாட்டில் மட்டுமல்லாமல், வெளிநாடுகளிலும், தமிழ்மொழி வளர்ச்சிக்காக பல திட்டங்களை வகுத்துக் கொண்டிருக்கிறோம். இதற்காகவே, தமிழ்ப் பரப்புரைக் கழகம் என்ற ஒரு அமைப்பைச் செயல்பட வைத்திருக்கிறோம்.

புலம் பெயர்ந்த மண்ணில் தமிழுக்காகப் பாடுபடும் தமிழ்ச் சங்கங்களுக்கு விருதுகள் மற்றும் அங்கீகாரம் அளிக்கிறோம். கல்வி, அறிவியல், தொழில்நுட்பம், வணிகம் ஆகிய துறைகளில் சாதனை படைக்கும் அயலகத் தமிழர்களைத் தேர்ந்தெடுத்து, கணியன் பூங்குன்றனார் விருது வழங்கிக் கொண்டிருக்கிறோம்.

அயலகத்தமிழர்களில் பன்முகத்தன்மையோடு விளங்கும் ஒரு தமிழரைத் தேர்ந்தெடுத்து, “தமிழ்மாமணி” விருதும், பட்டயமும் வழங்கியிருக்கிறோம்.

அயல்நாட்டுத்தமிழர்கள் மற்றும் தமிழ்ச் சங்கங்களுக்கும் தமிழ்நாட்டிற்கும் இடையே உறவுப் பாலமாக செயலாற்றும்

அயலகத் தமிழ் இளைஞர் ஒருவருக்கு “சிறந்த பண்பாட்டுத் தூதுவர்” விருதையும் வழங்கிக் கொண்டிருக்கிறோம்.

உங்களை பாராட்ட வேண்டும் என்று மட்டுமல்ல, உங்களுடன் இருக்கும் உறவு தொடர வேண்டும் என்றுதான் இதையெல்லாம் செய்கிறோம். வாழ்வதும் வளர்வதும் தமிழும் தமிழினமுமாய் இருக்க வேண்டும் என்று செயல்படும் அரசு நம்முடைய அரசு!

தமிழர்கள் எங்கே, எந்த நாட்டிலும் இருந்தாலும், அவர்கள் நல்லபடியாக வாழ வேண்டும் என்பதுதான் நம்முடைய நோக்கம். அந்த எண்ணத்தோடு தான் இலங்கை தமிழ் பிரதிநிதிகளின் கோரிக்கைகளை ஏற்று, மாண்புமிகு பிரதமர் அவர்களுக்கு அண்மையில் நான் ஒரு கடிதம் எழுதியிருக்கிறேன். இன்றைக்கு காலையில் கூட அவைகள் எல்லாம் செய்திகளாக வந்திருக்கிறது; பத்திரிகைகளிலும் படித்திருப்பீர்கள். இலங்கையில் அறிமுகமாக இருக்கின்ற புதிய அரசியலமைப்புச் சட்டத்தால், அங்கே வாழுகின்ற நம்முடைய தமிழ்ச் சொந்தங்களின் உரிமைகள் எந்தவிதத்திலும் பாதிப்படையக்கூடாது; நீண்ட காலமாக அவர்கள் போராடி வரக்கூடிய அதிகார பரவலாக்கம் தமிழர்கள் வாழக்கூடிய மாகாணங்களுக்கும் கிடைக்கும்; கிடைக்க வேண்டும். நம்முடைய இந்த கோரிக்கையை இலங்கை அரசிடம், இந்திய அரசு வலியுறுத்தி, உரிய நடவடிக்கை எடுப்பார்கள் என்று நான் நம்புகிறேன்.

இந்த ஐந்து நபர்கள், கனவுகளைப் பற்றி இங்கே சொன்னார்கள். மாபெரும் கனவுகளைக் கொண்டது நம்முடைய தமிழினம்! அந்தக் கனவுகளை எல்லாம் அடைய வேண்டும் என்பதுதான், நம்முடைய திராவிட மாடல் அரசில், நாடு போற்றும் பல நல்ல திட்டங்களைச் செயல்படுத்தி, வரலாறு காணாத வளர்ச்சியை அடைந்து கொண்டிருக்கிறோம்.

நான் நிச்சயம் சொல்கிறேன், இந்த வளர்ச்சி என்பது, நாம் அடுத்து நிகழ்த்தப் போகும் பாய்ச்சலுக்கான அடித்தளம்! அதற்காகத்தான், தமிழ்நாட்டில் இருக்கும் ஒவ்வொரு குடும்பத்தின் கனவுகளையும் கேட்க வேண்டும் என்று “உங்க கனவ சொல்லுங்க” திட்டத்தை அண்மையில் தொடங்கி வைத்திருக்கிறேன்!

தமிழ்நாட்டின் எதிர்காலத்தை, தமிழ்நாட்டு மக்கள், தங்களின் கனவுகளால் உருவாக்க வேண்டும் என்று, இந்தத் திட்டத்தை உருவாக்கியிருக்கிறோம்!

2030-ஆம் ஆண்டை மனதில் வைத்து உருவாக்கியிருக்கிறோம்! இன்னும் சொல்கிறேன். தமிழ்நாட்டில் வாழும் மக்கள் மட்டுமல்ல, புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களான நீங்களும் உங்கள் கனவுகளை சொல்ல வேண்டும் என்றுதான், இன்றைக்கு உங்களிடமும் கனவுகளை கேட்டிருக்கிறோம். தமிழர்கள் கனவு கண்டால், அதை நிச்சயம் அடைந்தே தீருவோம்!

கனவுகளை சுமந்து வந்து, தாய்நிலத்தில் கனவுகளைச் சொல்லியிருக்கும் உங்களை நான் கேட்டுக்கொள்வது என்ன என்றால், உலகத்தில் எங்கு இருந்தாலும் உங்கள் அடையாளத்தையும், வேர்களையும் மறக்காதீர்கள். உங்கள் உறவுகளை மறக்காதீர்கள். எக்காலத்திற்கும் பொருந்தும் உலக பொதுமறையைத் தந்த வான்புகழ் வள்ளுவர் பிறந்த மண்ணிற்கு சொந்தக்காரர்கள் நாம்.

ஊரைத் தாண்டிய ஊரும் - உலகமும் எப்படி இருக்கும் என்றே தெரியாத காலத்தில், யாதும் ஊரே யாவரும் கேளிர் என்று எல்லோரையும் சொந்தங்களாக கருதி இலக்கியம் படைத்த கணியன் பூங்குன்றனாரின் மண் இது!

தமிழ் என்னும் உலக மொழிக்கு சொந்தக்காரர்கள் நாம். தமிழ்தான் நம்மை ஒற்றுமைப்படுத்தும். சாதி வேற்றுமைகளையும், மத வேறுபாடுகளையும் வீழ்த்தி அனைவரையும் ஒன்றாக்கும் வல்லமை தமிழ் மொழிக்கு மட்டும்தான் உண்டு.

வாழும் நாடுகளால் நாம் பிரிந்திருந்தாலும், மொழி நம்மை இணைத்துவிடுகிறது. வீழ்வது நாமாக இருப்பினும், வாழ்வது தமிழாக இருக்கட்டும் என்று திராவிட இயக்கம் தமிழ் மண்ணில் விதைத்தது. அதனால்தான், இந்திய மாநிலங்களிலேயே தனித்தன்மை கொண்ட மாநிலமாக தமிழ்நாடு வளர முடிந்தது.

மொழிக்காக போராடிய இயக்கம் மட்டுமல்ல, மொழியுரிமை காக்க தங்கள் உயிரையே தந்த தியாக மறவர்களைக் கொண்ட இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம். அதேவேளை, மொழிப்பற்றும், இனப்பற்றும்தான் நமக்கு உண்டு! அது மொழிவெறியாக, இனவெறியாக நாம் எப்போதும் மாறமாட்டோம்! நமக்குள் எந்தப் பிளவுகளும் ஏற்பட அனுமதிக்காதீர்கள். ஒரு தாய் மக்களாக வாழ வேண்டும். உங்களின் கல்வியும், அறிவும்தான் உங்களை காக்கும்.

அறிவும், உழைப்பும்தான் உங்களை இவ்வளவு தூரத்திற்கு, இவ்வளவு உயரத்திற்கு கொண்டு வந்திருக்கிறது. இதை மட்டுமே நம்பி உங்கள் வாழ்க்கைப் பயணத்தை தொடருங்கள். நம்முடைய இலக்கியத்தை வைத்து, தமிழர்களின் பழம்பெருமையை நாம் பேசியபோது, "கற்பனைவாதிகள்" என்று சிலர் கிண்டல் செய்தார்கள். இன்னும் சிலர் இனவாதிகள் என்று நம்மை பழித்தார்கள். இலக்கியத்தில் இருப்பதெல்லாம் வரலாறு ஆகாது என்று சொன்னார்கள். ஆனால், தமிழ் - தமிழ் நிலம் - தமிழ்நாடு குறித்து நாம் இதுவரை சொல்லி வந்ததெல்லாம்

புனைவுகளோ, அரசியலுக்காக சொன்னதோ இல்லை என்று இப்போது நிரூபித்துவிட்டோமா இல்லையா? வரலாற்று ஆதாரங்களை தேடி எடுத்து, ஆய்வுக்கு உட்படுத்தி, உலக அறிஞர்களையே ஏற்றுக்கொள்ள வைத்தோமா இல்லையா? நம்முடைய திராவிட மாடல் அரசு இந்த வரலாற்றுக் கடமையை செய்து காட்டியிருக்கிறதா இல்லையா?

கீழடி கண்டுபிடிப்புகள் மூலமாக, நான்காயிரம் ஆண்டு பழமையான வரலாற்றுக்குச் சொந்தக்காரர்கள் என்பது இன்றைக்கு உறுதியாகி இருக்கிறது.

கீழடியில் நெல்மணிகள் பயிரிடப்பட்டதற்கான சான்றுகள் கிடைத்திருக்கிறது.

அந்தக் காலத்திலேயே கல்வி பெற்றவர்களாக தமிழர்கள் இருந்திருக்கிறோம்.

சிவகளை வாழ்விடப் பகுதியில் சேகரிக்கப்பட்ட மண் மாதிரிகளை ஆய்வு செய்ததில், அங்கே நீர் செல்லும் செங்கல் வடிகாலில் நன்னீர் சென்றிருக்கிறது.

கிருஷ்ணகிரி மாவட்டம், மயிலாடும்பாறையில் கிடைத்த பொருளின் மூலமாக, தமிழ்நாட்டில் இரும்பின் பயன்பாடு 4200 ஆண்டுகளுக்கு முன்பே இருந்திருக்கிறது என்று கணக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

நம்முடைய கண்டுபிடிப்புகளையெல்லாம் அழகாக காட்சிப்படுத்தி,

‘கீழடி அருங்காட்சியகம்’ மற்றும் பொருநை அருங்காட்சியகத்தை நான் தான் அண்மையில் திறந்து வைத்திருக்கிறேன். நீங்கள் எல்லோரும் கட்டாயம் அங்கு சென்று பார்க்கவேண்டும் - பார்வையிட வேண்டும்!

சிந்துவெளி எழுத்துகளில் 100 ஆண்டுகளாக புதைந்திருக்கும் புதிருக்கு விடை கண்டுபிடித்தால், எட்டரை கோடி ரூபாய் பரிசு என்று நானே அறிவித்திருக்கிறேன்.

தமிழ்நாடு அரசின் தொல்லியல் துறை சார்பில், சிந்துவெளி பண்பாட்டு கண்டுபிடிப்பு நூற்றாண்டு நிறைவு பன்னாட்டு கருத்தரங்கத்தையும் நடத்தியிருக்கிறோம்.

சிந்துவெளி நாகரிகத்தை உலகிற்கு அறிவித்த சர் ஜான் மார்ஷல் அவர்களுக்கு சிலை அமைத்திருக்கிறோம்.

ஆண்டுக்கு 5 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டு, நாட்டிலேயே அதிக அளவில் தொல்லியல் அகழாய்வுகள் நடைபெற்று வரும் மாநிலமாக தமிழ்நாடு திகழ்ந்து கொண்டிருக்கிறது.

தமிழ்ப் பண்பாட்டின் தொன்மையை உலகறிய செய்ய உழைக்கும் அறிஞர்களுக்கு, ஆண்டுதோறும் விருதுகள் வழங்கப்படும் என்று அறிவித்திருக்கிறோம்.

இதனால்தான், “இது ஒரு கட்சியின் அரசல்ல, இனத்தின் அரசு” என்று நான் தலைநிமிர்ந்து சொல்கிறேன். இரண்டு நாட்களுக்கு முன்பு கூட, குறள் வார விழா நிகழ்ச்சிகள் தமிழ்நாடு முழுவதும் நடைபெற இருக்கிறது என்று அறிவித்திருக்கிறேன். வள்ளுவரைக் கொண்டாடுவதில் நம்மை அடித்துக்கொள்ள யார் இருக்கிறார்கள்!

மொழி சிதைந்தால், இனம் சிதையும். இனம் சிதைந்தால், நம்முடைய பண்பாடு சிதைந்துவிடும். பண்பாடு சிதைந்தால், நம்முடைய அடையாளம் போய்விடும். அடையாளம் போய்விட்டால், தமிழர் என்று சொல்லிக்கொள்ளும் தகுதியையே இழந்துவிடுவோம்.

நீங்கள் எங்கு வாழ்ந்தாலும், ஒற்றுமையாக வாழுங்கள்! அந்த நாட்டின் வளர்ச்சிக்காக பாடுபடுங்கள். அதேவேளையில், தமிழ்நாட்டிற்கு அடிக்கடி வாருங்கள். அங்கு உள்ளவர்களுக்கும் தமிழ்நாட்டின் பெருமைகளை எடுத்துச் சொல்லுங்கள். உங்கள் சகோதரனான, இந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் தான் தமிழ்நாட்டில் முதலமைச்சராக இருக்கிறான் என்று மறந்துவிடாதீர்கள்!

நமக்காக தமிழ்நாட்டில் ஒரு சகோதரன் இருக்கிறார்! தமிழ்நாட்டில் இருக்கிறான், இருக்கிறான் என்று நம்பிக்கையுடன் வாழுங்கள்!

13

தமிழுக்கான அரசாணைகள்



சுருக்கம்

அரசு விழாக்கள், பொது நிகழ்ச்சிகள், கல்வி நிறுவனங்களில் தமிழ்த்தாய் வாழ்த்து பாடப்படுவதை நெறிப்படுத்துதல் மற்றும் வழிகாட்டுதல்கள் – மாநிலப் பாடலாக அறிவித்தல் (State Song) – ஆணை வெளியிடப்படுகிறது.

பொது (பொது–1)த் துறை

அரசாணை (நிலை)எண்.1037

நாள்: 17–12–2021

பிலவ – மார்கழி 2

திருவள்ளுவராண்டு 2052

படிக்கப்பட்டது:

1. 1913ஆம் ஆண்டு கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் ஆண்டறிக்கை அறிவிப்பு.
2. அரசாணை நிலை எண் 1393, பொதுத் (அரசியல்) துறை, நாள் 17.6.1970.
3. தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அலுவலகக் குறிப்பு எண். 9909/பொ.கா/2021, நாள் 08.09.2021.

ஆணை:

"ஓங்கலிடை வந்து உயர்ந்தோர் தொழவிளங்கி
ஏங்கொலிநீர் ஞாலத்து இருள்அகற்றும் – ஆங்குஅவற்றுள்
மின்னேர் தனியாழி வெம்கதிரோன்; ஏனையது
தன்னேர் இலாத தமிழ்"

எனத் தண்டியலங்காரம் குறிப்பிடுவதைப் போல் தமிழர்களின் வாழ்வாக அவர்தம் உணர்வுக்கு ஒளியாகத் திகழ்வது தமிழ்மொழி. தமிழ்மொழி காலத்தால் மிகமிகத் தொன்மையானது. இலக்கண – இலக்கியச் செல்வாக்கையும் வரைமுறைகளையும் செவ்வனே பெற்றது. எண்ணங்களைத் துல்லியமாக வெளிப்படுத்திடும் சொல்வளம் மிகவும் படைத்தது. உணர்வுகளை நுட்பமாகவும் நேர்த்தியாகவும் ஊட்டிடும் நயம் மெத்தவும் மிக்கது. எண்ணங்களை, ஏற்பாடுகளை – கொள்கைக் கோட்பாடுகளை வழுவாமல், பிறழாமல் குறித்துணர்த்திக் கூறிடும் சொல்லாட்சியும் உடைத்தானது.

தமிழ்த்தாய் வாழ்த்து பாடப்படுவதை நெறிப்படுத்துதல்

அரசாணை (நிலை) எண். 1037. பொதுத் (பொது-1) துறை, நாள். 17.12.2021

மனோன்மணியம் சுந்தரனார் இயற்றிய தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடல் தமிழ்நாடு அரசின் மாநிலப் பாடலாக அறிவிக்கப்பட்டது. இப்பாடல் 55 வினாடிகளில் முல்லைப் பாணியில் (மோகன ராகம்) மூன்றன் நடையில் (திசுரம்) பாடப்படவேண்டும்.

தமிழ்நாட்டில் அமைந்திருக்கும் அனைத்து கல்வி நிறுவனங்கள். பல்கலைக்கழகங்கள், அரசு அலுவலகங்கள், பொதுத்துறை நிறுவனங்கள் உள்ளிட்ட பொது அமைப்புகளின் நிகழ்ச்சிகளிலும், நிகழ்வு தொடங்குவதற்கு முன்பு தமிழ்த்தாய் வாழ்த்து கட்டாயம் பாடப்பட வேண்டும்.

தமிழ்த்தாய் வாழ்த்து பாடப்படும்போது அனைவரும் தவறாமல் எழுந்து நிற்க வேண்டும்.

மாற்றுத்திறனாளிகள், கர்ப்பிணித் தாய்மார்கள் ஆகியோருக்கு எழுந்து நிற்பதில் இருந்து விலக்கு அளிக்கப்படுகிறது.

பொது நிகழ்வுகளில் “தமிழ்த்தாய் வாழ்த்து” இசைவட்டுகளைக் கொண்டு இசைக்கப்படுவதைத் தவிர்த்து பயிற்சி பெற்றவர்களால் வாய்ப்பாட்டாகப் பாடப்பட வேண்டும்.

அன்னைத் தமிழின் பெருமையை உலகறியச் செய்வதிலும், இளம்தலைமுறையினருக்குக் கொண்டு சேர்ப்பதிலும், தனியார் அமைப்புகளும் பொதுமக்களும் பெரும்பங்காற்ற முடியும் என்பதால், தமிழ்நாட்டில் தனியார் அமைப்புகள் நடத்திடும் கலை, இலக்கியம். பொதுநிகழ்வுகள் ஆகியவற்றின் தொடக்கத்தில் தமிழ்த்தாய் வாழ்த்து பாடப்படுவது ஊக்குவிக்கப்படும்.

தமிழ்மொழித் தகுதித்தாளினை அறிமுகம் செய்தல்



சுருக்கம்

பொதுப்பணிகள் – நேரடி நியமனங்கள் – 2021-2022-ஆம் ஆண்டிற்கான மனிதவள மேலாண்மைத் துறையின் மானியக் கோரிக்கையின் போது மாண்புமிகு அமைச்சர் (நிதி மற்றும் மனிதவள மேலாண்மை) அவர்களால் சட்டமன்றப் பேரவையில் வெளியிடப்பட்ட அறிவிப்பு - தமிழ்நாடு அரசுத் துறைகளில் உள்ள பணியிடங்கள் அனைத்திலும் தமிழக இளைஞர்களை 100 சதவீதம் நியமனம் செய்யும் பொருட்டு, தேர்வு முகமைகளால் நடத்தப்படும் அனைத்துப் போட்டித் தேர்வுகளிலும் கட்டாயத் தமிழ் மொழித் தகுதித் தாளினை அறிமுகம் செய்தல் - ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

மனிதவள மேலாண்மை (எம்) துறை

அரசாணை (நிலை) எண்.133

நாள். 01.12.2021,
பிலவ வருடம், கார்த்திகை -15,
திருவள்ளுவர் ஆண்டு 2052.

படிக்கப்பட்டது:

1. அரசுக் கடித எண்.16084/எம்2/2021, மனிதவள மேலாண்மை (எம்) துறை, நாள் 06.08.2021 மற்றும் 20.10.2021.
2. செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-3, கடித எண்.5476/பிடி-எஆர்ஓ/2018, நாள் 28.10.2021 மற்றும் 25.11.2021.

ஆணை :

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், மாண்புமிகு அமைச்சர் (நிதி மற்றும் மனிதவள மேலாண்மை) அவர்களால் 13.09.2021 அன்று நிகழ்த்தப்பட்ட 2021-2022-ஆம் ஆண்டிற்கான மனிதவள மேலாண்மைத் துறையின் மானியக் கோரிக்கை தொடர்பான உரையின் போது, பின்வரும் அறிவிப்பு வெளியிடப்பட்டது :-

"தமிழக அரசுத் துறைகளில் உள்ள பணியிடங்கள் மற்றும் மாநில பொதுத்துறை நிறுவனங்களில் உள்ள பணியிடங்கள் அனைத்திலும் தமிழக இளைஞர்களை 100 சதவீதம் நியமனம் செய்யும் பொருட்டு, தேர்வு முகமைகளால் நடத்தப்படும் அனைத்துப் போட்டித் தேர்வுகளிலும் தமிழ் மொழி பாடத்தாள் தகுதித் தேர்வாக கட்டாயமாக்கப்படும்"

2. மாண்புமிகு அமைச்சர் (நிதி மற்றும் மனிதவள மேலாண்மை) அவர்களின் மேற்குறிப்பிட்ட அறிவிப்பிற்கிணங்க, மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையச் செயலாளர் அரசுக்கு அளித்த கருத்துருவின் அடிப்படையில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் உள்ளிட்ட தமிழ்நாட்டில் உள்ள அனைத்துத் தெரிவு முகமைகளால் (Recruiting Agencies) அரசுப் பணிகளுக்காக நடத்தப்படும் போட்டித்

அரசாணை (நிலை) எண். 133, மனிதவள மேலாண்மை (எம்) துறை, நாள். 01.12.2021

"தமிழக அரசுத் துறைகளில் உள்ள பணியிடங்கள் மற்றும் மாநில பொதுத்துறை நிறுவனங்களில் உள்ள பணியிடங்கள் அனைத்திலும் தமிழக இளைஞர்களை 100 சதவீதம் நியமனம் செய்யும் பொருட்டு, தேர்வு முகமைகளால் நடத்தப்படும் அனைத்துப் போட்டித் தேர்வுகளிலும் தமிழ்மொழி பாடத்தாள் தகுதித் தேர்வாக கட்டாயமாக்கப்படும்"

மேற்கண்ட அறிவிப்பினை செயற்படுத்தும்பொருட்டு இவ்வாணை வெளியிடப்படும் நாள்முதல் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் அறிவிக்கை செய்யப்படும் அனைத்து போட்டித் தேர்வுகளுக்கும் தமிழ்மொழித்தாள் கட்டாயமாக்கப்படும்.



சுருக்கம்

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை – மாண்புமிகு மேனாள் தமிழ்நாடு முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் கன்னியாகுமரியில் அய்யன் திருவள்ளுவர் சிலை 01.01.2000 அன்று திறந்து வைக்கப்பட்டு 25 ஆண்டு நிறைவுபெறுதல் – தமிழ்நாடு அரசின் சார்பில் வெள்ளிவிழா கொண்டாடுதல் – தமிழ் வளர்ச்சித் துறை சார்ந்த பணிகளை மேற்கொள்ள ரூ.90,10,000/–க்கு நிதி ஒப்பளிப்பு செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி(தவ2.2)த் துறை

அரசாணை (நிலை) எண்.268

நாள் 20.12.2024
குரோதி, மார்கழி – 05
திருவள்ளுவராண்டு–2055

படிக்கப்பட்டவை:–

1. தமிழ்நாடு அரசின் செய்தி வெளியீடு எண்.1922, நாள் 12.11.2024.
2. அரசாணை (நிலை) எண்.252, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி(தவ2.2)த் துறை, நாள் 02.12.2024.
3. தமிழ் வளர்ச்சி இயக்குநரின் கடிதம் ந.க.எண். தமிழ் 2/18303/2024, நாள் 10.12.2024.

ஆணை:–

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட செய்தி வெளியீட்டில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் கன்னியாகுமரியில் நிறுவப்பட்ட அய்யன் திருவள்ளுவர் சிலை வெள்ளிவிழா காண்பதையொட்டி, தமிழ்நாடு அரசின் சார்பில் 25 ஆண்டு நிறைவுப் பெருவிழா கொண்டாடப்படும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டது.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், டிசம்பர் 30, 31 மற்றும் சனவரி 1 ஆகிய தினங்களில் கன்னியாகுமரியில் அய்யன் திருவள்ளுவர் சிலை வெள்ளிவிழா நிகழ்ச்சி நடத்த ஆணையிடப்பட்டது. மேலும் பணிகளை மேற்கொள்ள உரிய துறைகளுக்கு ரூ.10,89,22,500/–க்கு (ரூபாய் பத்து கோடியே எண்பத்து ஒன்பது இலட்சத்து இருபத்து இரண்டாயிரத்து ஐந்நூறு மட்டும்) நிருவாக அனுமதி வழங்கி ஆணை வெளியிடப்பட்டது. இதில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறைக்கு ரூ.5,00,00,000/–க்கு (ரூபாய் ஐந்து கோடி மட்டும்) நிருவாக அனுமதி

(த.பி.பா.)

கன்னியாகுமரியில் அய்யன் திருவள்ளுவர் சிலையை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் 2000 ஆம் ஆண்டில் நிறுவினார்கள். 2025 ஆம் ஆண்டு அச்சிலையின் வெள்ளிவிழாவைக் கொண்டாடினோம். அதற்கு பேரறிவுச் சிலை எனப் பெயர் சூட்டப்பட்டது.



<u>சுருக்கம்</u>

தமிழ் வளர்ச்சி – மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வெளியிட்ட அறிவிப்பு – ஒவ்வொரு மாவட்டத்திற்கும் திருக்குறளில் ஆர்வமும், புலமையும் மிக்க ஆசிரியர்கள், பயிற்றுநர்கள் தேர்வு செய்யப்பட்டு, அவர்களுக்குப் பயிற்சி வழங்கி மாவட்டந்தோறும் தொடர் பயிலரங்குகள், பயிற்சி வகுப்புகள் வழங்கும் **'திருக்குறள் திருப்பணிகள்'** திட்டத்தினை செயல்படுத்துதல் – ஒரு மாவட்டத்திற்கு ரூ.3,00,000/– வீதம் 38 மாவட்டங்களுக்கு ரூ.1,14,00,000/–ஐ 2025–2026–ஆம் நிதியாண்டு முதல் தொடர் செலவினமாக ஒப்பளிப்பு செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

<u>தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (தவ.1.2)த் துறை</u>

அரசாணை (நிலை) எண்.72

நாள் 28.04.2025
விசுவாவசு, சித்திரை–15
திருவள்ளுவராண்டு–2056

<u>படிக்க:–</u>

1. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பு நாள் 31.12.2024. (செய்தி வெளியீடு எண்.2369)
2. தமிழ் வளர்ச்சி இயக்குநரின் கடித ந.க.எண்.ஆ.மொ.1/809/2025, நாள் 12.02.2025.

<u>ஆணை:–</u>

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 31.12.2024 அன்று கன்னியாகுமரி மாவட்டத்தில் நடைபெற்ற திருவள்ளுவர் சிலை வெள்ளி விழா நிகழ்ச்சியில் பின்வரும் அறிவிப்பு வெளியிடப்பட்டது:–

> **"ஒவ்வொரு மாவட்டத்திற்கும் திருக்குறளில் ஆர்வமும், புலமையும் மிக்க ஆசிரியர்கள், பயிற்றுநர்கள் தேர்வு செய்யப்பட்டு, அவர்களுக்குப் பயிற்சி வழங்கி மாவட்டந்தோறும் தொடர் பயிலரங்குகள், பயிற்சி வகுப்புகள் நடத்தப்படும். 'திருக்குறள் திருப்பணிகள்' தொடர்ந்து நடைபெற திட்டம் வகுக்கப்படும். இதற்காக ஆண்டிற்கு மாவட்டம் ஒன்றிற்கு மூன்று இலட்சம் ரூபாய் வழங்கப்படும்".**

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட தமிழ் வளர்ச்சி இயக்குநரின் கடிதத்தில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட மேற்கண்ட அறிவிப்பின் வாயிலாக தமிழ்நாடு முழுவதிலும் தமிழ் வளர்ச்சித் துறை வாயிலாக செயற்படுத்தப்படும் குறள் பரிசுத் திட்டத்தில் கலந்து கொள்ளும்

(த.பி.பா.)

குறள் படிக்கும் அரசாக மட்டுமல்லாமல், குறளை வாழ்வியல் நெறியாக மாற்றும் அரசாகச் செயல்பட்டு வருகிறது தமிழ்நாடு அரசு. திருக்குறளில் ஆர்வமும், புலமையும் மிக்க பயிற்றுனர்களை உருவாக்கும் திட்டம் தொடங்கப்பட்டது. அத்தகைய பயிற்றுனர்கள், ஆர்வலர்கள், ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிக்க திருக்குறள் திருப்பணிகள் திட்டம் உருவாக்கப்பட்டது.



சுருக்கம்

தமிழ் வளர்ச்சி – தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், விதி 110–இன் கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பு – பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு ஏப்ரல் 29 முதல் மே 5 வரை ஆண்டுதோறும் "தமிழ் வார விழா" கொண்டாட அனுமதி மற்றும் இந்நிதியாண்டிற்கு நிதி ஒப்பளிப்பு செய்தல்– ஆணை வெளியிடப்படுகிறது.

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி(த.வ 1.2)த் துறை

அரசாணை (நிலை) எண்.67

நாள் 25.04.2025
விசுவாவசு, சித்திரை–12
திருவள்ளுவராண்டு – 2056

படிக்க:–

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், விதி 110–இன் கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பு (தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை செய்தி வெளியீடு எண்.30, நாள் 22.04.2025).

ஆணை:–

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் சட்டமன்றப் பேரவையில் 22.04.2025 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி எண்.110–ன் கீழ் பின்வருமாறு அறிவிக்கப்பட்டது:–

"பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு ஏப்ரல் 29 முதல் மே 5 வரை தமிழ் வார விழா கொண்டாடப்படும் "

2. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 22.04.2025 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி எண்.110–ன் கீழ் அறிவித்த தனது அறிக்கையில் பேரறிஞர் அண்ணா அவர்கள் பாவேந்தரை தமிழ்நாட்டின் வால்ட் விட்மன் என்றார் என்றும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் எங்கே எப்பொழுது பேசினாலும் அதிலே புரட்சிக் கவிஞரின் பொன்வரிகள் ஒலித்துக் கொண்டிருக்கும் எனவும், 1990-ஆம் ஆண்டு பாவேந்தரின் படைப்புக்களை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் நாட்டுடைமையாக்கினார்கள் எனவும், இன விடுதலை – மொழி விடுதலை – சமூக விடுதலை – பெண் விடுதலை – பழமைவாதம் ஒழிப்பு என்று பாவேந்தர் தன் எழுத்துகளை திராவிட இனத்திற்கு கொள்கைப் பட்டயமாக உருவாக்கித் தந்தவராவார் என்றும், அவரை எந்நாளும் தமிழினம் வணங்கிப் போற்றும் எனவும், பாவேந்தரின் கவிதைகளில் இனிய இசை நயம் உண்டு; உணர்த்தும் கருத்துகளில் உணர்ச்சிப் புயல் வீசும், எளிமையான சொற்களின் மூலமாக வலிமையான கருத்துக்களைச் சொன்னார் எனவும், எளிய சொற்கள் அவருடைய கவிதையில் அமையும்போது நிகரற்ற வேகம் கொண்டு நிற்கும் ஆற்றல்

(த.பி.பா.)

தமிழ் வார விழா (25.4.2025)

பாவேந்தர் பாரதிதாசனின் பிறந்த நாளையொட்டி ஒரு வார காலம் தமிழ் வார விழா கொண்டாடப்பட்டது. ஏப்ரல் 29 முதல் மே 5 வரை கொண்டாடப்படும் என அறிவிக்கப்பட்டது. கவியரங்கம், கருத்தரங்கம், பாரதிதாசன் இளம் படைப்பாளர் விருது, தமிழ் இலக்கியம் போற்றுவோம், கலை நிகழ்ச்சிகள் ஆகியவை நடத்தப்பட்டது. ஆண்டுதோறும் இந்த ஒருவார காலம் தமிழ் வார விழா நடத்தப்படும்.



சுருக்கம்

தமிழ் வளர்ச்சி – மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வெளியிட்ட அறிவிப்பு – 'குறள் வாரம்' கொண்டாட அனுமதி அளித்தல் – செலவினத் தொகை ரூ.80,00,000/– 2025–2026–ஆம் நிதியாண்டிற்கு ஒப்பளிப்பு செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (தவ.1.2)த் துறை

அரசாணை (நிலை) எண்.182

நாள்.03.09.2025.
விசுவாவசு, ஆவணி – 18
திருவள்ளுவராண்டு–2056

படிக்க:–

1. அரசு செய்தி வெளியீடு எண்.2369, நாள் 31.12.2024.
2. இயக்குநர், தமிழ் வளர்ச்சித் துறை அவர்களின் கடிதம் ந.க.எண்.425/தமிழ்–3/2024, நாள்.18.06.2025.

ஆணை :-

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால், 31.12.2024 அன்று கன்னியாகுமரி மாவட்டத்தில் நடைபெற்ற திருவள்ளுவர் சிலை வெள்ளி விழா நிகழ்ச்சியில் பின்வரும் அறிவிப்பு வெளியிடப்பட்டது.

"ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் கடைசி வாரம்
'குறள் வாரம்' கொண்டாடப்படும்"

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட தமிழ் வளர்ச்சி இயக்குநரது கடிதத்தில், மேற்காணும் அறிவிப்பின்படி, டிசம்பர் திங்கள் இறுதி வாரம் பள்ளிகளுக்கு அரையாண்டுத் தேர்வு விடுமுறை என்பதால் மாணவர்களால் இந்நிகழ்ச்சியில் கலந்துகொள்ள இயலாத சூழலில், "இத்திருக்குறள் வார விழாவினை" ஆண்டுதோறும் சனவரித் திங்களில் கொண்டாட அனுமதித்து ஆணையிடப்பெறலாம் என்றும், அவ்வகையில் எதிர்வரும் 2026 ஜனவரித் திங்களில் திருக்குறள் வார விழா ஆறு மாவட்டங்களில் ஒவ்வொரு நாளும் ஒரு மாவட்டத்தில் நடைபெறும் வகையிலும், ஏழாம் நாள் விழிப்புணர்வுப் பேரணி 38 மாவட்டங்களிலும் மாவட்ட ஆட்சியர் ஒப்புதலோடு தமிழ் வளர்ச்சித் துறை துணை / உதவி இயக்குநர்கள் ஒருங்கிணைப்பில் நடத்தப்பெறும் வகையிலும் ஆணையிடப் பெறலாம் என்றும் தெரிவித்து, இதற்கான நிகழ்ச்சிநிரல் மற்றும் செலவின விவரங்களை பின்வருமாறு தெரிவித்துள்ளார்:–

குறள் வாரம் (3.9.2025)

ஆண்டுதோறும் சனவரி முதல்வாரம் குறள் வாரமாகக் கொண்டாடப்படும்.



சுருக்கம்

தமிழ் வளர்ச்சி – தமிழ் மொழி காக்க இன்னுயிர் நீத்த தமிழ்மொழித் தியாகிகளை நினைவு கூறும் பொருட்டு, 2025ஆம் ஆண்டு முதல் ஜனவரி 25ஆம் நாளினை "தமிழ்மொழித் தியாகிகள் நினைவு நாள்" என்று தமிழ்நாடு அரசின் சார்பில், கொண்டாடுதல் மற்றும் அதன் பொருட்டு விழாசெலவினங்கள் மேற்கொள்ள பொதுப்பணித்துறை மற்றும் தமிழ் வளர்ச்சித் துறைக்கு ரூ.2,00,000/– நிதி ஒப்பளிப்பு செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி(த.வ 1.2)த் துறை

அரசாணை (நிலை) எண்.141

நாள் 08.08.2024
குரோதி, ஆடி–23
திருவள்ளுவராண்டு–2055

படிக்க:–

தமிழ் வளர்ச்சி இயக்குநர் அவர்களின் கடித எண்.1038/ தமிழ்–2/2024, நாள் 07.02.2024.

ஆணை:–

இந்திமொழி திணிப்பு செய்யப்பட்ட போது அதை எதிர்த்து போராட்டத்தில் ஈடுபட்டு உயிர்த்தியாகம் செய்த தமிழறிஞர்களுக்கும், மொழிப்போராட்டக் களத்தில் கலந்து கொண்டு பல்வேறு இன்னல்களுக்கும், தாக்குதல்களுக்கும் ஆளாகி தியாகம் செய்தவர்களுக்கு மரியாதை செய்யும் விதமாக ஆண்டுதோறும் ஜனவரி 25ஆம் நாளை மொழிப்போர் தியாகிகள் வீரவணக்க நாள் என்று தமிழ்நாட்டு மக்களால் மரியாதை செய்யப்பட்டு வருகிறது. கடந்த இரண்டு ஆண்டுகளாக சென்னை, காந்தி மண்டப வளாகத்தில் உள்ள மொழிப்போர் தியாகிகள் மணிமண்டபத்தில் மலரஞ்சலி செலுத்தப்படுகிறது.

2. மேலே படிக்கப்பட்ட தமிழ் வளர்ச்சி இயக்குநரின் கருத்துருவில், தமிழ்மொழி காக்க இன்னுயிர் நீத்த தமிழ்மொழி தியாகிகளை நினைவு கூறும் பொருட்டு ஜனவரி 25ஆம் நாளை "தமிழ்மொழித் தியாகிகள் நினைவு நாள்" என்று தமிழ்நாடு அரசின் சார்பில் தமிழ் வளர்ச்சித்துறை வாயிலாக கொண்டாடலாம் என்றும், 2025ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் சனவரி 25ஆம் நாளன்று மூலக்கொத்தளம் இடுகாட்டிலுள்ள மொழிப்போர் தியாகிகளான தாளமுத்து, நடராசன் ஆகியோர் நினைவிடத்திலும் மற்றும் சென்னை, காந்தி மண்டபத்தில் உள்ள மொழித் தியாகிகள் நினைவிடத்திலும்

தமிழ்மொழித் தியாகிகள் நாள்
(8.8.2024)

இந்தித் திணிப்புக்கு எதிராக 1965 ஆம் ஆண்டு மாபெரும் மொழிப்போர் நடைபெற்றது. சனவரி 25 ஆம் நாளை இதுவரை மொழிப்போர் தியாகிகள் நாளாக திராவிட முன்னேற்றக் கழகம் அறிவித்து நினைவு கூர்ந்தது. அதனை பல்வேறு அரசியல் இயக்கங்கள் பின்பற்றி வருகிறது. அந்த சனவரி 25 ஆம் நாளை தமிழ்மொழித் தியாகிகள் நாளாக கடைப்பிடிக்க அரசாணை வெளியிடப்பட்டது.



சுருக்கம்

தமிழ் வளர்ச்சி – மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பு – டாக்டர் உ.வே.சாமிநாதையர் அவர்களின் பிறந்தநாளை ஒவ்வொரு ஆண்டும் தமிழ் இலக்கிய மறுமலர்ச்சி நாளாகக் கொண்டாட அனுமதி அளித்தல் – கருத்தரங்கம் நடத்துவதற்கான தொடர் செலவினமாக ரூ.5,00,000/- நிதி ஒப்பளிப்பு செய்தல் - ஆணை வெளியிடப்படுகிறது.

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி(த.வ 1.2)த் துறை

அரசாணை (நிலை) எண்.35

நாள் 17.02.2025
குரோதி, மாசி - 05
திருவள்ளுவராண்டு -2056

படிக்கப்பட்டவை:-

1. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை செய்தி வெளியீடு எண்.24, நாள் 10.12.2024.
2. இயக்குநர், தமிழ் வளர்ச்சித் துறை அவர்களின் கடிதம் ந.க.எண்.19154/தமிழ்-2/2024, நாள் 08.01.2025.

ஆணை:-

10.12.2024 நாளிட்ட சட்டமன்றப் பேரவையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட அறிவிப்பினை வெளியிட்டார்கள்:-

"டாக்டர் உ.வே.சாமிநாதையர் அவர்களின் பிறந்தநாள், தமிழ் இலக்கிய மறுமலர்ச்சி நாளாகக் கொண்டாடப்படும்".

2. மேற்கண்ட அறிவிப்பு தொடர்பாக, மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், தமிழ் வளர்ச்சி இயக்குநர், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 10.12.2024 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், டாக்டர் உ.வே.சாமிநாதையர் அவர்களின் பிறந்தநாள் தமிழ் இலக்கிய மறுமலர்ச்சி நாளாகக் கொண்டாடப்படும் என்ற அறிவிப்பினை வெளியிட்டார் என்றும்,

(த.பி.பா.)

தமிழ் இலக்கிய மறுமலர்ச்சி நாள் (17.2.2025)

டாக்டர் உ.வே.சாமிநாதரின் பிறந்தநாளை (பிப்ரவரி 19) ஒவ்வொரு ஆண்டும் தமிழ் இலக்கிய மறுமலர்ச்சி நாளாகக் கொண்டாட வேண்டும்.



சுருக்கம்

தமிழ் வளர்ச்சி – உலகத் தாய்மொழி நாள் – 2025 பிப்ரவரி 21–ஆம் நாளன்று கொண்டாடுதல் – தமிழ் வளர்ச்சி துறை சார்பில் மாநில அளவில் கருத்தரங்கம் நடத்திட ரூ.5,00,000/–க்கு நிதி ஒப்பளிப்பு செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி(த.வ.1–1)த் துறை

அரசாணை (ப) எண்.21

நாள் 28.01.2025
குரோதி, தை – 15
திருவள்ளுவராண்டு 2056

படிக்கப்பட்டவை:–

1. அரசாணை (நிலை) எண்.149, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (தவ 1.1)த் துறை, நாள் 19.6.2013.
2. அரசாணை (ப) எண்.162, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (தவ 1.1)த் துறை, நாள் 28.11.2023.

படிக்க:–

3. தமிழ் வளர்ச்சி இயக்குநரின் கடிதம் எண்.17884/தமிழ்–1/ 2024, நாள் 15.10.2024.

ஆணை:–

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் ஒவ்வொரு ஆண்டும் உலகத் தாய்மொழி நாளான பிப்ரவரி 21–ஆம் நாளன்று தமிழ் மொழியைப் போற்றிடும் வகையில் மாநில அளவில் கருத்தரங்கம் நடத்திட அனுமதியும் மேலும், 2013–2014–ஆம் ஆண்டில் இக்கருத்தரங்கம் நடத்திட ரூ.5,00,000/–க்கு நிதி ஒப்பளிப்பு செய்தும் ஆணையிடப்பட்டது. இவ்வரசாணைக்கிணங்க, கடந்த ஆண்டுகளில் (2014 முதல் 2024 வரை) உலகத் தாய்மொழி நாளான பிப்ரவரி 21–ஆம் நாளன்று மாநில அளவில் கருத்தரங்குகள் நடத்தப்பட்டது.

2) மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட தமிழ் வளர்ச்சி இயக்குநரின் கடிதத்தில், எதிர்வரும் உலகத் தாய்மொழி நாளான 2025 பிப்ரவரி 21–ஆம் நாளன்று காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை கருத்தரங்கம் நடத்தப்பெறலாம் என்றும், இக்கருத்தரங்கில் பல்வேறு தமிழறிஞர்களையும், மொழி அறிஞர்களையும், மொழிபெயர்ப்பாளர்களையும் பங்கேற்கச் செய்யலாம் என்றும், இக்கருத்தரங்கத்திற்கான தலைப்புகள் நேர்விற்கேற்ப கலந்தாலோசித்து முடிவு செய்து கொள்ளப்பெறும் என்றும், இக்கருத்தரங்கம் நடத்திட ரூ.5,00,000/–க்கு நிதி ஒப்பளிப்பு செய்யப்பெறலாம் என்றும், இதற்கான செலவின விவரங்கள் கீழே அட்டவணையில் கண்டவாறு அமையும் என்றும், இதற்கென 2024–2025–ஆம் ஆண்டு வரவு செலவு மதிப்பீட்டில் உலகத் தாய்மொழி நாள் விழாச் செலவினங்களுக்கு ஒதுக்கீடு

(த.பி.பா.)

உலகத் தாய்மொழி நாளாக பிப்ரவரி 21 ஆம் நாள் கொண்டாடப்பட்டு வருகிறது. தலைமைச் செயலகம் தொடங்கி அனைத்து அரசு அலுவலகங்களிலும் உலகத் தாய்மொழி நாள் உறுதி மொழி எடுக்கப்பட்டு வருகிறது.



சுருக்கம்

தமிழ் வளர்ச்சி - நவம்பர் 1-ஆம் நாளினை "தமிழ்நாடு நாள்" என கொண்டாட ஏற்கனவே வெளியிடப்பட்ட அரசாணையை ரத்து செய்தல் - மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பு - தாய்த் தமிழ்நாட்டிற்கு தமிழ்நாடு என பேரறிஞர் அண்ணா அவர்கள் பெயர் சூட்டிய ஜூலை 18 ஆம் நாளினையே இனி ஆண்டுதோறும் "தமிழ்நாடு நாள்" என்ற பெயரில் கொண்டாடுதல் - ஆணை வெளியிடப்படுகிறது.

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி(தவ 1.1)த் துறை

அரசாணை (நிலை) எண்.80 007206

நாள் 05.07.2022
சுபகிருது, ஆனி - 21
திருவள்ளுவராண்டு 2053

படிக்கப்பட்டவை:

1. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110-இன் கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பு, நாள்: 20.07.2019.
2. அரசாணை (நிலை) எண்.116, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (தவ 1.1)த் துறை, நாள்: 21.10.2019.

படிக்க:

3. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் செய்திக் குறிப்பு எண்.888, நாள் 30.10.2021.
4. தமிழ் வளர்ச்சி இயக்குநர் (மு.கூ.பொ) அவர்களின் கடித ந.க.எண். 2707/ஆமொ1/2022, நாள்: 25.04.2022.

******

ஆணை:

மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் "தனித்துவ தமிழ்நாடு உருவாக்கப்பட்ட 01.11.1956ஆம் நாளினை பெருமைப்படுத்திடும் வகையில் ஆண்டுதோறும் நவம்பர் 1-ஆம் நாள் "தமிழ்நாடு நாள்" என்ற பெயரில் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படும்" என அறிவித்து ஆணை வெளியிடப்பட்டது.

2. இந்நிலையில், தமிழ் உணர்வாளர்கள், பல்வேறு அரசியல் கட்சிகள், தமிழ் கூட்டமைப்பினர், தமிழறிஞர்கள், தமிழ் ஆர்வலர்கள் என்று பல்வேறு தரப்பினரும் நவம்பர் 1 ஆம் நாள் எல்லைப்போராட்டத்தினை நினைவுக்கூறும் நாளாகத்தான் அமையுமே தவிர தமிழ்நாடு நாளாக கொண்டாடப்படுவது பொருத்தமாக இருக்காது என்றும் மேலும், மெட்ராஸ் மாகாணம் என்று இருந்ததை மாற்றி பேரறிஞர் அண்ணா அவர்களால் 1967-ஆம் ஆண்டு ஜூலை 18-ஆம் நாள் சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றி "தமிழ்நாடு" என்று பெயரிடப்பட்ட அந்த நாள் தான் "தமிழ்நாடு நாள்" என கொண்டாடப்பட வேண்டும் என்றும் தொடர்ந்து வலியுறுத்தி வந்தனர்.

தமிழ்நாடு நாள் - (5.7.2022)

தாய்த் தமிழ்நாட்டுக்கு தமிழ்நாடு என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் *1968* ஆம் ஆண்டு ஜூலை *18* அன்று பெயர் சூட்டினார்கள். அந்த நாளை தமிழ்நாடு நாள் என கொண்டாட வேண்டும் என்று அறிவிக்கப்பட்டது. அந்த நாளில் தமிழ்நாடு நாள் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.



சுருக்கம்

தமிழ் வளர்ச்சித் துறை – 2024–2025–ஆம் ஆண்டு மானியக் கோரிக்கை அறிவிப்பு – தமிழுக்குச் செம்மொழித் தகுதி பெற்றுத் தந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளான ஜுன் திங்கள் 3–ஆம் நாளினை ஆண்டுதோறும் செம்மொழி நாள் விழாவாகக் கொண்டாடுதல் – அனைத்து மாவட்டங்களிலும் (38) பள்ளி / கல்லூரி மாணவர்களுக்குக் கட்டுரை, பேச்சுப் போட்டிகள் நடத்துதல் – 2025–2026–ஆம் ஆண்டுமுதல் ஆண்டுதோறும் ரூ.1,86,84,000/– (ரூபாய் ஒரு கோடியே எண்பத்து ஆறு இலட்சத்து எண்பத்து நான்காயிரம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்தல்– ஆணை வெளியிடப்படுகிறது.

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி(த.வ 1.1)த் துறை

அரசாணை (நிலை) எண்.205

நாள் 03.10.2024
குரோதி, புரட்டாசி–17
திருவள்ளுவராண்டு 2055

படிக்க:–

1. 2024–2025ஆம் நிதியாண்டிற்கான தமிழ் வளர்ச்சித் துறையின் மானியக் கோரிக்கை அறிவிப்பு நாள் 24.06.2024.
2. தமிழ் வளர்ச்சி இயக்குநரின் கடித ந.க.எண்.ஆ.மொ4/ 1042/ 2024, நாள் 05.07.2024.

******

ஆணை:–

2024–2025–ஆம் நிதியாண்டிற்கான தமிழ் வளர்ச்சித் துறையின் மானியக் கோரிக்கையின் போது மாண்புமிகு அமைச்சர் (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி) அவர்கள் பின்வரும் அறிவிப்பினை வெளியிட்டார்கள்:–

"2025ஆம் ஆண்டு முதல் ஜுன் திங்கள் 3–ஆம் நாளினை செம்மொழி நாள் விழா" வாகக் கொண்டாடப்படும்.

"முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் வேண்டுகோளை ஏற்று டாக்டர் மன்மோகன்சிங் தலைமையிலான அரசு 12.10.2004 அன்று தமிழைச் செம்மொழியாக அறிவித்தது. இதனைத் தொடர்ந்து முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் தலைமையில் முதன்முறையாக 2010 ஆம் ஆண்டு உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு தமிழின மக்களின் விழாவாகக் கோவையில் சிறப்பாக நடத்தப்பட்டது. தமிழுக்கு செம்மொழித் தகுதி பெற்றுத்தந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பெருமையைப் போற்றிடும் வகையில் அவர் பிறந்த நாளான ஜுன் திங்கள் 3–ஆம் நாள் தமிழ்நாடு அரசின் சார்பில் ஆண்டுதோறும் செம்மொழி நாள் விழாவாகக் கொண்டாடப்படும். மேலும், செம்மொழியின் சிறப்பையும் முத்தமிழறிஞரின் தமிழ்த்தொண்டின் பெருமையையும் மாணவர்களிடம் உணர்த்திடும்

(த.பி.பா.)

செம்மொழி நாள் - (1.8.2025)

முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த ஜுன் *3* செம்மொழி நாளாகக் கொண்டாட வேண்டும் என அறிவிக்கப்பட்டது.



சுருக்கம்

தமிழ் வளர்ச்சித் துறை - 2024-2025-ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிவிப்புகள் - உலக மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட தமிழின் மிகச் சிறந்த நூல்கள் 100 பல்கலைக்கழகங்கள் மற்றும் நூலகங்களில் இடம்பெறச் செய்தல் - திட்ட செலவினம் ரூ.2,00,00,000/-க்கு நிதி ஒப்பளிப்பு செய்து - ஆணை வெளியிடப்படுகிறது.

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (தவ 1-1)த் துறை

அரசாணை (நிலை) எண்.144

நாள் 09.08.2024
குரோதி, ஆடி-24
திருவள்ளுவராண்டு-2055

படிக்கப்பட்டது:-

1. 2024-25ஆம் ஆண்டுக்கான மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தமிழ் வளர்ச்சித் துறை தொடர்பான அறிவிப்பு, நாள் 19.02.2024.

படிக்க:-

2. தமிழ் வளர்ச்சி இயக்குநரின் கடித ந.க.எண்.1474/ வ.செ.2/2023, நாள் 23.02.2024 மற்றும் 26.04.2024.

ஆணை:-

மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் 2024-2025-ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையை சட்டமன்றப் பேரவையில் தாக்கல் செய்து பிறவற்றுடன் பின்வரும் அறிவிப்பினை வெளியிட்டார்கள்:-

"கடந்த இரு நூற்றாண்டுகளில் பல்வேறு உலக மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட தமிழ் நூல்களை விட இரண்டு மடங்கு தமிழ் நூல்களை, தற்போது இரண்டே ஆண்டுகளில் மொழிபெயர்த்திட முன்முயற்சி எடுத்துள்ளது குறிப்பிடத்தக்கது. மேலும், உலக மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட தமிழின் மிகச் சிறந்த நூல்களை உலகின் தலைசிறந்த 100 பல்கலைக் கழகங்களிலும், புகழ்பெற்ற நூலகங்களிலும் இடம்பெறச் செய்ய இவ்வாண்டு முதல் நடவடிக்கை எடுக்கப்படும். "தேமதுரத் தமிழோசை உலகெங்கும் பரவிடச் செய்யும் இம்முயற்சிக்கு 2 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்படும்."

2. மேற்காணும் அறிவிப்பினை செயல்படுத்தும் பொருட்டு, மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட தமிழ் வளர்ச்சி இயக்குநரின் கடிதங்களில், அரசுக்கு பின்வருமாறு கருத்துரு அனுப்பியுள்ளார். உலகிலேயே பழமையான மொழிகள் எனக் கருதப்படும் தமிழ், இலத்தீன், கிரேக்கம், எபிரேயம், சீனம் மற்றும் சமஸ்கிருதம் ஆகிய மொழிகளுள் சிதையாத மொழியாக அன்றுமுதல் இன்றுவரை ஒரே நிலையில்

உலக மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட தமிழின் மிகச் சிறந்த நூல்கள் 100 பல்கலைக் கழகங்கள், நூலகங்களில் இடம் பெறச் செய்ய அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.



<u>சுருக்கம்</u>

தமிழ் வளர்ச்சி – 2023–2024–ஆம் ஆண்டு மானியக்கோரிக்கை அறிவிப்பு – அனைத்து மாவட்டங்களில் உள்ள கல்லூரி மாணவர்கள் பயன்பெறும் வகையில் திங்கள் தோறும் இளையோர் இலக்கியப் பயிற்சிப் பாசறை ஆண்டுதோறும் நடத்தப்படும் என்ற அறிவிப்பை செயல்படுத்துதல் நடப்பு நிதி ஆண்டுக்கு ரூ.38,00,000/–க்கு நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்படுகிறது.

<u>தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி(தவ1.1)த் துறை</u>

அரசாணை (ப) எண். 130

நாள் 10.09.2024
குரோதி, ஆவணி –25
திருவள்ளுவராண்டு– 2055

<u>படிக்கப்பட்டவை:</u>

1. 2023–2024–ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கை அறிவிப்பு.
2. அரசாணை (நிலை) எண்.124, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (த.வ.1.1)த் துறை, நாள்.19.07.2023

<u>படிக்க:</u>

3. தமிழ் வளர்ச்சி இயக்குநரின் கடிதம் ந.க. எண். 3191/ ஆ.மொ.2/2024, நாள் 03.09.2024.

<u>ஆணை:</u>

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 06.04.2023 அன்று நடைபெற்ற தமிழ் வளர்ச்சித் துறையின் 2023–2024ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கை எண்.46–இல் மாண்புமிகு (தொழில் துறை) அமைச்சர் அவர்களால் கீழ்க்காணும் அறிவிப்பு வெளியிடப்பட்டது.

"அனைத்து மாவட்டங்களில் உள்ள கல்லூரி மாணவர்கள் பயன்பெறும் வகையில் திங்கள் தோறும் இளையோர் இலக்கியப் பயிற்சிப் பாசறை நடத்தப்படும். இதற்கென ரூபாய் 38 இலட்சம் வழங்கப்படும்"

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், அனைத்து மாவட்டங்களில் உள்ள கல்லூரி மாணாக்கர்கள் பயன்பெறும் வகையில் திங்கள்தோறும் இளையோர் இலக்கியப் பயிற்சிப் பாசறை ஆண்டுதோறும் நடத்தப்படும் என்ற அறிவிப்பைச் செயல்படுத்த 2023–2024ஆம் நிதியாண்டிற்கு ரூ.38,00,000/–க்கு நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்பட்டது.

அனைத்துக் கல்லூரிகளிலும் இளையோர் இலக்கியப் பாசறைகள் தொடங்கி நடத்தப்பட வேண்டும் என அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.



சுருக்கம்

தமிழ் வளர்ச்சி – இலக்கிய மாமணி விருது – 2025–ஆம் ஆண்டுக்கான இலக்கிய மாமணி விருது வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (த.வ.1.2)த் துறை

அரசாணை (நிலை) எண்.12

நாள். 09.01.2026.
விசுவாவசு, மார்கழி – 25.
திருவள்ளுவராண்டு–2056.

படிக்க:–

1. அரசாணை (நிலை) எண்.178, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி(த.வ.1.2)த் துறை, நாள் 14.12.2021.
2. தமிழ் வளர்ச்சி இயக்குநரின் கடிதம் எண்.தமிழ் 1/8209/ 2025, நாள் 15.10.2025.

ஆணை :–

தமிழுக்கும், தமிழ் இலக்கியத்திற்கும் வளம் சேர்க்கும் வகையில் பல்வேறு படைப்புகளைப் படைத்தும், பன்முக நோக்கில் தொண்டாற்றி வரும் தமிழ் அறிஞர்கள் மூன்று பேருக்கு ஆண்டுதோறும் "இலக்கிய மாமணி விருது" வழங்கிடவும், இலக்கிய மாமணி விருது பெறும் விருதாளருக்கு விருதுத்தொகையாக தலா ரூ.5,00,000/–ம், ஒரு சவரன் தங்கப் பதக்கம், பொன்னாடை மற்றும் பாராட்டுப் பத்திரம் வழங்கிடவும், இதற்கென செலவினத் தொகை ரூ.17,10,000/–ஐ தொடர் செலவினமாக நிதி ஒப்பளிப்பு செய்தும், விருதாளர்களைத் தெரிவு செய்திட மாண்புமிகு அமைச்சர் (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி) அவர்களை தலைவராகக் கொண்டு, தமிழ் வளர்ச்சி இயக்குநர் உள்ளிட்ட 6 உறுப்பினர்களைக் கொண்ட நடுவர்குழு அமைத்தும், மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் ஆணை வெளியிடப்பட்டது.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், 2025–ஆம் ஆண்டுக்கான "இலக்கிய மாமணி" விருதாளர்களைத் தெரிவு செய்திட 10.10.2025 அன்று குழுக்கூட்டம் நடைபெற்றது என்றும், அக்கூட்டத்தில் அ) மரபுத் தமிழ், ஆ) ஆய்வுத் தமிழ், இ) படைப்புத் தமிழ் எனும் மூன்று வகைப்பாடுகளின் அடிப்படையில் இலக்கிய மாமணி விருதிற்கு வரப்பெற்ற 55 தகுதியான விண்ணப்பங்களிலிருந்து மூன்று விருதாளர்கள் தெரிவு செய்யப்பட்டனர் என்றும், தெரிவுக்குழுக் கூட்ட உறுப்பினர்களால் இலக்கிய மாமணி விருதுக்கு தெரிவு செய்யப்பெற்ற மூன்று அறிஞர்களின் தன்விவரக் குறிப்புகள் அனுப்பி, இலக்கியமாமணி விருதாளர்களுக்கு விருதுத்தொகை ரூ.5 இலட்சம், ஒரு சவரன் தங்கப்பதக்கம், தகுதியுரை ஆகியன வழங்கியும், பொன்னாடை அணிவித்தும்

இலக்கியமாமணி விருது

தமிழ் இலக்கியத்துக்கு வளம் சேர்க்கும் மூன்று அறிஞர்களுக்கு இலக்கிய மாமணி விருது ஆண்டு தோறும் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

14

தமிழறிஞர்களுக்கு செய்த சிறப்புகள்

தமிழ் வளர்ச்சித் துறை

தமிழ் வளர்ச்சி இயக்ககம் விருதுகள்

- முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் 1971ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்ட தமிழ் வளர்ச்சி இயக்ககம் வாயிலாக தமிழுக்கு அருந்தொண்டாற்றி வரும் தமிழறிஞர்களை அடையாளம் கண்டு அவர்களைப் பெருமைப்படுத்திடும் வகையில், ஆண்டுதோறும் தைத்திங்கள் 2ஆம் நாள் திருவள்ளுவர் திருநாளன்று வழங்கப்படும் திருவள்ளுவர் விருது, பேரறிஞர் அண்ணா விருது, பெருந்தலைவர் காமராசர் விருது, மகாகவி பாரதியார் விருது, பாவேந்தர் பாரதிதாசன் விருது, தமிழ்த்தென்றல் திரு.வி.க. விருது, முத்தமிழ் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் விருது ஆகிய விருது பெறும் அறிஞர்களுக்கு வழங்கப்பட்டு வந்த விருதுத் தொகை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க ரூபாய் ஒரு இலட்சத்திலிருந்து ரூபாய் இரண்டு இலட்சமாக உயர்த்தப்பட்டு கடந்த ஐந்தாண்டுகளில் 28 அறிஞர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டுள்ளன. இதற்கென ரூபாய் 75.89 இலட்சம் விடுவிக்கப்பட்டுள்ளது.

● ஆண்டுதோறும் கபிலர் விருது, கம்பர் விருது, உ.வே.சா. விருது, சொல்லின் செல்வர் விருது, ஜி.யு. போப் விருது, உமறுப்புலவர் விருது, இளங்கோவடிகள் விருது, முதலமைச்சர் கணினித் தமிழ் விருது, அம்மா இலக்கிய விருது, காரைக்கால் அம்மையார் விருது, சிறந்த மொழிபெயர்ப்பாளர் விருது (10), சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் விருது, அயோத்திதாசப் பண்டிதர் விருது, மறைமலை அடிகளார் விருது, அருட்பெருஞ்சோதி வள்ளலார் விருது, தமிழர் தந்தை சி.பா. ஆதித்தனார் திங்களிதழ் விருது, உலகத் தமிழ்ச் சங்கத்தின் வாயிலாக வழங்கப்படும் இலக்கிய விருது, இலக்கண விருது, மொழியியல் விருது ஆகிய விருது பெறும் அறிஞர்களுக்கு வழங்கப்பட்டுவந்த விருதுத்தொகை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க ரூபாய் ஒரு இலட்சத்திலிருந்து ரூபாய் இரண்டு இலட்சமாக உயர்த்தப்பட்டு கடந்த ஐந்தாண்டுகளில் 105 அறிஞர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டுள்ளன. இதற்கென செலவினம் ரூபாய் 2 கோடியே 17 இலட்சத்து 10 ஆயிரம் ஆகும்.

● கடந்த ஐந்தாண்டுகளில் தமிழ்நாட்டின் 38 மாவட்டங்களிலும் தமிழ் வளர்ச்சிக்காக தொண்டாற்றிவரும் 114 தமிழ் ஆர்வலர்கள்/அறிஞர்களுக்கு ரூபாய் 34 இலட்சத்து 20 ஆயிரம் ஒதுக்கீடு செய்யப்பட்டு தமிழ்ச் செம்மல் விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.

● தமிழ்நாட்டிலும், இந்தியாவின் பிற மாநிலங்களிலும், வெளிநாடுகளிலும் தமிழமைப்புகளை நிறுவி தமிழ்த்தொண்டாற்றும் சீரிய அமைப்புகளுக்கு தமிழ்த்தாய் விருது ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வருகிறது. கடந்த ஐந்தாண்டுகளில் ரூபாய் 18 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு 4 தமிழ் அமைப்புகளுக்கு விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.

தமிழ் உச்சரிப்பு விருது

● ஊடகங்களில் தமிழ்ச் செய்திகளைத் தவறில்லாமலும், அழகாகவும், சரியாகவும் உச்சரிக்கும் செய்தி வாசிப்பாளர்கள் நேர்காணல் செய்பவர்கள் மற்றும் நிகழ்ச்சித் தொகுப்பாளர்களை ஊக்குவிக்கும் வகையில் ஆண்டுக்கு நான்கு பேருக்கு சிறந்த தமிழ் உச்சரிப்பு விருது வழங்கப்பெறுகிறது. இவ்விருது இதுவரை 8 பேருக்கு வழங்கப்பட்டுள்ளன. இதற்கென ரூ.9,60,000/- ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பாரதி நினைவு நூற்றாண்டு விருது (சிறப்பு விருது)

- மகாகவி பாரதி நினைவு நூற்றாண்டினை முன்னிட்டு அவரது வாழ்க்கை குறித்தும், அவரின் படைப்புகள் குறித்தும் ஆய்வு செய்த 6 அறிஞர்களுக்கு 2021ஆம் ஆண்டில் சிறப்பு நேர்வாக பாரதி நினைவு நூற்றாண்டு விருது ரூ.18.60 இலட்சம் நிதியொதுக்கீடு செய்யப்பட்டு வழங்கப்பட்டுள்ளது.

புதிய விருதுகள்

- முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 97ஆம் பிறந்தநாளை முன்னிட்டு 03.06.2021 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால், தமிழின் இலக்கியத்திற்கு வளம் சேர்க்கும் மூன்று அறிஞர்களுக்கு இலக்கிய மாமணி விருது ஆண்டுதோறும் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டு விருதாளர் ஒவ்வொருவருக்கும் விருதுத்தொகை ரூ.5 இலட்சம் மற்றும் ஒரு சவரன் தங்கப்பதக்கம் வழங்கப்பட்டு வருகிறது. 2023ஆம் ஆண்டு, மேனாள் தமிழ்நாடு முதலமைச்சர், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டினைச் சிறப்பிக்கும் வகையில், சிறப்பு நேர்வாக அவ்வாண்டில் கூடுதலாக மூன்று அறிஞர்கள் தெரிவு செய்யப்பெற்ற வகையில் ஐந்தாண்டுகளில் 15 அறிஞர்களுக்கு ரூபாய் 69.50 இலட்சம் ஒதுக்கப்பட்டு விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.

- கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி. அவர்களின் 150-வது பிறந்த நாளை முன்னிட்டு அவரது பெயரில் புதிய விருது தோற்றுவிக்கப்பட்டு விருதுத் தொகையாக ரூபாய் 5 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு 2021-ஆம் ஆண்டிற்குரிய விருது 15.11.2022அன்று வழங்கப்பட்டது.

- தகைசால் தமிழர் விருது என்ற புதிய விருது 2021ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டு விருதுத்தொகை ரூ.10 இலட்சம் வீதம் கடந்த ஐந்தாண்டுகளில் ரூ.50 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு 5 அறிஞர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

- தமிழினத் தலைவர் என்று தமிழ்நாடு மட்டுமன்றி உலகெங்கிலும் உள்ள தமிழர்களால் அன்பாக அழைக்கப்படும் தமிழ்நாடு அரசின் முன்னாள் முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் தமிழ்த் தொண்டினைப் போற்றும் வகையில் புதிய விருது தோற்றுவிக்கப்பட்டு முத்தமிழறிஞர்

கலைஞர் விருது வழங்கிட ரூபாய் 11 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் திருக்கரங்களால் 15.01.2025 அன்று விருது வழங்கப்பட்டது.

- கடந்த ஐந்தாண்டுகளில் 257 விருதுகள் வழங்கிட மொத்தம் ரூபாய் 4 கோடியே 87 இலட்சத்து 83 ஆயிரம் ஒதுக்கப்பட்டு விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.

ஆட்சிமொழித் திட்டச் செயலாக்கம்

- அரசு அலுவலகங்களில் தமிழ்மொழியை முழுமையாகப் பயன்படுத்திட அனைத்து மாவட்டங்களிலும் அரசுப் பணியாளர்களுக்கு அறிஞர்கள் குழுவால் ஆட்சிமொழி வரலாறு, சட்டம், ஆட்சிமொழிச் செயலாக்க அரசாணைகள் மற்றும் ஆட்சிமொழித் திட்டச் செயற்பாட்டில் ஏற்படும் இடர்ப்பாடுகளைக் களைதல், கணினியில் தமிழ் ஒருங்குறிப்பயன்பாடு ஆகிய பொருண்மைகளில் கடந்த ஐந்தாண்டுகளில் 190 பயிற்சி வகுப்புகள் மற்றும் ஆட்சிமொழிக் கருத்தரங்குகள் நடத்திட ரூபாய் ஒரு கோடியே 33 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

- தமிழ் ஆட்சிமொழிச் சட்டம் இயற்றப்பட்ட 27.12.1956-ஆம் நாளை நினைவுகூரும் வகையில் தமிழ் ஆட்சிமொழிச் சட்டத்தை நினைவூட்டி நடைமுறைப்படுத்த வலியுறுத்தவும் விழிப்புணர்வூட்டவும் மாவட்டங்கள் தோறும் ஆட்சிமொழிச் சட்ட வாரம் ஒவ்வோர் ஆண்டும் டிசம்பர் திங்கள் 21 முதல் 27 வரை ஒரு வாரக் காலத்திற்கு அனைத்து மாவட்டங்களிலும் நடத்தப்பட்டு வருகிறது. இதற்கென ஒரு மாவட்டத்திற்கு ரூபாய் ஒரு இலட்சம் வீதம் ரூபாய் 38 இலட்சம் செலவில் ஆண்டுதோறும் நடத்திட ஐந்தாண்டுகளில் ரூபாய் ஒரு கோடியே 90 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

நூல்கள் நாட்டுடைமை

- தமிழறிஞர்களின் படைப்புகள் உலக மக்கள் அனைவரிடமும் சென்று சேர வேண்டும் என்ற உயரிய நோக்கில் கடந்த ஐந்தாண்டுகளில் 37 அறிஞர்களின் 1802 நூல்கள் நாட்டுடைமை செய்யப்பட்டு நூலுரிமைத் தொகையாக ரூபாய் 4 கோடியே 25 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

- முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் பல்வேறு காலகட்டங்களில் எழுதி வெளிவந்த அனைத்துப் படைப்புகளும் அறிவுப் பொதுவுடைமை செய்யும் வகையில் நூலுரிமைத் தொகையின்றி நாட்டுடைமையாக்கப்பட்டுள்ளது.

சிறந்த நூல் பரிசு

- தனித்துவமிக்க தமிழ்மொழியில் சிறந்த நூல்கள் வெளிவருவதை ஊக்குவிக்கும் வகையில் ஆண்டுதோறும் 33 வகைப்பாடுகளில் சிறந்த படைப்புகளைப் படைத்த நூலாசிரியர்களுக்கும் பரிசுத்தொகையாக ரூ.30,000/-மும் அவற்றை வெளியிடும் பதிப்பகத்தாரர்களுக்கு பரிசுத்தொகையாக ரூ.10,000/-மும் வழங்கப்பட்டு வந்தன.

- 2024-2025 ஆம் ஆண்டு முதல் சிறந்த நூல்களுக்கு பரிசு வழங்கும் திட்டத்தின்கீழ் தெரிவு செய்யப்பெற்ற சிறந்த நூல்களை எழுதிய நூலாசிரியருக்கு பரிசுத்தொகை ரூபாய் 30 ஆயிரத்திலிருந்து ரூபாய் 50 ஆயிரமாகவும் அந்நூலைப் பதிப்பித்த பதிப்பகத்தாருக்கு ரூபாய் 10 ஆயிரத்திலிருந்து ரூபாய் 25 ஆயிரமாகவும் பரிசுத் தொகை உயர்த்தி வழங்கிட ஆணையிடப்பட்டு மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் அவர்களால் 07.02.2025 ஆம் நாளன்று வழங்கப்பட்டது.

- கடந்த ஐந்தாண்டுகளில் 226 நூலாசிரியர்கள் மற்றும் 221 பதிப்பகத்தார்களுக்கு பரிசுத்தொகையாக ரூபாய் ஒரு கோடியே நான்கு இலட்சத்து பதினைந்தாயிரம் வழங்கப்பட்டுள்ளது.

கனவு இல்லம் – (இலக்கியப் பிரிவு)

- முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 97வது பிறந்த நாளை முன்னிட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தோற்றுவிக்கப்பட்ட கனவு இல்லம் திட்டம் வாயிலாக, சாகித்திய அகாதெமி, ஞானபீட, தொல்காப்பியர், கலைஞர் மு.கருணாநிதி செம்மொழித் தமிழ் விருது (தமிழ்நாட்டைச் சேர்ந்தவருக்கு மட்டும்) மற்றும் நோபல் பரிசு இலக்கியம் (தமிழ் மொழி மற்றும் தமிழ் இலக்கியப் பணிகளுக்கு பெற்றிருப்பின்) ஆகிய விருதுகளைப் பெற்ற விருதாளர்களுக்கு கனவு இல்லம் திட்டத்தின்கீழ் குடியிருப்புகள்/வீடுகள் வழங்கப்படுகின்றன.

- கடந்த ஐந்தாண்டுகளில் 22 அறிஞர்களுக்கு ரூபாய் 29 கோடியே 65 இலட்சத்து 16 ஆயிரம் மதிப்பீட்டில் கனவு இல்லங்கள் வழங்கப்பட்டுள்ளன.

கனவு இல்லம் – (மொழிபெயர்ப்பு பிரிவு)

- கனவு இல்லத் திட்டத்தின் நீட்சியாக, தமிழில் சிறந்த மொழிபெயர்ப்பு நூலுக்கான சாகித்திய அகாதெமி மொழிபெயர்ப்பாளர் விருது பெற்ற விருதாளர்களுக்கு அதிக அளவாக ரூபாய் 40 இலட்சம் மதிப்பீட்டிலான இல்லம் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் 2024-2025ஆம் ஆண்டில் 10 மொழிபெயர்ப்பாளர்களுக்கு

ரூபாய் 3 கோடியே 76 இலட்சத்து 43 ஆயிரம் நிதியொப்பளிப்பு செய்யப்பட்டு குடியிருப்புக்கான ஒதுக்கீட்டைப் பெற்று பயனடைந்துள்ளனர்.

மாணவர்களுக்கான நலத்திட்டங்கள்

திருக்குறள் பரிசு

- ஆண்டுதோறும் திருக்குறள் முற்றோதல் (மனப்பாடம்) செய்யும் மாணவர்களில் 70 மாணவர்களுக்கு மட்டும் பரிசுத் தொகை வழங்குதல் என்ற உச்சவரம்பு நீக்கப்பட்டு முற்றோதல் செய்யும் அனைவருக்கும் பரிசுத் தொகை ரூ.10,000/-லிருந்து ரூ.15,000/-ஆக உயர்த்தி கடந்த ஐந்தாண்டுகளில் 720 மாணவச் செல்வங்களுக்கு ரூபாய் 97 இலட்சத்து 5 ஆயிரம் பரிசுத்தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

திருக்குறள் திருப்பணிகள் திட்டம்

- 2025ஆம் ஆண்டு முதல் திருக்குறள் திருப்பணிகள் திட்டம் வகுப்புகள், திருக்குறள் திருப்பணிகள் திட்டம் தொடங்கப்பட்டு பொதுமக்கள், பள்ளி, கல்லூரி மாணவ/ மாணவியர் பங்கேற்கும் வகையில் மாவட்டத்திற்கு மூன்று இலட்சம் செலவில் 38 மாவட்டங்களுக்கு ஒரு கோடியே பதினான்கு இலட்சம் செலவில் வழங்கப்பட்டுள்ளது. திருக்குறள் திருப்பணிகள் தொடர்பான பயிற்சி திட்டங்கள் மூலம் பொதுமக்கள், தமிழறிஞர்கள், பள்ளி / கல்லூரி மாணவ மாணவியர்கள் ஆகிய அனைவரும் திருக்குறள் தொடர்பான கருத்துகள், அதன் பொருள் ஆகியவற்றை கேட்டும் பார்த்தும் பயன்பெறுகிறார்கள்.

குறள் வார விழா

- மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 31.12.2024 அன்று கன்னியாகுமரி மாவட்டத்தில் நடைபெற்ற திருவள்ளுவர் சிலை வெள்ளிவிழா நிகழ்ச்சியில் ஆண்டுதோறும் டிசம்பர் கடைசி வாரம் 'குறள் வாரம்' கொண்டாடப்படும் என அறிவித்தார். அதன்படி 2026-ஆம் ஆண்டு முதல் ஆண்டுதோறும் சனவரி திங்கள்களில் குறள் வார விழா கொண்டாட ஆணை வெளியிடப்பட்டு 2025-2026ஆம் ஆண்டிற்கு ரூ.80,00,000/- ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

போட்டிகள்

- நாட்டிற்காகப் பாடுபட்ட தலைவர்களான மகாத்மா காந்தி, ஜவகர்லால் நேரு, அண்ணல் அம்பேத்கர், தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் கருத்துகளையும் சமூகச் சிந்தனைகளையும் இளைய தலைமுறையினரிடம் கொண்டு சேர்க்கும் வண்ணம் ஆண்டுதோறும்

அவர்களது பிறந்த நாளன்று பள்ளி / கல்லூரி மாணவர்களுக்கு பேச்சுப் போட்டிகள் நடத்திட ஆணையிடப்பட்டு, கடந்த ஐந்தாண்டுகளில் போட்டிகள் நடத்தி பரிசுத்தொகை வழங்கிட ரூபாய் 40 கோடியே 80 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

- பள்ளி மாணவர்களிடையே தமிழ் இலக்கியத் திறனை மேம்படுத்தும் வகையில் 11ஆம் வகுப்புப் பயிலும் மாணவர்களுக்கு 10ஆம் வகுப்பு தமிழ்ப் பாடத்தில் திறனறித் தேர்வு நடத்திட ஆணையிடப்பட்டு, தெரிவு செய்யப்படும் 1500 மாணவர்களுக்கு ஊக்கத்தொகையாக திங்கள்தோறும் ரூ.1,500/- வீதம் 22 திங்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கென ஒவ்வோர் ஆண்டும் தேர்வு நடத்திடவும், ஊக்கத்தொகை வழங்கிடவும் கடந்த ஐந்தாண்டுகளில் ரூபாய் 18 கோடியே 90 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

- கல்லூரி மாணவர்களிடையே தமிழ் ஆர்வத்தை அதிகரிக்க, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, பொறியியல் கல்லூரி மற்றும் மருத்துவக் கல்லூரி ஆகியவற்றில் முத்தமிழறிஞர் கலைஞர் தமிழ் மன்றங்கள் புதியதாக தோற்றுவித்து மாணவர்களிடையே தமிழ் சார்ந்த போட்டிகள் ஆண்டுதோறும் நடத்தவும் ஒவ்வொரு கல்லூரிக்கும் வைப்புத்தொகையாக ரூபாய் 5 இலட்சம் வீதம் 100 கல்லூரிகளுக்கு ரூபாய் 5 கோடி வழங்கப்பட்டுள்ளது.

- கவிஞர் தமிழ்ஒளி பாரதியாரின் வழித்தோன்றலாகவும், பாரதிதாசனின் மாணவராகவும் விளங்கி கவிதைகளைப் படைத்தவர். கவிதைகள் மட்டுமல்லாது கதைகள், கட்டுரைகள், இலக்கியத் திறனாய்வுகள், மேடை நாடகங்கள், குழந்தைப் பாடல்கள் எனப் பல இயற்றியவர். அவரின் கவிதைகள் தனித் தன்மை வாய்ந்தவை. 41 வயதில் இயற்கை எய்திய கவிஞர் தமிழ்ஒளி அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டு பள்ளி மாணவர்களின் தமிழ் ஆர்வத்தினை ஊக்குவிக்கும் வகையில் ரூபாய் 50 இலட்சம் வைப்பு நிதியிலிருந்து கவிஞர் தமிழ்ஒளியின் தெரிவு செய்யப்பட்ட கவிதைகளை ஒப்பித்தல் மற்றும் பேச்சுப்போட்டிகள் ஆண்டுதோறும் சுழற்சிமுறையில் ஒவ்வொரு மாவட்டத்திலும் நடத்திட ஆணையிடப்பட்டு முதன்முறையாக கடலூரில் 27.07.2024 அன்று ரூ.3,25,000/- செலவில் நடத்தப்பெற்ற போட்டியில் 247 மாணவர்கள் கலந்துகொண்டு வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.

உதவித் தொகை

- அகவை முதிர்ந்த தமிழறிஞர்கள், எல்லைக் காவலர்கள், தமிழறிஞர்கள் மற்றும் அவர்களின் மரபுரிமையர்களுக்கு திங்கள்தோறும் வாழ்நாள் முழுவதும் உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது. அவ்வகையில் கடந்த ஐந்தாண்டுகளில் 300 அகவை முதிர்ந்த தமிழறிஞர்கள், 1 எல்லைக் காவலர், 1 தமிழறிஞர், 49 எல்லைக் காவலர்களின் மரபுரிமையர்கள் மற்றும் 110 தமிழறிஞர்களின் மரபுரிமையர்கள் என மொத்தம் 461 பேருக்கு உதவித்தொகை ஒப்பளிப்பு செய்து ஆணையிடப்பட்டுள்ளது.

- பாரதி நினைவு நூற்றாண்டு சிறப்பு விருதுகள் வழங்கப்பட்டது. பாரதி ஆய்வாளர்கள் பெ.தூரன், ரா.அ.பத்மநாபன், தொ.மு.சி.ரகுநாதன்,இளசை மணியன் ஆகியோர் குடும்பத்துக்கு தலா மூன்று லட்சம் ரூபாய் வழங்கப்பட்டது. ஆய்வாளர்கள் சீனி விசுவநாதன், பேராசிரியர் ய.மணிகண்டன் ஆகியோருக்கு தலா மூன்று லட்சம் வழங்கப்பட்டது.

- தமிழ்த்தாத்தா உ.வே.சாமிநாதர் பிறந்த நாள் தமிழ் இலக்கிய மறுமலர்ச்சி நாளாக 10.12.2024 அன்று அறிவிக்கப்பட்டது.

● கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் 150 ஆவது பிறந்தநாளை முன்னிட்டு அவரது பெயரால் விருது அறிவித்து வழங்கப்பட்டது.

● ஊடகங்களில் தமிழ்ச் செய்திகளை தவறில்லாமலும் அழகாகவும் சரியாகவும் உச்சரிக்கும் செய்தி வாசிப்பாளர்கள், நேர்காணல் செய்பவர்கள், நிகழ்ச்சித் தொகுப்பாளர்கள் ஆகியோருக்கு தமிழ் உச்சரிப்பு விருது வழங்கப்பட்டு வருகிறது.

● அறிவியல் தமிழறிஞர் மணவை முஸ்தபா பிறந்த நாள் அரசு விழாவாக கொண்டாட உத்தரவு. (ஏப்ரல் 16)

● கவிக்கோ அப்துல் ரகுமான் பிறந்த நாள் அரசு விழாவாகக் கொண்டாட உத்தரவு. (நவம்பர் 9)

● கவிஞர் தமிழ் ஒளிக்கு நூற்றாண்டு விழா கொண்டாடப்பட்டது. தஞ்சை தமிழ் பல்கலைக் கழக வளாகத்தில் சிலை அமைக்கப்பட்டது.

● கல்லூரி மாணவர்களுக்கு மாதம் தோறும் இலக்கிய பயிற்சித் திட்டமாக இளையோர் இலக்கியப் பாசறை தொடங்கப்பட்டுள்ளது.

● கவியரசு முடியரசனாருக்கு காரைக்குடியில் மணிமண்டபம்.

● சென்னையில் மொழிஞாயிறு தேவநேயப் பாவாணருக்கு சிலை.

● சங்கப் புலவர் கணியன் பூங்குன்றனாருக்கு சிவகங்கை மாவட்டம் மகிபாலன்பட்டியில் சிலை.

● சங்கப் புலவர் கபிலருக்கு கள்ளக்குறிச்சி மாவட்டம் திருக்கோவிலூரில் நினைவுத் தூண்

● மொழிபெயர்ப்பாளர் ஜமதக்கனிக்கு இராணிப்பேட்டை மாவட்டத்தில் நினைவுத் தூண்.

● 1938 ஆம் ஆண்டு மொழிப்போர் தியாகிகளான நடராசன் - தாலமுத்து ஆகியோர் அடக்கம் செய்யப்பட்ட மூலக்கொத்தளம் நினைவகம் 34 லட்சம் மதிப்பீட்டில் பொலிவேற்றம் செய்யப்பட்டது.

● மொழிப்போர் தியாகி சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக் கழக மாணவர் இராசேந்திரன் நினைவகம் சீரமைக்கப்பட்டு வருகிறது.

● தமிழ்த் தென்றல் திரு.வி.க. பிறந்த தண்டலத்தில் அவர் பெயரிலான நூலகம் சீரமைக்கப்பட்டு வருகிறது.

● தமிழ் எழுத்தாளர்கள், அறிஞர்கள் பிறந்தநாளன்று கூட்டங்கள், விழாக்கள்.

● உலக மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட தமிழின் மிகச் சிறந்த நூல்களை உலகின் தலைசிறந்த 100 பல்கலைக்கழகங்களிலும், புகழ்பெற்ற நூலகங்களிலும் இடம்பெறச் செய்யப்பட்டு வருகிறது.

● தமிழ்ச் செம்மொழியின் பெருமையினையும் தமிழ்ப் பண்பாட்டின் சிறப்பினையும் உலகத் தமிழ் இளைஞர்களிடையே பரவிடச் செய்திடும் நோக்கத்தில், தமிழ்நாடு மட்டுமன்றி இதர இந்திய நகரங்களில் உள்ள பள்ளிகள் மற்றும் உலகத் தமிழ் மையங்களில் பயின்றிடும் மாணவர்களும் பங்கேற்கும் வகையில், கணினிவழித் தேர்வு முறையில் உலகத்தமிழ் ஒலிம்பியாட் போட்டி இனி ஆண்டுதோறும் நடத்தப்படும். உலக அளவிலான வெற்றியாளர்கள் மட்டுமன்றி, தேசிய மற்றும் மாநில அளவில் சிறப்பிடம் பெற்றிடும் மாணவர்களுக்குமான மொத்தப் பரிசுத் தொகையாக ஒரு கோடி ரூபாய் வழங்கிச் சிறப்பிக்கப்படும்.

● பள்ளி மாணவ. மாணவியர்கள் தமிழ்மொழி இலக்கியத் திறனை மேம்படுத்திக் கொள்ளும் வகையில் ‘திறனறித் தேர்வு’ நடத்தப்படும். இத்தேர்வின் மூலம் ஆண்டுதோறும் 1500 மாணவர்களைத் தெரிவு செய்து மாதம் ரூ.1500/- வீதம் இரண்டு ஆண்டுகளுக்கு வழங்கப்படும். இதில் 50 விழுக்காடு அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும்.

● கல்லூரி மாணவர்களிடையே தமிழ் ஆர்வத்தை அதிகரிக்க, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, பொறியியல் கல்லூரி மற்றும் மருத்துவக் கல்லூரி ஆகியவற்றில் முத்தமிழறிஞர் கலைஞர் மாணவர் தமிழ் மன்றங்கள் புதியதாக தோற்றுவித்து மாணவர்களிடையே தமிழ் சார்ந்த போட்டிகள் ஆண்டுதோறும் நடத்தவும் ஒவ்வொரு கல்லூரிக்கும் வைப்புத்தொகையாக ரூபாய் 5 இலட்சம் வீதம் 100 கல்லூரிகளுக்கு ரூபாய் 5 கோடி வழங்கப்பட்டுள்ளது.

● அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களிடையே தமிழ்மொழியின் தொன்மை. இலக்கண இலக்கியங்கள் மீது பற்றும் ஆர்வமும் ஏற்படுத்தும் வகையிலும் தமிழுக்குத் தொண்டாற்றிய தமிழறிஞர்களைப் பற்றி அறிந்து கொள்ளும் வகையிலும் தமிழ்நாடு முழுவதிலும் அரசு உயர்நிலைப் பள்ளி மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் உள்ள தமிழ் மன்றத்தை மேம்படுத்தி ஒவ்வொரு பள்ளியிலும் தமிழில் ஆண்டுக்கு மூன்று தமிழ்க் கூடல் நடத்திட உத்தரவிடப் பட்டுள்ளது.

● செந்தமிழ் இலக்கியம் மற்றும் இலக்கண நூல்களான தொல்காப்பியம் முதல் முத்தொள்ளாயிரம் வரையிலான 41 செவ்வியல் நூல்கள் தமிழ் ஆர்வலர்களுக்கும். இளையத் தலைமுறையினருக்கும். பொது மக்களுக்கும்

எளிதாகவும், ஒரே இடத்தில் தொகுப்பாகவும் கிடைக்கப்பெற வழிவகை செய்யப்படும்.

● தொல்காப்பியம் முதல் முத்தொள்ளாயிரம் வரையிலான 41 செவ்வியல் நூல்களில் இப்பட்டியலில் இடம் பெற்றுள்ளன.

● தமிழ்-இந்தோ-ஐரோப்பிய வேர்ச்சொல் களஞ்சியம் ஒப்பீட்டு அகராதி, @ -1 & *An Encyclopaedia of Tamil and Indo-European Etymological Comparative Dictionary, Volume 1* வெளியிடப்பட்டுள்ளது.

குறள் நெறிபரப்புதல்

● திருவள்ளுவர் சிலை வெள்ளிவிழா நிகழ்ச்சி கன்னியாகுமரியில் நடைபெற்றது. வெள்ளிவிழா நிகழ்ச்சி கொண்டாட 1.38 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. திருக்குறள் நெறிபரப்பும் 22 தகைமையாளர்களுக்கு சிறப்புப் பரிசுத் தொகையாக 25 ஆயிரம் ரூபாயும் நற்சான்றும் வழங்கப்பட்டது.

● சென்னை வள்ளுவர் கோட்டம் புதுப்பிக்கப்பட்டது.

● திருக்குறளுக்கு ஐக்கிய நாட்டுக் கல்வி அறிவியல் பண்பாட்டு அமைப்பின் (யுனெஸ்கோ) அங்கீகாரம் பெறும்பொருட்டு அறிவிப்பு வெளியிடப்பட்டது.

● தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறையின் 26.09.2024ஆம் நாளிட்ட அரசாணை (வா) எண்.167இல் ஆணையிட்டவாறு தமிழ் வளர்ச்சி இயக்குநர் இந்திய அரசின் பண்பாட்டு அமைச்சகத்தின் இணைச் செயலாளரைச் சந்தித்து திருக்குறள் சான்றாவணத்தை 26.09.2024ஆம் நாளில் ஒப்படைத்தார்.

● திருக்குறளை யுனெஸ்கோவின் *Memory of the World Register*”இல் பதிவு செய்திடும் பொருட்டு பரிந்துரை படிவம் தயார் செய்வதற்கான வல்லுநர் ஒருவரை 6 மாத காலத்திற்கு நியமனம் செய்வதற்கு நிதி ஒதுக்கீடு செய்து ஆணையிடப்பட்டது. (அரசாணை (நிலை) எண்.41, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை, நாள்.25.02.2025)

● திருக்குறளை உலக நினைவுப் பதிவேட்டில் (*Memory of the World Register*) பதிவு செய்வதற்கான பணிகளை தமிழக அரசின் சார்பில் மேற்கொள்வதற்கு ஏதுவாக ஒருங்கிணைப்புக் குழு அமைத்து அதன் தலைவராக திரு. ரெ. பாலகிருஷ்ணன், இ.ஆ.ப.(பணிநிறைவு) அவர்கள் நியமனம் செய்யப்பட்டார். (அரசாணை (நிலை) எண்.235, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை, நாள்.10.11.2025)

● திருக்குறள் சான்றாவணங்கள் ஒன்றிய அரசின் கலை மற்றும் பண்பாட்டு அமைச்சகத்தின்கீழ் இயங்கும் இந்திராகாந்தி தேசிய கலை மையத்தின் துணையோடு 30.11.2025அன்று யுனெஸ்கோவின் “*Memory of the World Register*” என்ற வலைத்தளத்தில் திருக்குறளுக்கு உலகநூல் அங்கீகாரம் பெறுவதற்காகப் பதிவேற்றம் செய்யப்பட்டது.

● 2027ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களுக்குள் திருக்குறள் சான்றாவணங்கள் யுனெஸ்கோவின் உலக ஆவண பாரம்பரியப் பட்டியலில் (*World Documentary Heritage*) தகுதியான இடம்பெறும் எனக் கருதப்படுகிறது.

● டெல்லி ஜவஹர்லால் நேரு பல்கலைக் கழகத்தில் திருவள்ளுவர் சிலை அமைக்க 66 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

● திருக்குறள் திருப்பணிகள் திட்டப்படி வகுப்புகள் பள்ளி மற்றும் கல்லூரி மாணவ மாணவியருக்கு நடத்தப்பட்டது.

● திருக்குறள் திருவிழா குறள் வாரம் தொடர்பான சிறப்புக் காணொலியையும் நிகழ்வுக்கான பதாகையும் 10.1.2026 வெளியிடப்பட்டது.

● 2026 சனவரி மாதம் குறளாசிரியர் மாநாடு, திருக்குறள் வினாடி வினா, திருக்குறள் இசை நாட்டிய நிகழ்ச்சி, போட்டிகள், குறள் ஒப்புவித்தல் போட்டி, ஓவியப் போட்டி நடத்தப்பட்டு குறள் வாரம் கொண்டாடப்பட்டது. இதற்காக 80 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

15

தமிழ் அரசு -தமிழ் இனத்தின் அரசு

திராவிட முன்னேற்றக் கழகம் ஆறாவது முறையாக ஆட்சி அமைத்த போது, "இது ஒரு கட்சி அரசு அல்ல, ஒரு இனத்தின் அரசு" என்று நான் குறிப்பிட்டேன். அப்படித்தான் செயல்படுத்திக் காட்டி இருக்கிறேன்.

இந்திய அளவில் மட்டுமன்றி உலக அளவிலும், இரும்புத் தாதுவிலிருந்து இரும்பை பிரித்து எடுக்கும் தொழில்நுட்பம் தமிழ் நிலப்பரப்பில் இருந்தே அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது என்பதை அண்மைக்கால அகழாய்வு முடிவுகள் மூலமாக உலகுக்கு அறிவித்துள்ளோம்.

தமிழ்நாட்டின் பல்வேறு இடங்களில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வுகளில் வெளிக்கொணரப்பட்ட

தொல்பொருட்களை அழகுற காட்சிப்படுத்த, இந்த அரசு உரிய நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

உலகத் தரத்திலான கீழடி மற்றும் பொருநை அருங்காட்சியகங்கள் ஏற்கெனவே பொதுமக்களின் பார்வைக்காக திறந்து வைக்கப்பட்டு பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளன. மேலும், கீழடி திறந்தவெளி அருங்காட்சியகம் அண்மையில் மக்கள் பார்வைக்காக திறந்து வைக்கப்பட்டது.

தஞ்சாவூரில் மாபெரும் சோழர் அருங்காட்சியகம், கங்கைகொண்டசோழபுரத்தில் அருங்காட்சியகம், ஈரோடு மாவட்டத்தில் நொய்யல் அருங்காட்சியகம், இராமநாதபுரம் மாவட்டத்தில் நாவாய் அருங்காட்சியகம் சென்னை எழும்பூரில் உள்ள அரசு அருங்காட்சியகத்தில் ஒரு புதிய வெண்கல அருங்காட்சியகம் மற்றும் சிந்துவெளி நாகரிக அருங்காட்சியகக் கூடங்கள், திருவண்ணாமலையில் தமிழர் பண்பாட்டு அருங்காட்சியகம் என மொத்தம் 285 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பெற உள்ளன.

முக்கடல் சங்கமிக்கும் குமரிமுனையில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் வான்புகழ் வள்ளுவருக்கு அமைக்கப்பட்ட திருவுருவச் சிலைக்கு 'பேரறிவுச் சிலை' எனப் பெயரிட்டு அறிவித்தேன்.

உலகப் பொதுமறையாம் திருக்குறளை உலகெங்கும் கொண்டு சேர்க்கும் இலக்குடன், ஐக்கிய நாடுகள் அவையினால் அங்கீகரிக்கப்பட்ட அனைத்து அலுவல் மொழிகளிலும் மொழிபெயர்ப்பு செய்திடும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

மனோன்மணியம் சுந்தரனார் இயற்றிய, நம் உயிருக்கு நிகரான தமிழ்த்தாய் வாழ்த்தை தமிழ்நாட்டின் மாநிலப் பாடலாக இந்த அரசு அறிவித்துள்ளது.

தமிழ்மொழியின் பல்துறை வளங்களைச் செழிக்கச் செய்வதற்கான தொலைநோக்குத் திட்டங்களை இந்த அரசு நிறைவேற்றி வருகிறது.

பிறமொழி ஆதிக்கங்களில் இருந்து தமிழைக் காத்தல் மற்றும் செழுமையான தமிழ்ப் படைப்புகளைத் தொடர்ந்து உருவாக்குதல் ஆகிய பணிகளை பெரும் முனைப்போடு இந்த அரசு மேற்கொண்டு வருகிறது.

பிறமொழித் திணிப்பால் தமிழுக்கு வந்த இடரினை எதிர்த்துப் போராடி, தங்கள் இன்னுயிர் ஈந்த மொழித்தீரர்களின் தியாகத்தைப் போற்றும் வண்ணம், ஜனவரி திங்கள் 25 ஆம் நாளை 'தமிழ்மொழித் கடைப்பிடித்திட தியாகிகள் நாளாக ஆணையிட்டுள்ளது.

பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்களை தமிழில் மொழிபெயர்த்தல் போன்றே தமிழில் வெளியான சிறந்த நூல்களை ஆங்கிலம் முதலான அயல்மொழிகளில் மொழிபெயர்த்து வெளியிடும் முயற்சியான 'திசைதோறும் திராவிடம்' திட்டத்தின் கீழ், இதுவரை 74 நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

மருத்துவம், பொறியியல் முதலான கல்விசார் அறிவூட்டும் நூல்களைத் தமிழில் மொழிபெயர்த்து வெளியிடும் 'முத்தமிழறிஞர் மொழிபெயர்ப்புத் திட்டத்தின்' கீழ், 160 நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

பெரியாரின் சிந்தனைகளை அயல்மொழிகளில் வெளியிடும் முயற்சியில், இதுவரை ஆங்கிலம், பிரெஞ்சு, அரபு, இந்தி, குஜராத்தி முதலான 21 மொழிகளில் பல்வேறு நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

அண்ணல் அம்பேத்கர் அவர்களின் படைப்புகளை எளிய தமிழில் மொழி பெயர்த்து மக்கள் பதிப்பாக வெளியிட முடிவு செய்து, இதுவரை 27 தொகுதிகள் வெளியிடப்பட்டுள்ளன.

தேமதுரத் தமிழோசை அகிலமெலாம் ஒலிக்கும் வகையில், 42 உலக நாடுகளில் 202 தொடர்பு மையங்களை ஏற்படுத்தி, அவற்றின் மூலம் மாணவர்களை ஒருங்கிணைத்து இணையவழித் தமிழ்க்கல்வி வழங்கப்படுகிறது.

கணித்தமிழை வளர்த்தெடுக்கும் முன்னோடி முயற்சியாக, இந்தியாவில் வேறெந்த மாநிலமும் செய்திராத வகையில், பன்னாட்டுக் கணித்தமிழ்க் கருத்தரங்கம் வெற்றிகரமாக நடத்தப்பட்டது.

தமிழ்நாட்டின் பண்பாட்டுச் செழுமையையும், பழமையான கலைகளையும். நமது மக்களுக்கு. குறிப்பாக இளைஞர்களுக்கு அறிமுகப்படுத்திட பல்வேறு முயற்சிகளை இந்த அரசு மேற்கொண்டு வருகிறது.

தமிழ்நாட்டின் கலைகளை வெளிமாநிலங்களிலும் வெளிநாடுகளிலும் பரப்பிட கலைநிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன. கடந்த ஐந்து ஆண்டுகளில், நாட்டுப்புறக் கலைஞர்களுக்கு வாய்ப்பளிக்கும் வகையில், ‘சங்கமம் நம்ம ஊரு திருவிழா’ சென்னை மற்றும் தமிழ்நாட்டின் முக்கிய நகரங்களில் நடத்தப்பட்டு வருகிறது. ‘சமத்துவப் பொங்கல் விழா’ சிறப்பாக அனைத்து மாவட்டங்களிலும் நடத்தப்படுகிறது.

அயல்நாடுகளில் வாழும் தமிழர்களின் சாதனை, பண்பாடு மற்றும் தாயகத்துடனான பிணைப்பைப் போற்றும் வகையில், ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 11 மற்றும் 12 ஆகிய தேதிகளில் அயலகத் தமிழர் தினம் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. இவ்வாண்டு, ‘தமிழால் இணைவோம் தரணியில் உயர்வோம்’ என்ற கருப்பொருளில் அயலகத் தமிழர் தினம் கொண்டாடப்பட்டது.

வெளிநாடுகளிலும், பிற மாநிலங்களிலும் வசிக்கும் தமிழர்களின் குழந்தைகளுக்கு தமிழ்மொழியைக் கற்பிக்கும் இந்த அரசின் முயற்சிகளால், இதுவரை 8 பிற மாநிலங்கள் மற்றும் 14 அயல்நாடுகளில் மையங்கள் தொடங்கப்பட்டு 1,400 மாணவர்கள் பயனடைந்துள்ளனர்.

தமிழ் ஆசிரியர்கள் மற்றும் கலைஞர்களைக் கொண்டு. தமிழ்மொழியையும், நாட்டுப்புறக் கலைகளையும் பயிற்றுவிக்கும் நேரடி வகுப்புகள் நடத்திடுவதற்கான பணிகளும் 10 கோடி ரூபாய் செலவில் நடைபெற்று வருகின்றன.

தமிழ்ப் பண்பாட்டின் வேர்களுடன் அயலகத் தமிழர்களின் தொடர்பைப் புதுப்பிக்கும் வகையில், ஒவ்வொரு ஆண்டும் வெளிநாட்டில் குடியேறிய பழந்தலைமுறைகளைச் சார்ந்த தமிழர்களில் 200 மாணவர்கள் தேர்வு செய்யப்பட்டு, அவர்களுக்கான பண்பாட்டு பயணத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதுவரை இத்திட்டத்தின் கீழ், ரீயூனியன் தீவுகள், தென் ஆப்ரிக்கா, உகாண்டா, பிஜி, இந்தோனேஷியா, மொரிஷியஸ், ஆஸ்திரேலியா. மாலத்தீவுகள், கனடா, மியான்மர், மலேசியா, இலங்கை, பிரான்சு, ஜெர்மனி, நார்வே மற்றும் அமெரிக்கா ஆகிய 16 நாடுகளில் இருந்து 292 மாணவர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் அனைவரும் 15 நாட்களுக்கு தமிழ்நாட்டின் முக்கிய சுற்றுலா, வரலாற்று மற்றும் பண்பாட்டுச் சிறப்புமிக்க இடங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டு, தமிழ்நாட்டின் கலை, பண்பாடு குறித்து விளக்கப்பட்டதன் மூலம், தத்தமது நாடுகளில் தமிழ்நாட்டின் பண்பாட்டுத் தூதுவர்களாக அவர்கள் செயல்பட்டு வருகிறார்கள்.

இனம் - மொழி - நாடு - சாதி - மதம் - ஆண் பெண் - ஏழை பணக்காரன் - கருப்பு சிவப்பு - என எந்தப் பாகுபாட்டுக்கும்இடமளிக்காமல் உலக உயிர்கள் அனைத்துக்கும் பொதுமறை தந்த வான்புகழ் வள்ளுவரை தந்த மண்ணுக்கு நாம் சொந்தக்காரர்கள்.

ஊரைத் தாண்டிய ஊரும் - உலகமும் எப்படி இருக்கும் என்று அறியாக் காலத்தில் யாதும் ஊரே யாவரும் கேளிர் என்று அனைவரையும் ஒற்றைச் சொந்தமாகக் கருதி இலக்கியம் படைத்த கணியன் பூங்குன்றனைக் கொடுத்த புகழுக்குச் சொந்தக்காரர்கள் நாம்!

கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளோடு முன் தோன்றிய மூத்த இனம் தமிழினம்.

என்று பிறந்தது கண்டுபிடிக்க முடியாத முன் தோன்றிய உலக மொழிக்கு சொந்தக்காரர்கள் நாம்.

அத்தகைய தமிழ்ப் பெருமையை, தமிழினத்தின் பெருமையை நிலைநாட்டும் அரசாக திராவிட முன்னேற்றக் கழக அரசு செயல்பட்டு வருகிறது.

தமிழாய்ந்த தமிழ் மகன் தான் தமிழ்நாட்டின் முதலமைச்சராய் வருதல் வேண்டும் என்றார் புரட்சிக்கவிஞர் பாரதிதாசன். நான் தமிழாய்ந்த தமிழ் மகன் அல்ல, தமிழை உயிராய்க் கருதும் தமிழ் மகன்.

தமிழரசு
வெளியீடு